விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 16 ஞாயிற்றுக்கிழமை (02.11.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 318

## 100 வாக்குகளால் பட்ஜெட் வெற்றி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் நேற்று பாராளுமன்றத்தில் அதி கூடிய வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

இதையடுத்து மலையகத்தில்

24ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தல் ஒதுக்கீடு ரூபா 360 கோடி

(கொழும்பு)

2015 ஆண்டுத் தேர்தலுக்காக 360 கோடி ரூபாயை தேர்தல்கள் திணைக்களம் ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த தேர்தலுடன் ஒப்பிடுகையில் 160 கோடி ரூபாய் அதிகமாகும். தேர்தல்கள் திணைக்களம் 2015 தேர்தலுக்கான

23ஆம் பக்கம் பார்க்க....

## பாப்பரசர் விஜயம் அழுத்தம் இல்லை

(கொழும்பு)

பாப்பரசர் பிரான்ஸிஸ்ஸின் இலங்கை வருகையை தடுக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் இருந்து தமக்கு எவ்வித அழுத்தங்களும் கொடுக்கப்படவில்லை என்று இலங்கை கத்தோலிக்க சபை தெரிவித்துள்ளது

23ஆம் பக்கம் பார்க்க....

## 7 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்

(கொழும்பு)

நாட்டில் தொடர்ந்து நிலவும் சீரற்ற வானிலையை அடுத்து 7 மாவட்டங்களில் மண்சரிவு மற்றும் கற்பாறைகள் சரிந்து விழக் கூடிய அபாயம் நிலவுவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நுவரெலியா, களுத்துறை, பதுளை,

23ஆம் பக்கம் பார்க்க....

# சட்ட அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்

## ஐ.நா மனித உரிமை ஆணையகம் தெரிவிப்பு

(ஜெனிவா)

***காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணை செய்துவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு போதியளவு சட்ட அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகம் அறிவித்துள்ளது.***

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகம் அண்மையில் இலங்கை தொடர்பான கால மீளாய்வு அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

இந்த அறிக்கையில், காணாமல் போனவர்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு உரிய அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

வசாரணைகளை உரிய முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான மனித, தொழில்நுட்ப மற்றும் நிதி வளங்கள் உரிய வகையில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

பலவந்தமான கடத்தல்கள் காணாமல் போனவர்கள் தொடர்பில் துரித கதியில் விசாரணை நடத்தி, குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டியது அவசியமானது என தெரிவித்துள்ளது.

சுயாதீன பொறிமுறைமை ஒன்றின் மூலம் விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது அவசிய மானது எனவும் ஐ.நா மனித உரிமை ஆணையகம் சுட்டிக் காட்டியுள்ளது. (செ-11)

## பதுளை நிலச்சரிவில் 38 பேரே அகப்பட்டனர்?

### எண்ணிக்கையை குறைக்கும் அதிகாரிகள்

(கொழும்பு)

பதுளை மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் இறந்தவர்கள் அல்லது காணாமல்போனவர்களின் மொத்த எண்ணிக்கையை அரச அதிகாரிகள் 38 ஆக குறைத்திருக்கிறார்கள்.

தோட்ட தொழிலாளர்களின் குடியிருப்புக்கள் நிலச்சரிவில் அகப்பட்ட நிலையில், அதில் பாதிக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் தம்மிடம் தற்போது இருப்பதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

நிலச்சரிவு ஏற்பட்டு நான்கு நாட்கள் ஆகும் சூழ்நிலையில், தற்போது மீட்புப் பணிகளில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அவற்றுக்கு பொறுப்பான இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் மனோ பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்றுச் சனிக்கிழமையன்று புதையுண்ட பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என

24ஆம் பக்கம் பார்க்க....

## கொஸ்லந்தை மண்சரிவு

### பெண் ஒருவரின் சடலம் மீட்பு



(கண்டி)

கொஸ்லந்தை மீரியபெத்த பகுதியில் ஏற்பட்ட மண் சரிவில் உயிரிழந்த மற்றுமொரு பெண்ணின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டபோது இந்த சடலம் மீட்கப்பட்டதாக மத்திய பாதுகாப்புப் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மனோ பெரேரா கூறினார்.

மீரியபெத்த பகுதியில் நேற்று சீரான வானிலை நிலவியதால் மீட்புப் பணிகள் தொடர்ந்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

24ஆம் பக்கம் பார்க்க....

# ஐரோப்பிய நீதிமன்று முன்பாக இலங்கை அடிபணிய மாட்டாது

## புலிகள் மீதான தடை நீக்கத்திற்கு பீரிஸ் சீற்றம்



(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கம் தொடர்பான வழக்கில் தம்மையும் ஒரு தரப்பாக சேர்க்குமாறு ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் கேட்கமாட்டோம் எனவும், அது ஐரோப்பிய நீதிமன்றத்தின் முன்பாக எமது நாடு அடிமைப்பட்டு விடும் நிலை ஏற்படும் என்றும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற 2015ஆம் ஆண்டுக்கான

24ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தலில் மகிந்தவை ஆதரிப்பதா? இடதுசாரி கட்சிகள் இடையே பிளவு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை இரத்துச் செய்யாது ஜனாதிபதித் தேர்தலை நடத்த தயாராகி வருவதால், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இடதுசாரி கட்சிகளில் பிளவுகள் ஏற்படும் நிலைமை உருவாகியுள்ளது.

இதனால், புதிய இடதுசாரி அமைப்பொன்று உருவாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பது என லங்கா சமசமாஜக் கட்சியின் மத்திய செயற்குழுவில் மேலதிக வாக்குகளினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனால், அந்த கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் இடையில் பிளவு ஏற்பட்டுள்ளது.

மகிந்தவை ஆதரிக்கும் தீர்மா

23ஆம் பக்கம் பார்க்க....



SISIL WORLD
உங்கள் சமையலறையை அழகுபடுத்த
Sisil, Sharp, Moulinex, Tefal, Krups, Kenwood
தரும் சமையல் உபகரணங்கள்
- 120 நாள் வட்டி இன்றிய கொடுப்பனவு
- விசேட விலைக் கழிவுகள்
- 3வருட நீடித்த உத்தரவாதம்
- விசேட பரிசுப்பொருட்கள்

இல-106,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் 021-2219291
இல-125,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம் 021-2242335
இல-17/3,கண்டி வீதி,கிளிநொச்சி 021-2283755
(C-8928)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அனர்த்தத்தில் அநாதரவான சிறுவர்களை உறவினர்களிடம் ஒப்படைக்க முடியாது

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

மீரியபெத்தை மண்சரிவு காரணமாக தாய் தந்தையரை இழந்த பிள்ளைகள் எக்காரணம் கொண்டும் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட மாட்டார்கள் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் நெருங்கிய உறவினர்களாக இருந்தாலும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட மாட்டார்கள். ஏனெனில் கடந்த சுனாமி அனர்த்தத்தின் போது பெற்ற அனுபவத்தைக் கொண்டே இந்த முடிவை அரசாங்கம் எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதுவரை கணக்கெடுப்பின்படி 75 பிள்ளைகள் தாயையும் தந்தையையும் இழந்து நிர்க்கதியாகி நிற்கின்றனர். இவர்களது உறவினர்கள் என்று சொல்வோரும், நெருங்கிய உறவினர்கள் என்று சொல்வோரும் இந்தப் பிள்ளைகளை கேட்கின்றனர். எனினும் அவர்களிடம் இப்பிள்ளைகளை ஒப்படைக்கப்படமாட்டார்கள்.

75 பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு தங்குமிட வசதிகள் உள்ளிட்ட எதிர்காலம் அனைத்துக்கும் அரசாங்கமே பொறுப்பேற்கும். எவரது அனுசரணையையும் பெற்றுக் கொடுக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை. எனினும் இந்தப் பிள்ளைகளுக்காக உதவி வழங்க விரும்புகிறவர்கள் வழங்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

53 வீடுகளிலுள்ள சுமார் 330 பேர் புதையுண்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. எனினும் எடுக்கும் சரியான தரவுகளை கூற முடியவில்லை என செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போது அமைச்சர் தெரிவித்தார். (செ-11)

# புலிகளுக்காக ஒருபோதும் மண்டியிடப் போவதில்லை

## ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்திற்கு உயிரூட்டும் வகையில் ஐரோப்பாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டாலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் முன்னிலையில் மண்டியிடப்போவதில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

"நமக்காக நாம்" இராணுவ வீடமைப்புத் திட்டத்தின்கீழ் புத்தளம் மாவட்டத்தில் அமைக்கப்பட்ட வீடுகளை இராணுவத்தினரிடம் ஒப்படைக்கும் வகையில் நேற்று பிற்பகல் ஆனமடுவ பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

சுமார் மூன்று தசாப்தங்களாக இலங்கையில் இருந்த பயங்கரவாதம் வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டாலும் வெளிநாடுகளில் இன்னும் அதன் நிழல் செயற்படுவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாடுகள் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் தாய்நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் உருவாக இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார். (செ-11)

# ரயில் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்திற்கிடையில் ரயிலில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால், வடக்கு ரயில் பாதையில் மேலதிகமாக ரயில்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க உள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அடுத்த மாதம் முதல் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான ரயில்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என ரயில் திணைக்களத்தின் வணிக அத்தியட்சகர் எஸ். சிசிர குமார தெரிவித்துள்ளார்.

கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்திற்கிடையிலான பயணிகளின் எண்ணிக்கைக்கு அமைய தற்போது சேவையில் ஈடுபடுத்தப்படும் ரயில்கள் போதுமானதல்ல என்றும் அவர் கூறியுள்ளார். (செ-11)

# இனங்களின் உறவுப்பாலத்தை முப்படையினர் கட்டியெழுப்புகின்றனர்

## பட்டமளிப்பு விழாவில் மகிந்த உரை



(கொழும்பு)

இனங்களுக்கு இடையில் நல்லுறவை கட்டியெழுப்பும் பாலமாக முப்படையினர் மாறியுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கொத்தலாவல பாதுகாப்பு கல்லூரியின் 24-வது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முப்படையில் உள்ள பலர் இன்று உயர் கல்வியை கற்று வருகின்றனர். அவர்கள் டிப்ளோமா, பட்டப்படிப்பு மாத்திரமல்லது பட்டப்பின்படிப்பையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால், எதிர்காலத்தில் மிகவும் முன்னேறிய வலுவான புத்திசாலித்தனமான இராணுவம் உருவாகும். அது அறிவை ஆயுதமாக கொண்ட முப்படையாக இருக்கும்.

நாட்டின் பாதுகாப்புக்காக முப்படையினரால் பலவற்றை செய்ய முடியும். தற்போது இனங்களுக்கு இடையில் நட்புறவை கட்டியெழுப்ப முப்படையினர் பல பணிகளை ஆற்றி வருகின்றனர்.

வடபகுதி பிள்ளைகளை தெற்கிற்கும் தென் பகுதி பிள்ளைகளை வடக்கும் கொண்டு செல்கின்றனர். வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் விளையாட்டு அணிகளும் பரிமாறிக்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல்வேறு கலாசார வேலைத்திட்டங்களை படையினர் முன்னெடுத்து வருகின்றனர்.

முப்படையினர் இன்று இனங்களுக்கு இடையில் நல்லுறவை வளர்க்கும் பாலமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றனர் எனவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (செ-11)

அனைவருக்கும்
நவீன சகாப்தத்தின் நுழைவாயில்
நவீன தொழில்நுட்பமும் கணினிப் பயன்பாடும் பற்றிய ஒரு நாள் இலவசக் கருத்தரங்கு
09.11.2014 ஞாயிறு 9.00 - 2.30
BCAS யாழ் வளாகத்தில் (16,பருத்தித்துறை வீதி.)
தலைப்புகள்
- புதிய தொழில்நுட்பங்களுக்கோர் அறிமுகம் Introduction to emerging technologies
- நவீன தொடர்பாடலின் பரிணாமவளர்ச்சி Evolution of communication
- கைப்பேசிப் பயன்பாடும் பாதுகாப்பும் Mobile application and security
- நவீன வாழ்வில் கணினியின் பங்கு The role of computer in modern life
- கணினி அமைப்பும் பிரயோகமும் Computer assembling & application
- சமூகவலைத் தளங்கள் பற்றிய விழிப்புணர்வு Awareness of social networks
- இணையம் மூலம் படங்களைப் பகிர்தல் Online photo & video sharing
- இணையம் வழி பொருள்கள் வாங்கல் Online shopping
- இணையத்தின் ஊடாகப் பணக்கொடுப்பனவும் பாதுகாப்பும் Online payments & security gateways
- தகவல் தொழில்நுட்பத்தைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துதல் How we have to use Technology with security
திரு.கி.யாதவராஜன் B.Sc. (Computer Eng.)
திரு.ச.திஷோபன் B.Sc. (Computer Eng.)
திரு.க.கேசிகன் B.Sc. (Computer Eng.)
திரு.பா.சபேஷன் B.Sc. (ICT)
திரு.க.உதயகுமார் B.E (Electronic & Communication Eng.)
ஆகியோரடங்கிய எமது விரிவுரையாளர் குழாத்தின் வழிகாட்டலில் விரிவுரைகளும் விளக்கங்களும் எமது தகவல் தொழிநுட்ப மாணவர்களால் (HND) வழங்கப்படும்.
அறிவுத்தேடல்/ஆர்வம் உள்ள எவரும் கலந்து பயன்பெறலாம்
மட்டுப்படுத்தப்பட்ட இருக்கைகளே உண்டு
நவம்பர் 4ஆம் திகதிக்கு முன் பதிவு செய்யவும்.
மேலதிக விபரங்களுக்கு நேரில் அல்லது 0777102131
அன்புடன் அழைக்கும்,
BCAS CAMPUS யாழ் வளாகம்.
(சி-8943)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

தொடர்ந்தும் உங்கள் சேவையில்....
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021 222 5392
WESTERN UNION MONEY TRANSFER
(சி-8929)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் பார்த்தீபன் பாவரசன்
யா/மகாஜனக் கல்லூரி
160 புள்ளிகள்



செல்வி இளஞ்சுரேஸ் தமிழ்மதி
கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்
163 புள்ளிகள்
வாழ்த்துவோர்:
அநாதரட்ச்சகன் குடும்பம்
(சி-8944)

கண்ணீர் அஞ்சலி



திருமதி
அரியமணி பொன்னுத்துரை
யாழ்ப்பாண பல்கலைக்கழக விலங்கியல் துறையில் ஆய்வுகூட உதவியாளராக கடமை புரியும் பொ.விமலானந்தன் அவர்களின் தாயார் திருமதி அரியமணி பொன்னுத்துரை அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த கவலை அடைகிறோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்
விலங்கியல்துறை உத்தியோகத்தர்கள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
(8216)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Study & Work in Singapore**
**Hotel Management**
Learn & Earn up to Rs. 70,000/- Month
அடிப்படை தகைமை O/L மட்டும்
**Study & Work in Malaysia** / **Study & Work in Canada**
**Study in UK**
UK, EUROPE VISA
Study / Visit / Business Visit / Tourist / Special Occasions
flex Institute
Step Towards a Bright Future
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777 761 346
Tel : 2364157 Fax : 2501766
www.flexinstitute.lk
(8203)
FLEX Graphic

## மானிய உரம் விநியோகம்

தனங்கிளப்பு கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கான இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட மானிய உரம் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் கைதடி கமநல சேவை நிலையத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே தனங்கிளப்பு கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகள் அனைவரையும் மானிய உரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கமக்கார அமைப்பின் தலைவர் எஸ்.சதானந்தம் தெரிவித்துள்ளார். (இ-7-37)

## தொழில் வாய்ப்புக்கள்

உங்கள் வயதிற்கேற்ப 18–50 வயது ஆண்,பெண். 18000/=, 38000/=. தொழில் தன்மையின் அடிப்படையில் *கொழும்பை அண்மித்த* பிரதான தொழிற்சாலைகள் (ஜேம், டொபி, பிஸ்கட், கோடியல்) தனியார் துறைமுகம், விமான நிலையம்,கனரக, மென்ரக சாரதிகள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், இலக்ரீசன், தச்சு, Hotel, Restaurant மற்றும் மேசன், கையுதவியாளர்கள் உட்பட பல வேலைவாய்ப்பு. உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் (நண்பர்கள், குழுக்கள் தம்பதியினராகவும் ஏற்றுக்கொள்ளப்படுவர்)

தொடர்பு: 0776838231, 0771116770 (சி-8927)

## காணி விற்பனைக்கு

மல்லாகம் நீதிமன்றத்திற்கு முன்பாக குளமங்காலுக்கு போகும் வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது. (8170)

தொடர்பு: 011 4949234

## காணி விற்பனைக்கு

அளவெட்டி 768 பஸ்போகும் வீதியில் "ஜெயா பிறஸ்" சந்தியிலிருந்து ஏறத்தாழ 50 யார் தொலைவில் காணி உள்ளது. (8170)

தொடர்பு: 011 4949234

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் திருமதி குமாரசாமி தங்கரத்தினம்

பிறப்பு: 20.09.1949 இறப்பு: 03.10.2014



உரும்பிராயூர் பதியினிலே உதயமான தங்கரத்தினமே
செம்மண் பதியினிலே செழுமையாய்
வாழ்ந்து வந்த அன்புக்கினிய அம்மாவே!
பிள்ளைகள் இல்லறத்தில் இன்பமாய் களித்து வரும் நாளிகையில்
எம் முன்னே சேர்ந்து நின்று அறிவுரை பல கூறிடுவீர்!
அன்பான அப்பாவும் அன்று
சென்ற பாதை தனில் நீர் கூடிச் சென்று விட்டீர்!
பிள்ளைகள் நாங்கள் இங்கே கதி கலங்கி நிற்கின்றோம்
மீதி வழி தெரியாமல் தலைமைகள் இல்லாத பிள்ளைகளாய்
ஊர் கூடி அழைக்குதம்மா தரணியிலே
நாம் கூடி நிற்கின்றோம் இவ்வேளை நீர் இன்று இல்லையம்மா!
சுவை மிகுந்த உணவுகளை
வகைவகையாய் தந்திடும் அம்மாவே!
எங்கு சென்று வந்தாலும் கண்விழித்துக் காத்திருந்து
உணவளிக்கும் அம்மாவே! நீர் சென்ற பாதையை
அளவிட முடியாத நீர் சென்ற தூரத்தை
விழி வைத்து காத்திருக்கும் பிள்ளைகளாய்...?
அம்மா...! அம்மா...!! அம்மா...!!!

மரணச்சடங்கில் நேரிலும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்த
அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உரும்பிராய் வடக்கு,
ச.ச.சமூக நிலையம், உரும்பிராய். (8208)

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இராசி பலன்

2.11.2014
(ஐப்பசி 16, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை- 5.59 மணிக்கு
தசமி பிற்பகல் 1.42 மணிவரை
சதயம் முன்னிரவு 9.18 மணிவரை
இராகுகாலம்-4.34-6.04 மணிவரை
சுபநேரம் 9.04-10.34 மணிவரை

வளவன்

**மேடம்:** நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், புகழ் கூடும் நாள்.

**இடபம்:** சொத்துக்களால் ஆதாயமுண்டு, தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள், நண்பர்களின் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**மிதுனம்:** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், பகையொன்று நட்பாகலாம், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.

**கடகம்:** சஞ்சலங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கலாம், கௌரவமான நாள், உடல் நலனில் முன்னேற்றமுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கன்னி:** பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், மருத்துவச் செலவுகள் குறையும், கூட்டு முயற்சி வெற்றிதரும், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**துலாம்:** புதிய பொருட்கள் வாங்கும் வாய்ப்புண்டு, எதிர்பார்ப்புகள் நிறைவேற பெரிதும் பாடுபடுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சிந்தனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்:** எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, பெற்றோர் மீது பிரியம் கூடும், பாராட்டும் புகழும் கூடும் நாள், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**தனுசு:** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள் கல்யாணக் கனவுகள் நனவா கலாம், மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும், பெரியோரின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** மனதில் இனம்புரியாத சிந்தனைகள் தோன்றும், புதிய பொறுப்புக்களால் வேலைப் பளு அதிகரிக்கலாம், சுப செலவுகள் அதிகரிக்கும், பெரியோர் சந்திப்புண்டு.

**மீனம்:** தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், தூரதேசச் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசசார்பற்ற இணையமும் உதவ முன்வருகை


யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் பதுளை மாவட்டத்தின் கொஸ்லந்தை மீரிய பெத்த பிரதேசத்தில் ஏற்பட்ட பாரிய மண்சரிவு அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவது தொடர்பாக நேற்றைய தினம் நடைபெற்ற விசேட நிறைவேற்றுக்குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் மட்டுமல்ல அவர்களின் அன்றாட செலவிற்கு பணம் தேவைப்படுகிறது. எனவே இத்தேவையினை ஓரளவு பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் இணையத்தில் அங்கத்துவம் வகிக்கும் அரச சார்பற்ற நிறுவன ங்களிடமிருந்து நிதி சேகரித்து கிடைக்கும் நிதியை சிறு தொகையாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக நிதியுதவி வழங்க விரும்பும் நலன்விரும்பிகள் எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக இணையத்தின் நிதி நிர்வாக உத்தியோகத்தரிடம் கையளித்து பற்றுச் சீட்டை பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக தகவல்கள் தேவையெனில் 02122 23668 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சேகரிக்கப்படும் நிதி எதிர்வரும் 10ஆம் திகதி நேரடியாக பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று வழங்குவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இடரில் உயிர் நீத்த மக்களுக்கும் பாதிக்கப்பட்ட முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கும் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறு வனங்களின் இணையம் தமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது. எனவே தமது நிதி உதவிகளை உடனடியாக வழங்குமாறு நிதி நிர்வாக உத்தியோகத்தர் கே.எம். இராஜேந்திரன் அறிவித்துள்ளார். (இ-7)




## பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்கு கியுடெக் கரித்தாஸ் நிறுவனம் முன் வருகை

(கொழும்புத்துறை)

பதுளை கொஸ்லந்தையில் மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி பொருட்களை வழங்க யாழ். கியுடெக் கரித்தாஸ் நிறுவனம் முன் வந்துள்ளது.

மேற்படி நிறுவனத்தின் சமூகக் குழுக்களின் ஏற்பாட்டில் பதுளைப் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற பாரிய மண்சரிவில் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

இதில் அத்தியாவசிய பொருட்களான உலர் உணவு வகைகள், பால்மா பெட்டிகள் என்பன வழங்கப்படவுள்ளன.

இத்தகைய கருணை செயற்பாட்டில் யாழ். மக்களும் இணைந்து கொண்டு தம்மால் முடிந்த உதவிப் பொருட்களை வழங்க முடியும்.

இத்தகைய செயற்பாட்டினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எம்மால் முடிந்த உதவிப் பொருட்களை வழங்க முடிந்தது என ஒவ்வொரு உள்ளங்களும் நினைக்கக்கூடும் என மேற்படி நிறுவனத்தின் சமூகக் குழுக்கள் தெரிவித்தன.

எனவே இச்செயற்பாட்டில் இணைந்து கொள்ள விரும்புவோர் இயங்குநர் கியுடெக் கரித்தாஸ் நிறுவனம், மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொண்டு தமது உதவும் பொருட்களை வழங்க முடியும் என மேற்படி நிறுவன சமூகக்ககுழுக்கள் மேலும் அறிவித்துள்ளன. (இ-7-51)

## ஆங்கில ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல்

யாழ். மாவட்ட பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆரிய குளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளதால் அனைத்து ஆங்கில ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் ஆசிரியர் சங்க பகுதி நேர ஆங்கில பிரிவு அறிவித்துள்ளது.

அத்துடன் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் தத்தமது ஆவண ங்களுடன் சமூகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (இ-7)

# மின்சாரம் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்

## வடமராட்சி கிழக்கு காலனி மக்கள் கோரிக்கை

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு அம்பன் வைத்தியசாலை பின் வீதியில் அமைந்துள்ள காலனி மக்கள் மின்சாரத்தினைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த கால யுத்தத்தில் இடம் பெயர்ந்து சென்ற இக்கிராம மக்கள் யுத்தத்தின் பின்னர் மீளவும் கடந்த 2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் குறித்த கிராமத்திற்கு மீள் குடியேறி வசித்து வருகின்றனர்.

60 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள் குடியேறி வாழ்ந்து வருகின்ற இக்கிராமத்தில் மின்சார இணைப்பு இணைக்கப்படாமையினால் இக்கிராம மக்கள் இருள் சூழ்ந்த நிலையில் கடந்த 4 ஆண்டுகள் வாழ்ந்து வருகின்றனர்.

நாட்டின் அபிவிருத்தி முன்னேற்றம் எல்லா வழிகளிலும் இடம்பெற்று வருகின்ற நிலையில் தமது பிரச்சினைக்கு இதுவரை எந்தவொரு தீர்வும் கிடைக்கவில்லை என சுட்டிக் காட்டியுள்ளனர்.

இம்மக்கள் இக்கிராமத்தில் மீள் குடியேறிய காலத்தில் வடக்கின் வசந்தம் கிராமிய மின் எழுச்சி திட்டத்தின் ஊடாக இலவச மின்சாரத்தினை வழங்குவதாக அரச அதிகாரிகளும் அரசியல் தலைவர்களும் இம்மக்களிடையே தெரிவித்துள்ளனர் என இம்மக்களால் தற்போது தெரி விக்கப்படுகிறது.

ஆனால் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

வாய் வார்த்தைகளால் மட்டும் கூறிய அரச அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைவர்களும் தற்போது தம்மை கை விட்டுள்ளதாக இம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் குடும்பங்களுக்கு இலங்கை இராணுவத்தினரால் நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய குடும் பங்கள் அரைநிரந்தர வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இங்குள்ள மக்கள் அரச அதிகாரிகளினதும் அரசியல் தலைவர்களினதும் வாய் வார்த்தைகளை நம்பி 18 குடும்பங்களுக்கு மேல் தமது வீட்டு மின்னிணைப்புகளை பூர்த்தி செய்து மின்சார சபையினரிடம் அதற்குரிய விண்ணப்ப படிவங்களை ஒப்படைத்துள்ளனர்.

இதன் பின்னர் மின்சாரம் வழங்குவதற்கு முதல் கட்ட வேலையாக பருத்தித்துறை மின்சார சபையினர் அனைத்து வீடுகளுக்குமான மின்சார வேலைகளை முடித்துள்ளதாக இந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வேலைகள் முடிவடைந்து 3 மாதங்கள் ஆகியும் இதுவரைக்கும் மின்சாரம் கிடைப்பதற்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாததையிட்டு தாம் மிகுந்த வருத்தம் அடைவதாகவும் தெரி விக்கும் மக்கள் அம்பன் காலனி கிராமத்திற்கு விரைவாக மின்சாரத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7-64)




## அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி அனுதாபம்

மலையகத்தில் வாழும் நலிந்த, வறிய மக்கள் அன்றாடம் தமது வாழ்க்கையை கொண்டுநடத்தவே அல்லல்படும் இன்றைய சூழலில் இயற்கையின் சீற்றம் அவர்களின் உயிர்களைக் காவுகொண்டு பெரும் அழிவை ஏற்படுத்தியுள்ளது

உயிரிழந்தவர்கள், காணாமற் போனவர்கள், மண்சரிவுக்குள் புதையுண்டு இன்றுவரை மீட்கப் படாதவர்கள் என்று பாதிக்கப்பட்ட குடும்பங்கள் யாவரினதும் துன்பங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியினராகிய நாமும் பங்காளர்களாக கலந்து கொள்கிறோம். இந்த மக்களுக்கு எமது அனுதாபம் மாத்திரம் எதனையும் செய்யப் போவதில்லை. அவர்களது வாழ்வைச் சீர்படுத்த வேண்டும்.


1911ஆம் ஆண்டிலிருந்து இந்த அனர்த்தம் பற்றிய ஆலோசனை கூறப்பட்டதென்பது போதிய காரணமாகாது. வறிய, நலிந்த மக்கள் ஆலோசனைகளை ஏற்று நடப்பார்கள் என்பது பொருத்தமற்றது. அதனைச் செயற்படுத்த அவர் களுக்கு வசதியிருக்க வேண்டும். வேறு இடத்தில் குடியேற்றியிருக்க வேண்டிய பொறுப்பை உரியவர்கள் யாராயினும் தட்டிக் கழித்தமை பெருந்தவறாகும். இதற்குச் சாட்டுச் சொல்லித் தப்ப முடியாது!

எனினும் தவறுகளிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். இனிவருங்காலத்திலாவது இதனைத் தடுக்க முடியும் என நம்புகிறோம். மண் சரிவுகள் ஏற்படக் கூடிய பகுதிகளாகக் கண்டு கொள்ளப்பட்ட 6 மாவட்டங்க ளிலும இருக்கக்கூடிய மக்களை உடனடியாக வெளியேற்றி வேறு இடங்களில் குடியமர உரிய நடவ டிக்கை எடுக்க வேண்டியது அரசின் கடமையாகும். தொடர்ந்தும் கால நிலை சீரற்றிருப்பதால் உரிய கவனமெடுத்து மேலதிக அனர்த்தங்கள் ஏற்படாமல் மக்களைப் பாதுகாக்க வேண்டு மென சம்பந்தப்பட்டவர்களை தமிழர் விடுதலைக் கூட்டணி வேண்டுகிறது என அக்கட்சியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-5)

## ஆத்ம சாந்தி பிரார்த்தனை இன்று நல்லை ஆதீனத்தில்

மலையகத்தில் மண்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நலனுக்காகவும் இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனமும் சின்மயா மிஷனும் இணைந்து ஒழுங்கமைத்துள்ள பிரார்த்தனை நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன ஆலயத்தில் இடம்பெறவுள்ளதால் அனைத்து இந்து அமைப்புக்களும் இப்பிரார்த்தனை நிகழ்வில் பங்கு பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. (இ-5)

# கஷ்டப்பட்ட மாணவனின் கல்விக்கு உதவி




யாழ் மாவட்டத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுள் ஒருவரான அளவெட்டி அருணோதயா கல்லூரியை சேர்ந்த பரமேஸ்வரன் சஞ்சயை பாராட்டி புலம்பெயர் தமிழரான சீறிதாசனின் அனுசரணையில் ஜேர்மனி உதவும இதயங்கள் அமைப்பின் ஊடாக துவிச்சக்கரவண்டி ஒன்றையும் ஒரு தொகுதி பணமும் வலி வடக்கு பிரதேசசபை துணை தவிசாளர் ச.சஜீவனால் வழங்கப்பட்டது.

இம் மாணவன் மிகவும் கஷ்டப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவன். இதுவரை காலமும் கல்வி கற்பதற்கு மின்சார வசதிகள் அற்ற நிலையிலும் தற்காலிக வீட்டில் இருந்து கல்வி கற்று வலி வடக்குக்கு பெருமை சேர்த்துள்ளான். இம்மாணவனின் விடாமுயற்சியும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் முயற்சியின் விளைவாக இம்மாணவன் சாதனை படைத்துள்ளான்.

இம்மாணவனின் எதிர்காலத்திலும் கல்வியில் சாதனை படைக்க வலிவடக்கு பிரதேச சபை துணை தவிசாளரால் இம்மாணவனுக்கு மாதாந்த படிப்பு செலவுக்காக ரூபா 2000 ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மின்சாரசபையிடமும், பிரதேச சயலகத்திடமும் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க மின்சாரமும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் அருணோதயா கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன், புலம் பெயர் தமிழரான சீறிதாசன், மாணவனின் தாய், பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் ஆகியோர்களும் கலந்து சிறப்பித்தனர். (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**இருள்கள் அகன்று உங்கள் வாழ்க்கை ஒளி ஒளிர நிரந்தர தொழில்**

கொழும்பை அண்மித்த பல பிரதேசங்களிலுள்ள நவீன ஏற்றுமதி தொழிற்சாலைகளான ஜேம்/கோடியல்/டொபி/pvc/பிளாஸ்டிக்/காமெண்ட்/கிளவுஸ்/மின்உபகரணம்/பால்மா/யோகட் மற்றும் பல தயாரிப்புகளுக்கு லேபல் பொதியிடல் தரம்பிரித்தல் களஞ்சிய பிரிவு உற்பத்தி பிரிவுக்கு 17-50 ஆண்-பெண் தேவை. உணவு+தங்குமிடம் குறைந்த விலைகளில் வசதி செய்து தரப்படும். சம்பளம் 20000/= 25000/= 35000/= மேல் (நண்பர்கள்/குழுக்கள்/தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்) மேலதிக விபரங்களுக்கு தொடர்பு

**0777889185/ 0778128194**

(8926)



ஜெய்குருதேவ்

**பூஜ்ய ஸ்ரீ.ஸ்ரீ.ரவிசங்கர் குருஜியினால் வடிவமைக்கப்பட்ட**
**வாழும் கலைப் பயிற்சி- I**
**(பிராணாயாமம், யோகா, சக்திவாய்ந்த சுதர்சனக்கிரியா)**



மேற்படி பயிற்சிக்கான அறிமுகவுரை 03.11.2014 திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு நல்லூர் மகேஸ்வரன் மண்டபத்தில் நடைபெறும். பயிற்சி தொடர்ந்து 6 நாட்கள் காலை, மாலை வேளைகளில் நடைபெறும்.

**தொடர்பு:-077 932 2970, 077 918 6343**
**வாழும் கலை அமைப்பு யாழ். நிலையம்.**

(சி-8934)


**பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்**

சம்பத் வங்கியால் கடந்த மாதம் 24 ஆம் திகதி அன்று யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் யா/செங்குந்த இந்துக் கல்லூரி மாணவர்கள் இரண்டாமிடத்தைப் பெற்று வெற்றியீட்டியுள்ளனர்.

இப் போட்டியில் உயர்தர வகுப்பு வர்த்தகப் பிரிவைச் சேர்ந்த மாணவர்களான, சி.டமிலன், பா.விசாகன், டோ.கவிராஜ், பி.துவாரகன், ஞா.கிருசாந்தன், சி.சிவப்பிரியன் ஆகியோர் கலந்து கொண்டு கல் லூரிக்குப் பெருமை தேடித்தந்ததுடன் 8 ஆயிரம் ரூபா பணப்பரிசையும் வெற்றிக் கிண்ணத்தையும் சுவீகரித்துக்கொண்டனர்.

இப்போட்டியில் 26 பாடசாலைகள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்

காலை 9.00 - பி.ப 1.00

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104,4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 8117

(8890)



**விற்பனைக்கு**

நம்பர் 1 நியூ பேனாட் (New Bernards) கிறீன் வலி (Green Valli) ஊர்க் கோழிக் குஞ்சுகள் நம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:-
செல்வரெட்ணம்
077 8448295,
077 6176370

(8199)



**கல்யாண மாலை**

இவர்களுக்கு **மணமகள் தேவை**

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 30 1/4
உயரம்: 183 cm
தகைமை/தொழில்: LLB/முகாமையாளர்
தொ.இ: B/3753

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 23 3/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்
தொ.இ: B/3755

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 41 3/4 செவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L (தபால் ஊழியர்)
தொ.இ: B/3756

பிறப்பு: 1975 RC
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L (லண்டன் PR)
தொ.இ: B/3757

இவர்களுக்கு **மணமகன் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 12 1/4 செவ் 12 இல்
உயரம்: .172 cm
தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்
தொ.இ: G/3772

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 42
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: பட்டதாரி
தொ.இ: G/3777

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 47 செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L (வங்கி காசாளர்)
தொ.இ: G/3779

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 48 செவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L (ஆசிரியர்)
தொ.இ: G/3782

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



# லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

5 Chapel Road, West Ealing, Middlesex, W13 9AE
Charity No – 1014409
Email: info@ammanealing.org Web: www.ammanealing.org
Tel: 0044 208 8100 835 Fax: 0044 208 8400 485

**எமது ஆலயத்தில் கீழ்வரும் பணி நிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.**



பணிநிலை : 1 ஆலய சிவாச்சாரியார்
Hindu religious workers with non pastoral role

**தகைமைகள்:-** விண்ணப்பதாரி சிவாச்சாரியார் பட்டம் (குருக்கள்) பெற்றிருக்க வேண்டும். தமது பணிக்காலங்களில் சிவாச்சாரியாராகப் பணியாற்றியிருக்க வேண்டும். இறுதி 5 வருடங்கள் ஆலயக் குருக்களாகப் பணி செய்திருக்க வேண்டும்.

**கடமைகள்:-** ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூசைகள் செய்தல்.

**வேதனம்:-** பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகைமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்வதுடன் அடியார்கள் வழங்கும் தட்சணை பங்கிடப்பட்டு வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிபு திகதி:- 30.11.2014**

பணிநிலை : 2 நாதஸ்வர, தவில் கலைஞர்கள்
Hindu Religious (Musicians) workers

**தகைமைகள்:-** நாதஸ்வர, தவில் மேதைகளுக்கான சான்றிதழ்களைக் கொண்டிருப்பதுடன் தமது பிராய காலத்திலிருந்து இப்பணியைச் செய்து கொண்டிருப்பவராக இருக்க வேண்டும்.

**கடமைகள்:-** ஆலய பூசைக்காலங்களில் மங்கள இசை இசைத்தல்

**வேதனம்:-** பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது.

**விண்ணப்ப முடிபு திகதி:- 30.11.2014**

**ஆலய இணையத்தளத்தில் (www.ammanealing.org) பணிநிலை வேண்டுகைக்கான விண்ணப்பப்படிவம் தரவேற்றப்பட்டுள்ளது. விருப்புடையோர் அதனைப் பதிவிறக்கி, பூர்த்தி செய்து ஆலய முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டுகின்றோம்.**

(8190)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 தமிழக மீனவர்கள் விவகாரம் மோடி - மகிந்த விரைவில் பேச்சு

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் ஐந்து பேருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டுள்ள நிலையில், தமிழகத்தில் இடம்பெற்று வரும் போராட்டங்களுக்கு இந்திய மத்திய அரசாங்கம் உடனடியான தீர்வை காண வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் சட்டமுறைப்படி 1976ஆம் ஆண்டு முதல் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்திய மீனவர்களின் நிலை தொடர்பில் இந்திய அதிகாரிகள் ஏற்கனவே இலங்கையின் ஜனாதிபதி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தநிலையில் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை காத்மண்டுவில் இடம் பெறவுள்ள சார்க் மாநாட்டில், இது குறித்து இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவார் என்று இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஒருநாட்டின் சட்டத துறை தொடர்பில் இந்தியாவுக்கு தெளிவாக தெரிந்திருக்கும் என்று அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே 2010ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கையில் கைதாகியுள்ள இந்தியக் கைதிகளை இந்தியாவுக்கு மாற்றம் செய்து அங்கு சிறைப்படுத்த முடியும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# என்னை அரசாங்கத்தில் இருந்து விரட்டும் தேவை சிலருக்கு உள்ளது

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து தன்னை விரட்டும் தேவை சிலருக்கு இருப்பதாக கல்வி சேவைகள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து என்னை வெளியேற்றும் தேவை சிலருக்கு இருப்பதை நான் புரிந்து கொண்டிருக்கின்றேன்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒருவரின் இணையத்தளத்தில் நான் உட்பட 4 பேர் அரசாங்கத்தில் இருந்து வெளியேற போவதாக செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து செல்லும் எந்த எண்ணமும் எனக்கில்லை.

அத்துடன் துமிந்தவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து விரட்டுவது சுலபமான காரியமும் அல்ல எனவும் துமிந்த திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 120 |
| தக்காளி | 160 | 140 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 100 | 100 | 100 |
| கரட் | 160 | 80 | 160 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 70 | 60 | 80 |
| வாழைக்காய் | 70 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 70 | 70 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 |
| பாகற்காய் | 170 | 160 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 60 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 60 |
| பயற்றங்காய் | 60 | 120 | 140 |
| லீக்ஸ் | 200 | 140 | 160 |
| பீற்றூட் | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 60 | 80 | 120 |
| போஞ்சி | 160 | 180 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 130 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 40-45 |
| இராசவள்ளி | 160 | 120 | — |

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைச்சர்கள் ஒரு மாத சம்பளத்தை வழங்க வேண்டும்

## ஐக்கிய தேசியக்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

மண் சரிவால் பாதிக்கப்பட்ட கொஸ்லாந்து மீரியபெத்தை தோட்ட மக்களுக்கு, அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது ஒரு மாத சம்பளத்தை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளின் பிரதம அமைப்பாளர் ஜோன் அமரதுங்க இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர உரையாற்றிய பின்னர், கருத்து வெளியிட்ட ஜோன் அமரதுங்க மண் சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களை எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இந்தநிலையில் குறித்த மக்களுக்கு எதனையாவது நாம் செய்தாக வேண்டும் என்ற அடிப்படையில், அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது ஒரு மாத சம்பளத்தை அந்த மக்களுக்கு வழங்க வேண்டும் என்று கோருவதாக தெரிவித்தார்.

இதில் யாரும் அரசியல் இலாபம் தேட முனையக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும் இதற்கு பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் அமரவீர, எதிர்க்கட்சியினரின் உதவிகளின்றியே அந்த மக்களின் நிவாரணங்களுக்கு அரசாங்கத்திடம் நிதி இருப்பதாக குறிப்பிட்டார். (இ-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 181


தமிழ்மதி மானசா





டொறின் மன்மதநாயகம்




துஷா துஷா




இரத்தினசபாபதி பாலராஜா




விபூசன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருகலை மலையின் 'சம்ஹாரம்'

புதையுண்டதால் மனங்கள், ரணங்களாய்... இங்கே வதையுண்ட நாங்கள், நடைப்பிணங்களாய் ஆனோம். பல தடைகள் மீறியே பெத்த உயிர்கள்...மீரியாபெத்த மண்ணுக்குள் சங்கமாகிவிட்டன. அந்த உறவுகளுக்கு, கண்ணீர் காணிக்கைகள் என்ற கண்ணரஞ்சலி பதாகைகளுக்கு வடுவாகிவிட்டது கொஸ்லாநத, மீரியாபெத்த பேரழிவு.

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி முழு நாட்டின் கரையோரங்களையும் புரட்டி கவிழ்த்துப்போட்ட கடற்கோள் இயற்கை சீரழிவு. அதற்கு பின்னர் 2009 ஆம் ஆண்டு வடக்கில் முன்னெடுக்கப்பட்ட பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எதிரான மனிதாபிமான நடவடிக்கைகள் வரையும் கல்நெஞ்சான மனங்கள், கொஞ்சம் கொஞ்சம் இளகிக் கொண்டு வருகையில் பேருகலை மலையும் தாண்டவமாடி விட்டது.

**கொஸ்லாந்தை மீரியா பெத்த!**


ஊவா மாகாணம் பதுளை மாவட்டத்தில் உள்ள ஹல்துமுல்லை பிரதேச சபைக்கு உட்பட்ட பெருந்தோட்டமாகும். இந்த தோட்டத்துக்கு பதுளை, ஹப்புத்தலையிலிருந்து இருவழிகளில் செல்லலாம். இந்த தோட்டத்தை மஸ்கெலிய பிளான்டேசன் நிர்வாகமே நிர்வகிக்கின்றது.

வழமையாகவே, தோட்டங்கள் காலை வேளையிலேயே சுறுசுறுப்பாகிவிடும். 29 ஆம் திகதி புதன்கிழமையன்றும் அப்படித்தான். கடும் குளிருக்கு மத்தியில் தட்டியெழுப்பப்பட்ட சின்னஞ்சிறுசுகள் 7 மணிக்கு முன்னதாகவே இருந்ததை சாப்பிட்டுவிட்டு முன்பள்ளிகளுக்கும் பாடசாலைகளுக்கும் சென்றுவிட்டனர். அதிகாலை வேளையில், வேலைகளுக்கு செல்ல வேண்டியவர்களும் சென்றுவிட்டனர்.

அடுத்த சங்குக்கு... முன்னர் வேலைக்கு சென்று விட வேண்டும் என்று எண்ணி பெரட்டு தப்பை (ரொட்டிக்கு மலையகத்தில் வைக்கப்பட்டுள்ள பட்டப்பெயர்) வாயில் வைத்தவர்களின் காதுகளுக்கு எனறும் கேட்காத சத்தமொன்று கேட்டுள்ளது. அதற்கு பின்னர் பாரிய புகை கிளம்ப, மண்ணுடன் கலந்த தண்ணீர் ஓடையாய் பெருக்க, மண்ணாறு, தோட்டத்தையே விழுங்கிக் கொண்டிருந்தது.

(சங்கு ஓசை என்றால் தோட்டங்களில் இருக்கின்ற தொழிற்சாலையிலிருந்து கூ.... கூ... கூ.... என்று எழுப்பப்படும் ஒருவகையான ஓசையாகும். இந்த சங்கு ஓசையானது காலை வேலைக்கு செல்லுதல், சாப்பாட்டு இடைவேளை, பகல் வீட்டுக்கு திரும்புதல் மற்றும் மாலை வேலை முடிவடையும் நேரங்களை குறித்து காட்டுவதற்காக எழுப்பப்படும் ஓசையாகும்)

கையில் கிடைத்ததையல்ல உயிரை காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்று ஓடிய பலரையும் மண்ணாறு இழுத்து போர்த்தி படுத்தபடுக்காய் படுத்துக்கொண்டது என்றுதான் கூறவேண்டும். அந்தளவுக்கு, சுமார் 30 அடியிலிருந்து 50 அடி வரையிலான உயரத்துக்கு 3.5 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் மண்ணாறு குப்புறப்படுத்து கொண்டது.



அன்று காலை 7 மணிக்கு முன்னர் தோட்டத்திலிருந்து கிளம்பி விட்டவர்களை தவிர, வேறு யாரையும் உயிருடன் மீட்கமுடியாது என்றுதான் அனர்த்த்துக்கு பின்னரான படங்கள் படம்பிடித்து காட்டுகின்றன. பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிக்களுக்கு சென்ற 75 சிறுவர்கள் உயிர்தப்பிவிட்டனர்.

அந்த தோட்டத்தின் ஒருதிசையில், முருங்கை பள்ளத்தாக்கை அணிந்ததாக சும்ர் 2,500 அல்லது 3,000 அடி உயரத்தில் கம்பீரமாக செங்குத்தாக நிமிர்ந்து நிற்கும் பேருகலை மலையின் ஒருபகுதியே வெடித்து சிதறி தண்ணீருடன் பெருக்கெடுத்து ஓடி, மீரியாபெத்த தோட்டத்தின் ஒரு எல்லையை அழித்துவிட்டுள்ளது.

இந்த மலை இன்று நேற்றல்ல, 2005ஆம் ஆண்டுமுதல் கொஞ்சம் கொஞ்சமாக உறுமி காட்டி பயமுறுத்தியுள்ளது. அவ்வப்போது அனர்த்த எச்சரிக்கை விடும் வகையில் தன்னுடைய அங்கங்களை அசைத்து மண்சரிவை ஏற்படுத்தி எதிர்வும் கூறியிருக்கின்றது.

அப்போதெல்லாம் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் எச்சரித்தது. அரசாங்கமும் அத்தோட்ட நிர்வாகத்துக்கு எச்சரிக்கை செய்தது. [illegible] தோட்ட மக்களின் உழைப்பை, அட்டை இரத்தத்தை உறிஞ்சுவதைப் போல உறிஞ்சும் பெருந்தோட்டங்களில், மீரியாபெத்த தோட்டத்தை நிர்வகிக்கும் மஸ்கெலியா பிளாண்டேசன் மட்டும் விதிவிலக்காக இருககவிரும்பாமல் இந்த விடயத்தில் அசட்டையாகவே இருந்து விட்டது.

இலங்கையில், பதுளை மாவட்டம் உள்ளிட்ட பத்து மாவட்டங்களில் 1957ஆம் ஆண்டு முதல் மண்சரிவுகள், பாறைகள் புரண்டு விழுதல் இடம்பெற்றுள்ளன. பதுளையில் 1986ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையிலும் இடம்பெற்ற மண்சரிவில் 11 பேர் பலியாகியுள்ளனர்.

மலையக மக்களை பொறுத்தவரை, அவர்களுக்கு ஒரு பேர்ச் நிலம் கூட சொந்தமில்லை, மீரியாபெத்த தோட்ட மக்களுக்கும் அது விதிவிலக்கானது அல்ல. மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தாலும் எங்கு செல்வதென்று தெரியாமல் அங்கே தங்கிவிட்டனர். அதன் விளைவாக 6 லயன் குடியிருப்புகள் மண்ணுக்குள் மண்ணாகிபோய்விட்டன.

லயன்குடியிருப்புகளை மட்டுமன்றி, பால் சேகரிக்கும் நிலையங்கள் இரண்டு, வாகனங்கள் திருத்தும் இடம், இரண்டு கடைகள், மருத்துவ மாது குடும்பம் தங்கியிருந்த விடுதி, சாரதியின் வீடு, சிகிச்சைநிலையம் மற்றும் கோவில் ஆகியனவும் மண்ணில் புதையுண்டுள்ளன.

இரண்டு பால் சேகரிக்கும் நிலையங்கள் இருப்பதனால் அங்கு மாடுகளும் ஆடுகள் மற்றும் கோழிகளும் இருந்திருக்கலாம். அவற்றுக்கெல்லாம் என்ன நடந்தது என்பது தொடர்பிலான தகவல்கள் இதுவரை [illegible] வெளியாகவில்லை.

அதற்கு அப்பால், மஹாமுனி கோவிலையும் மண்ணாறு விடாமல் விழுங்கிவிட்டது. இந்த கோவிலில் பூஜை வழிபாடுகளுக்கு மட்டுமன்றி மலையகத்தில் அருகிக் கொண்டு போகின்ற கூத்துகளில் ஒன்றான பொன்னர் சங்கர் கூத்தும் அதனோடு இணைந்த நல்ல தங்காள் கதை பாடும் படுகல திருவிழா ஒவ்வொரு வருடமும் ஆனி மாதம் நடைபெறும்.

பொன்னர் சங்கர் கூத்து மலையகத்தில் ஏனைய பகுதிகளில் ஆங்காங்கே அரங்கேற்றப்பட்டாலும் மீரியாபெத்தயைப் போல் சிறப்பாக நடத்தப்படுவதில்லை என்றே கூற வேண்டும்.

மஹாமுனி கோவிலையும் மண்ணாறு விழுங்கிவிட்டதால் அந்த கூத்துக்கள் மீண்டும் உயிர் பெறுமா? என்பதெல்லாம் எம் முன்னே விட்டுச்செல்லப்பட்ட கேள்விகளில் சிலவாகும்.

பொன்னர் சங்கர் கூத்து, நல்ல தங்காள் கதையெல்லாம் வாய்வழி இலக்கியங்கள் என்பதனாலும் அனர்த்தத்தில் சிக்கி மீண்டிருக்கின்ற முதியவர்கள் அக்கூத்தை சொல்லி கொடுக்கும் மனநிலைக்கு திரும்புவார்களா? என்பதெல்லாம் எதிர்பார்க்க முடியாதவையாகும்.

அதுமட்டுமன்றி ஏதோ ஒரு வகையில் ஆதரவற்றவர்களாக்கப்பட்ட பிள்ளைகளின் எதிர்காலத்தை கவனத்திற்கொண்டு, அவர்களின் வாழ்க்கையாவது மண்ணில் புதையுண்டுவிடாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியது அரசாங்கம் மற்றும் மலையகம் சார்ந்த அரசியல் வாதிகளின் கடப்பாடாகும்.

தீபாவளி கொண்டாடப்பட்டு ஏழு நாட்களில் இவ்வாறானதொரு பேரழிவை ஏற்படுத்தியுள்ளமை மலையகத்தையே சோகத்தில் மூழ்கடிக்கச்செய்துவிட்டது.

நரகாசுரன் என்ற கொடிய அசுரன் அழிக்கப்பட்ட தினம் தீபாவளியாக கொண்டாடப்படுகின்றது. தீபாவளியை மலையக மக்கள் ஏனைய பண்டிகைளை விடவும் வெகு சிறப்பாக கொண்டாடி வருகின்றனர். இந்த தீபாவளிக் கொண்டாட்டத்தை அடுத்து, மீரியாபெத்தயில் இடம்பெற்ற சோகமான இந்தச் சம்பவம் அங்குள்ள மக்களின் அடுத்த தீபாவளியையும் இல்லாமல் செய்துவிட்டது.

தீபாவளியைத் தொடர்ந்து வருகின்ற முருகனுக்கு உகந்த விரதங்களில் மிக முக்கியமானதாகக் கருதப்படும் கந்தசஷ்டி விரதம், தொடர்ந்து ஆறு நாட்களுக்கு அனுஷ்டிக்கப்பட்டு, ஆறாவது நாள் சூரன் போர் நடைபெறும்.

சூரனை வதம் செய்த முருகனின் ஆறுபடை வீடுகளில் திருப்பரங்குன்றம் மிகமிக முக்கியமானதாகும். அந்த திருப்பரங்குன்றத்தில் சிவபக்தரான நக்கீரர், சிவனை எதிர்த்து வாதம் செய்த பாவம் நீங்குவதற்கு தவம் செய்தார்.

அப்போது அருகிலிருந்த குளத்தில், இலை ஒன்று பாதி மீனாகவும் மீதி பறவையாகவும் இருந்ததைக் கண்டு அதிசயித்தார். இதனால், அவரது தவம் கலைந்தது. அச்சமயத்தில் பூதம் ஒன்று சிவ வழிபாட்டிலிருந்து தவறிய 999 பேரை சிறை பிடித்திருந்தது.

நக்கீரரின் தவம் கலையவும் அவரையும் பிடித்து குகையில் அடைத்தது. நக்கீரர், பூதத்திடம் சிக் கியவர்களை காப்பதற்காக திருமு ருகாற்றுப்படை பாடினார். அவ ருக்கு காட்சி தந்த முருகன் பூதத்தை சம்ஹாரம் செய்து, தனது வேலால் குகையை தகர்த்து அனைவரையும் காத்தருளினார.

அப்போது நக்கீரர், முருகனிடம் தன்னை பூதம் தீண்டியதால் கங்கையில் நீராடி பாவத்தை போக்கிக்கொள்ள வேண்டும் என்றார். முருகன் வேலால் பாறையில் ஊன்றி கங்கை நதியை பொங்கச்செய்தார். நக்கீரர் அதில் நீராடி பாவம் நீங்கப்பெற்றார். வற்றாத இந்த காசி தீர்த்தம், திருப்பரங்குன்றம் மலை உச்சியில் இருக்கிறது.

சூரபத்மனை அழிக்க புறப்பட்ட முருகனுக்கு "வீரவேல்" தந்து, முருகனின் போர் படையின் சேனாதிபதியாக வீரபாகுவை நியமித்து ஆசி கூறினாள் அன்னை பார்வதி. முருகப் பெருமானின் தலைமையில் நடந்த போரில் அசுர படையினர் பெரும் அளவில் அழிந்தார்கள்.

இறுதிக்கட்டம் நெருங்கியது. முருகப்பெருமானிடம் போர் செய்ய முடியாமல் மாயையின் மகனான சூரபத்மன், மாமரமாக மாறினான். அந்த மரத்தை கந்தன் தன் வேலால் இரண்டாக பிளந்தார். சூரபத்மன் வீழ்ந்தான். மரமாக மாறி இரண்டாக பிளந்த சூரபத்மனின் ஒருபாகத்தை சேவலாகவும் மறுபாகத்தை மயிலாகவும் மாற்றினார்.

தன் வெற்றிக்கு அடையாளமாக சேவலை தன் கொடியில் சின்னமாகவும் மயிலை தன் வாகனமாகவும் மாற்றினார் முருகப்பெருமான். முருகப் பெருமான் அசுரர்களான சூரபத்மன் மற்றும் அவனது தம்பியரை அழிக்கப் போர் புரிந்த காலத்தை உமா தேவியார் கந்தசஷ்டி விரதமாக அனுஷ்டித்ததாக வரலாற்று ஆதாரங்கள் கூறுகின்றன.

கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளான 29ஆம் திகதி புதன் கிழமை சூரசம்ஹாரத்துக்கு உலகளாவிய ரீதியில் இந்துக்கள் தயாராகிக்கொண்டிருந்த வேளையில், காலை வேளையிலேயே கொஸ்லாந்தை மீரியபெத்தயிலுள்ள பேருகலை மலை பிளந்து சரிந்து தோட்டத்திலிருந்த ஆறு லயன்களையும் துவம்சம் செய்துள்ளமையானது இலங்கையில் மண்சரிவு வரலாற்றில் இது வரையிலும் இடம்பெறாத ஒன் றாகும்!

கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளன்று இடம்பெற்ற இந்த மண்சரிவுச் சம்பவத்தை வாழ் நாளில் மறக்கமுடியாது. இனி வரும் ஒவ்வொரு சூரசம்ஹாரமும் பேருகலை மலையின் சம்ஹாரத்தை நினைவூட்டும்.

**நன்றி மிரர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த மூன்று பேர்



"மச்சான் நடந்தா அவள் ஒரு தேவதை!

சிரிச்சா அவள் அழகு தேவதை!

நம்மைக்கடந்து போகும போது அவள் பளிங்கு தேவதை!

கடைசியில முறைச்சா மட்டும தான்ரா எங்கடை ஊர் பொம்பிளை!

*பாத்தியா! முறைச்சிட்டெல்லா போறாள், அப்ப இவள் எங்கடை ஊர் பொம்பிளை தான்டா, ஓம் மச்சான இது எங்கடை மாஸ்ரரின்ரை பெட்டையடா...* தொடர்ச்சியா அந்த வீதியிலை போற எல்லா பிள்ளைகளையும் வம்புக்கிழுத் துக்கொண்டிருந்தனர் அந்த மூவரும். பார்த்தாலே தெரியும் பதினெட்டு தாண்டிய இளசுகள். மூவரும் வெவ்வேறு வகையான தாள வாத்தியங்களை கையில் வைத்திருந்தனர்.

திடீரென்று அந்த மூவரில் ஒருவன் உரத்த குரலில் *"ஊதாக்கலரு ரிப்பன், உனக்கு யாரடிஅப்பன்?"..என் மாமன் அப்பன்"* என்றெல்லாம் பாடத்தொடங்கினான். அவனுக்கு ஏற்றாற் போல அருகிலிருந்தவன் தாளம் தட்ட கேட்க நன்றாகத்தான் இருந்தது. நான் வேலை விசயமா போய் அவடத்திலை பஸ்சுக்கு காத்துக் கொண்டிருந்தனான். கொஞ்ச நேரத்திலை ஊதாக்கலர் ரிப்பன மூவரையும் முறைச் சுக்கொண்டே நடந்துபோனது.

பார்த்தாலே புரிந்தது. அந்த ஊரிலை இந்த மூன்று பேரும் வழக்கமாக எல்லோராலும் அழைக்கப்படுகின்ற *"கட்டாக்காலிகள்"* என்று. என்னுடையவேலையை மெதுவாக ஆரம்பித்தேன். *"தமபியவை நீங்கள் எங்கை இருக்கிறியள்?"* வெடுக்கென்று, *"இங்கைதான் பக்கத்திலை"*.என்றார்கள். அவர்களின் சந்தோசமான செயற்பாட்டுக்கு நான் இடையூறாக போய்விட்டேன் என்பதைத் தெளிவாகப் புரிய வைத்தனர்.

மூவரிலும்ஊரில்உள்ளவர்கள், அளவுகடந்த மதிப்பும்! மரியாதையும்! வைத்திருக்கிறார்கள் என்பது எனக்குப் புரிகிறது. அதிலும் பெண்கள் இவர்கள் மீது அதீத மரியாதை!!!!!!!! வைத்திருக்கிறார்கள். மனதுக்குள் சிரித்துக்கொண்டேன். அடுத்த நாளும் நான் அதே நேரம் அந்த இடத்தில் மூவரையும் சந்தித்தேன். அவர்கள் ஒவ்வொரு நாளும் அவ்விடத்தில் நின்று போவோர் வருவோரைப்பற்றி வர்ணிப்பார்கள. யாரும் அவர்களைத் தட்டிக்கேட்க முடியாது. வேலை எதுக்கும் போவதில்லை, சாப்பிடுவதற்கு வீடு செல்வதும் பின்னர் நேரத்துக்கு வந்து அவ்விடத்தில் நிற்பதும் பாடுவதும் என்று தங்கள் வழக்கமான கடமைகளில் ஈடுபட்டனர்.

எனக்குப் பக்கத்திலை நின்ற அவ்விடத்தைச் சேர்ந்த ஒருவர், *"எருமை மாட்டிலை மழைபெய்தாலும் உறைக்காதது போல இந்த எருமைகளுக்கு யார் என்ன சொன்னாலும் உறைக்காது, ஊரிலை நடக்கிற களவு, சண்டை, பொம்பிளைப் பிரச்சினை எல்லாம் இந்த மூன்று எருமையளும் தான் செய்யுதுகள், இண்டை வரைக்கும் யார் சொல்லியும் திருந்துற எண்ணமே இல்லை"* என்று பொரிந்து தள்ளினார். எனக்கென்னவோ அவங்களைப்பற்றி மக்கள் கொஞ்சம் ஏறுக்கு மாறாக சொல்லியது போலத் தான் இருந்தது.

அடுத்து வந்த கிழமைகளில் அந்த மூவரையும் அவ்விடத்தில் காணவில்லை. மனதுக்குள் எனக்கு ஏதோ ஒன்றை இழந்தது போலவிருந்தது. அவர்களின் பாட்டுச் சத்தமும் அதற்கேற்றாற்போன்ற நகைச்சுவை நயம் பொருந்திய கவிதை வரிகளும் மனதுக்கு நன்றாகத்தான் இருந்தது. மூவரில் ஒருவன் அந்த மிருதங்கத்தை மிக இலாவகமாக அடித்து இனிமையான ஓசை எழுப்புவது, எனக்கு மனதுக்கு இதமாகத்தான் இருக்கின்றது. ஊராக்களுக்குச் சொன்னால் என்னை ஓட ஓட விரட்டிப் போடுவினம்.

அருகில் நின்றவர்களிடம் சும்மா சாடை மாடையாக விசாரித்தேன். *"ஏன் அண்ணை இதிலை நிக்கிற அந்த மூன்றுபேரும் எங்கை ஆக்களைக்காணேல்லை". "அவங்களோ தம்பி! பாழ் பட்டு போவார் பள்ளிக் குடத்துக்குள் ஓடுபிரிச்சு இறங்கி களவெடுத்திட்டாங்களாம், பொலிஸ் பிடிச்சுக்கொண்டு போயவிட்டாங்கள், இன்னும விடவில்லை"* எனக்கு திக் என்றிருந்தது. நல்ல திறமையுள்ள பெடியங்கள் ஏன் இப்படிச்செய்யுறாங்கள்? இவங்களை இந்த நிலமையிலையிருந்து மீட்கவேண்டும். இளைஞர்கள் தான் எங்கள் நாட்டின் சொத்துக்கள்! அதுவும் ஒரு கிராமத்தில் அந்த ஊரின் வளர்ச்சிக்கு பாடுபட வேண்டிய பொறுப்பு அவர்களிடம் தான் உள்ளது. இன்றைகு கிராமமக்களே கட்டாக காலிகள் என்று ஒதுக்கி வைக கினற அளவுக்கு அந்த மூனறு இளைஞர்களும் அப்படியென்ன பிழைசெய்கிறார்கள்? என்று அறிய வேண்டும் என்று என் மனதில் நினைத்துக்கொண்டேன்.

அடுத்த நாள், கைகளில் கட்டுப்போட்ட நிலையில் சிறுகாயங்களுடன் அவ்விடத்திலிருந்தனர். அதே உற்சாகம் இல்லாவிட்டாலும் தொடர்ச்சியாக பாடிக் கொண்டிருந்தனர். *"சோதனை மேல் சோதனை போதுமடா சாமி! வேதனைதான் வாழ்க்கை என்றால் தாங்காது பூமி"* என்று சோகப்பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தனர். கேட்பதற்கு சிரிப்பாக இருந்தாலும் மனதுக்குச் சற்றுக் கவலையாகத்தான் இருந்தது. அவாகளோடு இன்றைக்கு கதைச் சாகவேணும் என்ற முடிவோடு அருகில் போனேன். *"என்னடா தம்பியவை இரண்டு, மூண்டு நாளா ஆக்களைக்காணேலை உங்கடை பாட்டைக் கேட்காமலே நான் வேலைக்கு போய் வாறன்"* என்று மெதுவாக ஆரம்பித்தேன். *"என்னண்ணை எங்கடை பாட்டு அவ்வளவு நல்லாவா இருக்கு?"* என்றான் மூவரில் கொஞ்சம் இளையவன். *"பின்னை என்னடாப்பா உங்கடை பாட்டு மட்டுமே, உங்களிட்டை நல்ல கவிதையெழுதுற ஆற்றலும் இருக்கு"* அவர்கள் கண்களில் ஒரு பளிச்சென்ற மாற்றம் வந்தது. வந்த வேகத்தில் திரும்பியும் போய்விட்டது. *"சும்மா சொல்லாதேங்கோ அணணை! எங்கடை ஊரிலை யாருக்குமே எங்களைப் பிடிக்கிறதும் இல்லை, எங்கடை பாட்டைப் பிடிக்கிறதும் இல்லை, நாங்கள் எல்லாம் எங்கடை ஊரிலை வேண்டாத ஆக்கள், கள்ளர், கட்டாக்காலியள், இப்படியே கனக்கச் சொல்லலாம்"* என்று தொடர்ந்து கொண்டேயிருந்தனர்.

*"நீங்களும் பார்க்க அப்பிடித் தாணேடாப்பா இருக்கிறியள்! சும்மாவே இருக்கிறியள் போற வாற ஆக்களை விட்டு வைக்கிறியள் இல்லை"* நான் சொல்லி வாய்மூடவில்லை, மூவரில் பெரியவர் [illegible] *பாட்டிலை தானே இருக்கிறம, ஊராக்கள் தான் சும்மா சும்மா எங்களை எல்லாத்துக்கும் மாட்டி விட்டுக்கொண்டிருக்கினம்"*. என்று சற்று சூடாகவே சொன்னான். கொஞ்ச நேரம் அவர்களோடு நின்று கதைத்து விட்டு வீடு திரும்ப எண்ணி நடக்க ஆயத்தமானேன். அந்த ஊரிலிருக்கின்ற பிரதான பாடசாலை ஒன்றின் ஆசிரியை அந்தவழியே நடந்து வந்து என்னருகில் நின்று, *"உங்களுக்கு வேற வேலையில்லையோ! இந்தப் பெடியளோடை சும்மா என்னத்துக்கு தேவையில்லாமல் கதைக்கிறியள். அவங்கள் ஊரிலையே உதவத்த ஆக்கள்"* என்று எனக்கு புத்திமதி சொல்லிக்கொண்டே என்னுடன் நடகத்தொடங்கினார். நானும் அவ சொன்னதைக் கேட்டு தலையை ஆட்டிக்கொண்டே வந்தேன்.

இரவு தூங்கும் போது என்மனதில் பல எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தன. இந்த விடயத்தில் ஏதாவது செய்யவேண்டும் என்றும் மனம் சொல்லிக் கொண்டேயிருந்தது.

என் வேலையை காலையில் ஆரம்பித்தேன். தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் காலையிலும் மாலையிலும் அவர்களோடு உரையாடுவதும் தனித்தனியே அவர்களிடம் பேசுவதும் என்று தொடர்ந்தது. கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் கழிந்த நிலையில் ஓர் நாள்...

அந்த மூவரும்...

நானும் அவசர அவசரமாக வேலைக்கு வந்துகொண்டிருந்தேன். *"சேர் உங்களோடை கொஞ்சம் அவசரமாகக் கதைக்க வேணும்"* என்று அந்த ஊர் ரீச்சர் ஓடி வந்தா. *"உங்களுக்கு எப்பிடி நன்றி சொல்லுறதென்றே தெரியேல்லை இண்டைக்கு எங்கடை ஊரின் பேரும் புகழும் அந்தப் பெடியனாலை எங்கையோ போயிட்டுது. வெளிநாட்டிலையிருந்தும் எடுத்துச் சொல்லுகினம் அதுவும் யாழ் மாவட்டத்திலையே முத* [illegible] *நம்பவே முடியல்லை எங்கடை பெடியள்! எங்கடை பெடியள் தான்"* கேட்டவுடன் உச்சி குளிர்ந்தது எனக்கு.

மீண்டும் சில நாட்கள் கழிந்தது. அன்றிரவு அக்கிராமத்தின் மத்தியில் அமைந்துள்ள கோயிலொன்றின் திருவிழா ஆரம்பமாகி இறுதி நாள் நிகழ்வு நடந்து கொண்டிருந்தது. எங்களை ஏத்துவதற்கு பஸ்விரைவாக வந்து புழுதியை வாரியிறைத்தது. மங்கலாக பஸ் பின்புறத்தில் ஒட்டப்பட்டிருந்த பெரிய நோட்டீஸ் ஒட்டப்பட்டிருந்தது. சற்று நேரத்துக்குப்பின்னர் படிப்படியாக புழுதியடங்கிய பின்னர் *"இசைப்பெருவிழா"* என்று பெரிய எழுத்தில் எழுதப்பட்டு அருகில் இளைஞன் ஒருவன *"மைக்"* பிடித்து சிரித்துக் கொண்டிருந்தான். டக்கென்று பார்த்தால் அந்த மூவரில் ஒருவரின் சாயலில் இருந்தான். *ஓ!.. அட அந்த மூவரில் ஒருவன் தான்.* இன்றைக்கு கோயில் திருவிழாவில அவரும் பாடப் போறார். மனதுக்குள் திருப்திப்பட்டுக்கொண்டேன். வீதியில் நின்று *"சொல்லடி அவருக்கு நான் சலாம் போடணும்"* என்று பாடின பெடியள் இண்டைக்கு மற்றவங்கள் சலாம் போடுற நிலைக்கு வந்திட்டாங்கள்.

சரி இரண்டு பேர் நல்ல நிலைக்கு வந்திட்டாங்கள். அந்த மூன்றாவது பெரிய நபரைக்காணவில்லை. எங்கே அவன் என்று என் மனம் தேடத்தொடங்கியது. பின்னேரம் வேலைமுடிந்து வருமபோது நடையின் வேகத் தைக் குறைக்க வேண்டி வந்து விட்டது.

பின்னாடியே ஒரு பொமபிளைப்பிள்ளை வேகமா ஓடி வந்து கொண்டிருந்தா.

*"சேர் சேர் நில்லுங்கோ நில் லுங்கோ பின்னேர பஸ் போயி ட்டுதா"* என்று என்னைக் கேட்டா. *"இல்லையம்மா ஏன் என்ன அவசரமா போகோணுமோ?" என்று கேட்டேன். "ஓம் சேர் ரைம் முக்கு கிளாசுக்கு போகாட்டி சேர் வெளியிலை விட்டுடுவார். அதுவும் இண்டைக்கு பாரதியார் கவிதைகள் விளங்கப்படுத்துவார். அதை மிஸ் பண்ண எனக்கு விருப்பமில்லை".* சற்று நேரம் உற்றுப்பார்த்தேன்.

அந்த மூன்றுபேர் கிண்டலடித்தவர்களில் ஒரு பிள்ளைதான் அந்தப் பிள்ளை.

"பரவாயில்லை யாரோ ஒரு சேர் இந்தளவுக்கு படிப்பிக்கிறார்" என்று மனதில் நினைத்துக் கொண்டு பேசாமல் நின்றேன். *"என்ன சேர் யோசிக்கிறியள்! நான் யாரிட்டை தமிழ் பாடத்துக்கு கிளாஸ்போறேன் தெரியுமோ? இந்தச் சந்தியிலை நின்று எங்களைப் பார்த்து கவிதை சொன்ன அந்த அண்ணையிட்டைத்தான்* என்றதும் என் மனம் பூரிப்பால் திளைத்து விட்டது.

*"நாங்கள் அந்த மூன்று பேரையும் பற்றி என்னவோ நினைச்சிட்டம் சேர்! ஆனால் அவங்கள் இண்டைக்கு ஊரிலையே பெரிய ஆக்கள் ஆகிட்டாங்கள்."*

**அந்த மூன்று பேரைப்பற்றி என்னமோ நினைச்சம் அவங்களை ஊரே மதிக்கிற மாதிரி ஆக்கிட்டியள் சேர்**

**அடுத்த வாரம் இக்கதையில் வலம் வந்த இளைஞர்களின் மாற்றங்கள் பற்றியும் இளம் சமூகத்தவர் தொடர்பில் ஏற்படுகின்ற சவால்கள் பற்றியும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் உதவி இயக்குநர் திரு. ஐ.தபேந்திரன் அவர்களின் நேர்காணல் வெளியாகும்.**

**வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பாக்கப்படுகின்றன. தரமானவை பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.**

**சாந்திகம்**
**8, 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**E.mail:psych@sltnet.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கேதீஸ்வரத்திற்கு பரீட்சார்த்த ரயில் சேவை

(மன்னார்)

மடு புகையிரத நிலையத்திலிருந்து மன்னார் திருக்கேதீஸ்வரம் புகையிரத நிலையம் வரையிலான பரீட்சார்த்த புகையிரத சேவை நடத்தப்பட்டது.

மடு புகையிரத நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் பரீட்சார்த்த சேவையை ஆரம்பித்த புகையிரதம் 10.30 மணியளவில் திருக்கேதீஸ்வரம் புகையிரதநிலையத்தை சென்றடைந்தது.

மடு புகையிரத நிலையத்திலிருந்து திருக்கேதீஸ்வரம் நிலையம் வரைக்குமான 26 கிலோ மீற்றர் தூரத்துக்கான சேவை இடம்பெற்றது.

இந்த ஆரம்ப நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய, மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. நந்தினி ஸ்டான்லி டி மேல், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஸ்ரீ பாஸ்கரன் புகையிரத திணைக்கள அதிகாரிகள், மன்னார் பொலிஸ் நிலைய அதிகாரிகள், திணைக்களத்தின் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ-2)

# பத்து குழாய்க்கிணறுகள் அமைக்க பொருளாதார அமைச்சு உதவியது


## முல்லை.மாவட்ட பிரதி பணிப்பாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீளெழுச்சி திட்டத்தின் 42 இலட்சத்து 5 ஆயிரம் ரூபா நிதியுதவியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 10 குழாய்க்கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. இவை வரட்சியினால் பாதிக்கப்படும் கிராம மக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் நோக்கில் அமைக்கப்பட்டு வருவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பணிப்பாளர் நா.இரட்ணராஜா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்படும் வரட்சி காலங்களில் பொதுமக்கள் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்கு அல்லற்படுகின்றனர். இந்நிலையைகருத்திற்கொண்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வடமாகாணத்தின் பல மாவட்டங்களில் ஆள்துளைகுழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.



இத்திட்டத்தின் ஒரு பகுதியாகவே முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் செல்வபுரம் மற்றும் மூன்றுமுறிப்பு கிராமங்களில் தலா ஒவ்வொரு குழாய்க்கிணறுகளும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் கோட்டைகட்டிய குளம், அம்பலப் பெருகுளம், ஐயங்கன் குளம் ஆகிய கிராமங்களில் தலா மூன்று குழாய்க் கிணறுகளும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் தண்ணீரூற்று மேற்கு கிராம்த்தில் இரண்டு குழாய்க் கிணறுகளும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் கனகரத்தினபுரம் கிராமத்தில் இர ண்டு குழாய்க் கிணறுகளும் முள்ளிய வளை மேற்கில் ஒன்றுமாக மொத்தம் 10 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவை ஒவ்வொன்றும் தலா 4 இலட்சத்து 20 ஆயி ரத்து 500 ரூபா செலவில் மொத்தம் 42 இலட்சத்து 5 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டு அமைக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-15)

## சமூக அணிதிரட்டல் பயிற்சி

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நலிவுற்றவர்களைக் கட்டியெழுப்புகின்ற மாதிரிக் கிராமத்தில் கடமை புரியும் கள உத்தியோகத்தர்களுக்கான இருநாட்கள் சமூக அணிதிரட்டல் பயிற்சி அண்மையில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இளைஞர் விவகாரங்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சில் உள்ள தேசிய மனிதவள அபிவிருத்தி சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்பயிற்சியில் சமூக அபிவிருத்திக்கான தேசிய நிறுவகத்தின் விரிவுரையாளர் வ.ஜெயரூபன், தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் ஆய்வு உத்தியோகத்தர் த.செந்தில்நாதன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். (அ-2)




## எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அடிக்கடி பெற்றோல் தட்டுப்பாடு

### பாவனையாளர்கள் விசனம்

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இயங்கி வரும் முத்தையன்கட்டு ப.நோ.கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பெற்றோல் தட்டுப்பாடு அடிக்கடி ஏற்படுவதாக பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தனியார் கடைகளில் பெற்றோல் தட்டுப்பாடின்றி போதியளவு பெறக்கூடியவாறு இருக்கின்ற போதிலும் மேற்படி எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் அடிக்கடி பெற்றோல் தட்டுப்பாடு ஏற்படுவது ஏன் என பாவனையாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடிய பணத்தை செலவு செய்து தனியார் கடையில் பெற்றோலை பெற வேண்டியுள்ளதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

குறித்த பெற்றோல் நிரப்பும் நிலையத்தில் தட்டுப்பாடு ஏற்படுகின்ற போது பாவனையாளர்கள் தூர இடங்களிலுள்ள மாங்குளம், முள்ளியவளை, நெடுங்கேணி ஆகிய எரிபொருள் நிரப்பு நிலையத்தையே நாட வேண்டியுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் பணம் விரயமாக்கப்படுவதுடன் நீண்ட தூரம் சென்று எரிபொருளை பெற வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து தட்டுப்பாடின்றி பெற்றோலை பெற ஆவன செய்யுமாறு பாவனையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-274)

## கிளிநொச்சி சந்தையில் ஒன்பது கடைகள் உடைப்பு

### 2 கடைகளில் திருட்டு

கிளிநொச்சி பொதுச்சந்தை வளாகத்தினுள் அமைந்துள்ள புடைவை, பான்சி கடைப் பகுதியில் ஒன்பது கடைகள் உடைக்கப்பட்டு இரண்டு கடைகளில் பணமும் பொருட்களும் திருடப்பட்டுள்ளன.

கடையொன்றில் இரண்டு மழைக்கவசமும் பத்தாயிரம் ரூபா பணமும் மற்றைய கடையில் குபேரனுக்கு போடப்பட்ட சுமார் 10 ஆயிரம் ரூபா பணமும் களவாடப்பட்டு மிகுதி ஏழு கடைகளின் கதவுகள் உடைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, கடை உரிமையாளர்கள் கடையை நேற்று திறப்பதற்காக வந்த போது தமது கடையில் திருட்டு இடம்பெற்றுள்ளமை அவர்களுக்கு தெரிய வந்தது.

இதனையடுத்து கிளி நொச்சி பொலிஸார், கரைச்சி பிரதேச சபை தலைவர் மற்றும் செயலாளர் எனப் பல தரப்பினருக்கும் தகவல் வழங்கப்பட்டது.

உடனடியாக அவ்விடத்திற்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார் கடைகளை பார்வையிட்டதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டனர். இப்பகுதியில் அமையப் பெற்றுள்ள 60 புடைவை மற்றும் பான்சி கடைகள் தகரத்தால் அமைக்கப்பட்டவை.

மேற்படி வியாபாரிகள் யுத்தத்தில் இடம் பெயர்ந்த நிலையில் முதலீடு எதுவும் இன்றி வங்கி மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்தும் கடன் பெற்றுப் பொருட்களை கொள்வனவு செய்து நாளாந்தம் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களின் பொருட்களுக்கு கரைச்சி பிரதேச சபை பாதுகாப்பு தொடர்பான உத்தரவாதம் எதையும் வழங்கவில்லை. இப்பகுதியிலுள்ள கடைகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும் அவ்வளாகம் இருள்சூழ்ந்தே காணப்படுகிறது. மின்கம்பங்களை நாட்டி மின்சாரம் வழங்குவதுடன் காவலாளி ஒருவரையும் நியமிப்பதன் மூலம் இது போன்ற திருட்டுச்சம்பவங்களைகட்டுப்படுத்த முடியும்என வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்திருட்டு தொடர்பாக கரைச்சி பிரதேச சபை தவிசாளர் நா.வை. குகராஜா தெரிவிக்கையில், புடைவை மற்றும் பான்சி, கடை தொகுதிகள் சந்தையின் பின் பகுதியில் ஒதுக்கு புறமாக தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளன. எங்களிடம் இரண்டு காவலாளிகள் உள்ளனர். அவர்கள் வேறு பகுதிகளை சுற்றி பார்வையிட்டு வருவதற்கிடையில் இத்திருட்டு இடம் பெற்றுள்ளது.

இது திட்டமிட்ட திருட்டுச் செயலாகும். நாம் பொலிஸாரிடமும் இத் திருட்டு சம்பவம் தொடர்பாக தெரியப்படுத்தியதுடன் அவர்களையும் இரவு வேளைகளில் சந்தையைச் சுற்றிபார்வையிடுமாறும் கேட்டுள்ளோம். அத்தோடு இப்பகுதிக்கு இன்னுமொரு காவலாளியை பணியில் ஈடுபடுத்த தீர்மானித் துள்ளோம். வர்த்தகர்களுடைய கடை கள் பாதுகாப்பு தொடர்பான விடயத்தில் நாம் எதிர்வரும் காலங்களில் அவதானத்துடன் செயற்படுவோம் என அவர் கூறினார்.

இந்நிலையில் களவாடப்பட்ட தினத்தன்று காவலில் ஈடுபட்டிருந்த காவலாளிகள் இருவரையும் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைக் காக தடுத்து வைத்துள்ளனர்.

இது போன்ற திருட்டுச் சம்பவங்கள் இச்சந்தை வளாகத்தினுள் மூன்றாவது தடைவையாக இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2-271)

## கட்டாக்காலி கால்நடைகளை விரைவில் கட்டுப்படுத்துங்கள்

### விவசாயிகள் கோரிக்கை

(தர்மபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்த இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையென பொதுமக்களும் விவசாயிகளும் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது காலபோக நெல் விதைப்பு நிறைவு பெற்றுள்ள நிலையில் கட்டாக்காலி மாடுகள் வயல்நிலங்களினுள் நுழைந்து விளைந்துள்ள நெற்பயிர்களை உண்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இக்கால்நடைகளால் வீதி விபத்துக்கள் ஏற்பட்டு உயிர்ச்சேதங்களும் ஏற்படுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அதாவது இரவு வேளைகளில் பட்டிகளில் அடைக்கப்பட வேண்டிய கட்டாக்காலிகால்நடைகள் இதுவரை காலமும் வயல் வெளிகளிலேயே காலத்தை கழித்தன. தற்போது விவசாய நடவடிக்கை ஆரம்பித்துள்ள நிலையில் அவை வீதியோரங்களிலும் குறுக்காகவும் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும் படுத்து உறங்குகின்றன.

இந்நிலையில் ஏ-35 (பரந்தன்-முல்லை வீதி) கண்டாவளை பிரதேச சபைக்கு முன்பாக அண்மையில் இரவுநேரம் பசு மாடொன்று விபத்திற்குள்ளாகி நீண்ட நேரம் குற்றுயிராக இருந்து பின்னர் இறந்துள்ளது.

இது போன்ற சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் புளியம் பொக்கணை கமக்கார அமைப்பினர் கருத்து தெரிவிக்கையில்,

கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு கமநல சேவை திணைக்களத்தினால் முள்ளுக்கம்பி மற்றும் கம்பிக்கட்டைகள் வழங்காத நிலையில் அவற்றை கட்டுப்படுத்த முடியாது உள்ளது என கூறினர்.

எனவே கமக்கார அமைப்பினரும் கிளிநொச்சி மாவட்ட கமநல சேவை திணைக்களமும் இணைந்து கட்டாக்காலி ஆடு, மாடுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-282)

## 540 ஏக்கர் நிலப்பரப்பில் உழுந்து பயிர்ச் செய்கை

(குருமன்காடு)

யு.எஸ்.எயிட் நிறுவனம் திவிநெகும திட்டத்துடன் இணைந்து உழுந்து பயிர்ச் செய்கைக்கான விதை தானியத்தை அமைச்சர் றிசாத் பதியுதீன் வழங்கினார்.

வவுனியா மாவட்டத்தில் 540 ஏக்கர் நிலப்பரப்பில் உழுந்து பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்காக மேற் படி நிறுவனம் 420 குடும்பங்களுக்கு விதை தானியத்தை வழங்குகின்றது. இதில் ஏக்கர் ஒன்றுக்கு 12 கிலோகிராம் வீதம் தானியம் வழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் செட்டிகுளம், புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த 129 குடும்பங்களுக்கு விதை தானியத்தை நேற்று முன்தினம் அமைச்சர் றிசாத் பதியுதீனும் யு.எஸ். எயிட் நிறுவன திட்ட இணைப்பாளரும் இணைந்து வழங்கினர்.



இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் ஜெயதிலக, வடமாகாண ஆளுநரின் ஆணையாளர் முகைதீன், வர்த்தக கைத்தொழில் அமைச்சின் மாவட்ட இணைப்பாளர் முத்து முகமது, அமைச்சரின் பிரத்தியேக இணைப்பாளர் அப்துல் பாரி, யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் டேவிட் ரயர் மற்றும் பிரதேச மக்கள், கமக்கார அமைப்பினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் சரிவில் சிக்கி உயிரிழந்த மக்களுக்கு ஆழ்ந்த அனுதாபம்

## தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அறிக்கை

பதுளை மாவட்ட கொஸ்லாந்த மீரியபெத்த தோட்டத்தில் இடம் பெற்ற மண்சரிவின் போது உயிர் நீத்த மலையக மக்களுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம் தமிழ்த் தேச மக்களுடன் இணைந்து எமது ஆழ்ந்த அஞ்சலியை தெரிவிக்கின்றோம்.

கடந்த புதன்கிழமை காலை மேற்படி தோட்டத்தில் இடம் பெற்ற அனர்த்தத்தை அறிந்து நாம் அதிர்ச்சி அடைந்தோம். 300 இற்கு மேற்பட்டவர்கள் மரணமடைந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

இது இந்த வருடத்தில் இடம் பெற்ற மாபெரும் அவலம். அரசின் இன அழிப்புக் காரணமாக பலலாயிரக் கணக்கான மக்களை நாம் இழந்தோம். அந்தத் துயரத்திலிருந்து நாம் மீள்வதற்கு முன்னரே எமது உறவுகளுக்கே ஏற்பட்ட அனர்த்தத்னால் மிகுந்த கவலையடைகின்றோம்.

இது தவிர்த்திருக்கக் கூடிய அனர்த்தம் என்பதை அறியும் போது எமது கவலை இரட்டிப்பாகின்றது . தேசிய கட்டட ஆய்வு நிறுவனம் இப் பிரதேசம் பாதுகாப்பற்றது என 2005 ஆம் ஆண்டு அறிவித்திருந்தும் கூட மக்களை பாதுகாப்பான இடத்தில் குடியேற்ற எந்த நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ளவில்லை. அரசின் பொறுப்பற்ற செயற் பாட்டினாலேயே எமது மக்கள் இந்தப் பேரழிவைச் சந்திக்க நேரிட்டுள்ளது. அரசின் இந்த அக்கறையீனமான பொறுப் பற்ற செயற்பாட்டிற்கு எமது கடுமையான கண்டனங்களைத் தெரிவிக்கின்றோம்.

மலையகத்தில் வேறு பல பிரதேசங்களில் இதுபோன்ற ஆபத்தான நிலை இருக்கின்றது. அங்கும் அனர்த்தங்கள் வராமல் மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனமலையக தலைமைகளை வேண்டுகின்றோம.

மலையக மக்கள் தமது குருதியை வியர்வையாக்கி தமது இந்த நாட்டை வளப்படுத்தியவர்கள்.

ஆனால் அவர்களின் வாழ்வு நிலையோ வார்த்தைகளில் எழுதக்கூடியது அல்ல. பல நூறுவருடங்கள் கழிந்தும் தமது நிலத்திற்கு சொந்தம் கொண்டாட முடியாதவர்களாக உள்ளனர். தங்களுடைய விடுதலை தொடர்பாக அவர்கள் நடத்தும் போராட்டங்களுக்கு தார்மீக ஆதரவினையும், ஒத்துழைப்பினையும் வழங்குவதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தயாராக உள்ளது.

இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மலையக உறவுகளுக்கு எங்களால் முடிந்த நிவாரண உதவிகளை வழங்குவதற்கும் சர்வதேச மட்டத்தில் மலையக விவகாரத்தை பேசு பொருளாக்குவதற்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்றைக்கும் தயாராக இருக்கின்றது என்பதையும் எமது உறவுகளுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம் என அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக் கட்சியின செயலாளர் செல்வராசா கஜேந் திரன் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள அறிகைகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# உறவுகளுக்காக கைகொடுக்க வருக இலங்கை ஆசிரியர் சங்கம் அழைப்பு

(கொழும்பு)

பதுளைமாவட்டத்தில்உள்ள குடியிருப்புப் பகுதியொன்றில் இடம்பெற்ற மண்சரிவினால் பலர் இறந்தும் தமது வீடுகளையும் சொத்துக்களையும் முற்றாக இழந்தும் நிற்கின்றனர்.

பாடசாலை சென்ற 75 இற்கும் மேற்பட்ட மாணவர்களும் வேலைக்காக வெளியிடங்களுக்கு சென்றவர்களுமே எஞ்சியிருப்பதாக தகவல்கள் மூலம் அறிகின்றோம்.

இந்த மாணவர்களின் உறவுகள் மண்சரிவினுள் அகப்பட்டு இறந்திருப்பார்கள் என்றே நம்பப்படுகின்றது.

இலங்கையின் பல பாகங்களிலும் மக்கள் துன்பப்படும் வேளையில் அவர்களுக்கான சேவைகளை வழங்குவதில் இலங்கை ஆசிரியர் சங்கம் தனித்தும்ஏனையசமூகஅமைப்புக்களுடனும்இணைந்துசெயற்பட்டுள்ளது.

வன்னியின் பேரவலத்தின் பின்னரும் முகாம்களில் வாழ்ந்த ஆசிரியர்களையும் நேரடியாகச் சென்று சந்தித்து ஆசிரியர்களினுடைய பல பிரச்சினைகளையும் சில வாழ்வாதார உதவிகளையும் செய்த ஆசிரியர் சங்கமாகவும் உள்ளது.

எனவே உறவுகளுக்கு கைகொடுப்போம் என்னும் தொனிப்பொருளில் பல்கலைக் கழக சமூகம், யாழ்.சிவில் அமைப்புக்களுடன் இணைந்து இந்தப் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அன்பார்ந்த அதிபர் ஆசிரியர்களே!

நீங்கள் மாணவர்களுக்கு கற்பிக்கின்றபோது பிறருக்கு உதவி செய்தல், பிறரை அன்பு செய்தல் என்னும் தொனிப் பொருளில் பாடங்களையும் புத்திமதிகளையும் சொல்லியிருப்பீர்கள்.

இன்றைய இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மாணவர்களை அனுபவ ரீதியாக செயற்படத்தூண்டுங்கள்.

ஆசிரியர்களாகிய நீங்கள் அனைவரும் முன்னுதாரணமாக செயற்பட உங்களையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

இந்தப் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உலர் உணவுப் பொருட்கள், சவர்க்கார வகைகள், பால்மா வகைகள் போன்றவற்றை வழங்கி உதவுங்கள்.

எதிர்வரும் 05.11.2014 இற்கு முன்னதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திடம் அல்லது மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் பொருட்களைக் கொடுத்து உதவுங்கள். அல்லது உங்கள் பாடசாலைகளில் உள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளூடாக பொருட்களை ஒப்படையுங்கள்.


உங்கள்தாராளஉள்ளத்தை வெளிப் படுத்துங்கள் என. இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித் துள்ளது. (இ)



# போர்க்களமானது பாசோவில்...

## பாராளுமன்றம் தீக்கிரை, இராணுவம் ஆட்சி அமைத்தது பதவி விலகினார் காம்பரே








மேற்கு ஆபிரிக்க நாடான புர்க்கினா பாசோவில் அந்நாட்டு ஜனாதிபதி பிலைய்சு காம்பரே தன்னுடைய 3 தசாப்த கால ஆட்சியை மேலும் நீடிக்க சட்டம் கொண்டு வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 30 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் தீவிரமடைந்து வந்தன. இந்நிலையில் ஜனாதிபதி பதவி விலகியுள்ளார். அதேவேளை இராணுவம் ஆட்சி அமைத்துள்ளது. இருப்பினும் அங்கு கிளர்ச்சியாளர்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆங்காங்கே வன்முறைகளிலும் அரச சொத்துக்களை சூறையாடுவதிலும் ஈடுபட்டு வரும் அவர்கள் பாராளுமன்றத்தையும் முற்றுகையிட்டு அதனை தீ வைத்தும் எரித்து தமது எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தினரால் மக்களுக்காக நிவாரணப்பொருட்கள் சேகரிப்பு



பதுளை மாவட்டம் , பண்டாரவளை, கொஸ்லாந்த பிரதேசத்தில் இடம்பெற்ற மண்சரிவு அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பொருட்களை வழங்கும் முகமாக, பொருட்களைக் கையளிக்குமாறு வடமாகாணசபை கோரியிருந்தது. இதனையடுத்து வடமாகாண சபை உறுப்பினரும், வடமாகாண சுற்றுலா தொடர்பான இணைப்பாளருமான பா.கஜதீபனின் ஏற்பாட்டில், வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தினரால் முன்னெடுக்கப்பட்ட உலருணவு மற்றும் சுகாதாரப் பொருட்கள் என்பன சேகரிக்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முற்ப கல் 10.30 மணிமுதல் யாழ்.மாவட்டத்தி லுள்ள சுற்றுலா விடுதிகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் இடம்பெற்றது. இச்செயற்பாட்டை வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தொடக்கி வைத்தார். மாலை 5.30 மணியளவில் முடிவடைந்த இச்செயற்பாட்டின் முடிவில் வடமாகாணசபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் 6 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தினரால் சேகரித்து வழங்கப்பட்டன. இச்செயற்பாட்டில் வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் உறுப்பினர்களும் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். (இ)

# லயன் குடியிருப்புக்களை முற்றாக அகற்றி தனித்தனி வீடுகள் அமைக்கப்பட வேண்டும்

## ரணில் கோரிக்கை



மீரியபெத்த பெருந்தோட்ட அனர்த்தம் குறித்து மிகுந்த மன வேதனையடைகின்றேன. இச்சம்பவம் எவராலும் ஜீரணிக்க முடியாத தொன்றாகும். இச்சம்பவத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் மேம்பாடுகள் விடயமாக கட்சி பேதங்களுக்கப்பால் பொதுவான தேசிய வேலைத் திட்டமொன்றினை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் அவசியத் தேவையாக இருந்து வருகின்றது. இவ்வாறு ஐ.தே.க. தலைவரும் எதிர்க்கட்சித் தலைவ ருமான ரணில் விக்ரமசிங்க மீரிய பெத்த பெருந்தோட்டத் திற்கான விஜயத்தின் போது தெரிவித்தார்.

நேற்று முன்தினம் முற்பகல் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்களான க. வேலாயுதம், ஹரின் பெர்னாந்து, தேவாரப் பெரும, ஐ.தே.க. தேசிய அமைப்பாளர் தயாகமகே, அப்புத்தளை பிரதேச சபை உறுப்பினர் எஸ். சிட்டரசு மற்றும் பூபாலன் முருகன் ஆகியோர் மீரியபெத்தவுக்கு சென்றிருந்தனர். அனர்த்த இடங்களை பார்வையிட்ட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க பாடசாலைகள் இரண்டில் தஞ்சம் அடைந்திருப்பவர்களுக்கான நிவாரணப் பொதிகள் மற்றும் குழந்தைகளுக்கான பால்மா உள்ளிட்ட மருந்து வகைகள் உடுதுணிகள் ஆகியவற்றையும் வழங்கினார்.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்ரமசிங்க தொடர்ந்து பேசுகையில், மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளின் வலயக் குடியிருப்புகளை முற்றாக அப்புறப்படுத்திவிட்டு கிராமிய மட்டத்தைப் போன்று தனித்தனியான வீடுகளைக் கொண்ட வீடமைப்புத் திட்டங்கள் உடன் ஆரம்பிக்கப்படல் வேண்டும். அத்துடன் இவ் வீடமைப்புத் திட்டங்கள் பாதுகாப்பான பகுதிகளில் மண் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பின்னர் அமைக்கப்பட வேண்டியதும் முக்கியமாகும். லயன்குடியிருப்புக்களினாலேயே உயிர் அழிவுகள் அதிகம் ஏற்படுகின்றன. இது போன்ற அனர்த்தங்கள ஏற்படுகையில் தனி வீடுகளின் உயிர் அழிவுகள் மட்டுப்படுத்தப் படக்கூடியதாக இருக்கும்.

மீரியபெத்த அனர்த்தம் தொடர்பாக பதுளை எம்.பி. கே. வேலாயுதம் எனது கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து இது குறித்து பாராளுமன்றத்திலும் விவாதித்தேன். மேலும் இவ் அனர்த்தம் இடம்பெற்றதை அறிந்து சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து ஆக்கபூர்வ மீட்பு பணிகளை உடன் மேற்கொண்டமைக்கு அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இச் சம்பவத்தின் பின்னராவது தோட்டத் தொழிலாளர்களுக்கு சொந்த நிலம், சொந்த வீடு, நிரந்தர முகவரி ஆகியவை வழங்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இலங்கையில் அமைக்கப்படும் பட்சத்தில் கிராமிய ரீதியில் தோட்டத் தொழிலாளர்கள் வாழக் கூடிய சூழல் உருவாகும் என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் கே. வேலாயுதம் தமதுரையில், ஏற்பட்டிருக்கும் அனர்த்தம் முழு மலையகத்தையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. மீரியபெத்த பெருந்தோட்டப் பிரதேசம் பாதுகாப்பற்ற பிரதேசமாக பிரகடனம் செய்யப்பட்டிருந்த போதிலும் அங்குள்ள மக்களை பாதுகாப்பான பிரதேசங்களில் குடியமர்த்தப்படாதது வருந்தத்தக்க விடயமாகும். பொறுப்பற்ற தன்மையும் கவனயீனமுமே மேற்படி அனர்த்தத்திற்கு காரணமாகும்.

லயனகுடியிருப்புக்கள்ஒழிய வேண்டும் அதற்கு மாற்றீடாக தனித்தனி வீடுகள் தோட்டங்களில் பாதுகாப்பான பிரதேசங்களில் அமைக்கப்படல் வேணடும். இதற்கென பொதுவான தேசிய வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டிய தன் அவசியத்தை மீரியபெத்த சம்பவம் எடுத்தியம்பியுள்ளது. இது விடயத்தில் அரசியல் கட்சி பேதங்களை மறந்து ஒருமித்த நிலைப்பாட்டினை சம்பந்தப்பட்டவர்கள் எடுப்பதும் முக்கியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ஆறுமுகம் தொண்டமானால் ஆழ்ந்த அனுதாபம் தெரிவிப்பு

பதுளை , ஹல்துமுல்ல, மீரியாபெத்த பகுதியில் ஏற்பட்ட பாரிய மண்சரிவு அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்த அனைவருக்கும் இ.தொ.கா. சார்பில் அதன் பொதுச் செயலாளரும், கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்.

இதுவரையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொண்டர் நிறுவனங்கள், சமூகநல அமைப்புக்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் ஊடாக வழங்கப்பட்ட நிவாரணங்களுக்கு அமைச்சர் நன்றிகளை தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவத்தை வைத்து வியாபார நோக்கோடு, நிவாரணம் சேகரிக்கும் குழுவினர் இ[illegible] அவதானமாக இருக்குமாறு அமைச்சரின் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# வாரம் ஒரு தகவல்

## அடையாளம்

" சேர் உங்களுக்கு என்னை அடையாளம் தெரியுதா"

"என்னப்பா இப்படிக் கேட்கிறாய்.... என்னிடம் படித்த பையன் தானே நீ....?"

"ஆமாம் சேர்! அ.... அது.... வந்து.... ஒரு விடயம் சேர்...!"

"என்னப்பா... இது .... வார்த்தை திக்கித்திக்கி வருகுது.... உடம்பும் நடுங்குது.... நீ ஏதோ தப்பு பண்ணியிருக்கிறாய்!"

"எப்படி சேர் சொல்றீங்க?"

"நான் சொல்லவில்லை... பஞ்சதந்திரம் சொல்கிறது. ஒரு குற்றவாளி எப்படி இருப்பான் என்பதற்கு சில அடையாளம் உண்டு என்று சொல்கிறது"

"அப்படியா சேர்!"

"ஆமாம்... குற்றம் செய்துவிட்டு பயந்து போய் இருப்பவனுக்கு முகம் வெளிருமாம்.... பேச்சுக் குழறுமாம்.... மிரண்டபார்வை.... ஒடுங்கிய கர்வம்..... தள்ளாடித் தள்ளாடி நடப்பான்.... முகம் வெளுத்துப் போகும்.... நெற்றியில் வியர்த்துக் கொட்டும்..... வார்த்தைகள் திக்கும்.... உடல் நடுங்கிக் கொண்டிருக்கும்.... பார்வை கீழ் நோக்கிச் செல்லும்.... இந்த வெளிப்படையான அடையாளங்களைக் கொண்டு குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று சொல்கிறது பஞ்சதந்திரம்! இந்த அறிகுறியெல்லாம் இப்பொழுது உன்னிடம் இருக்கிறது. என்ன விடயம் சொல்... எதற்காக என்னைத் தேடி வந்தாய்?

" ப... ப... பத்திரிகை கொடுக்க..."

"என்ன பத்திரிகை?"

"கல்யாணப் பத்திரிகை!"

"யாருக்குக் கல்யாணம்!"

"எனக்குத்தான் சேர்!"

"அடப்பாவி.... அதற்காகவா இப்படி நடுங்குகிறாய்? சந்தோசப் படவேண்டிய விடயமல்லவா இது. பத்திரிகையைக் கொண்டுவா இப்படி...! பொண்ணு யாரு?"

" உ... உங்க மகள்தான் சேர்....!"


தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

969




# வேட்டை மன்னன்!

சுட்டி

விடாமல் துரத்தியபோது கல் தடுக்கி விழுந்திச்சு நரி!




அந்த வழியாக வந்த குரங்கு...







குரங்கு போனதும் அந்தப் பக்கமாக யானை வந்திச்சு!




என்னப்பா ஆச்சு!

(தொடரும்)

11.2014 02

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1570 - வட கடலில் ஏற்பட்ட சூறாவளி காரணமாக ஒல்லாந்தில் 1,000 பேர் வரையில் இறந்தனர்.
- 1834 - முதன்முதலாக இந்தியாவிலிருந்து 75 ஒப்பந்தத் தொழிலாளர்கள் மொரீசியஸ் சென்றனர்.
- 1868 - நியூசிலாந்து சீர நேரத்தை நாடு முழுவதும் அறிமுகப்படுத்தியது.
- 1889 - வடக்கு மற்றும் தெற்கு டகோட்டா ஐக்கிய அமெரிக்காவின் 39 ஆவது, 40 ஆவது மாநிலங்களாக முறையே இணைந்தன.
- 1899 - தென்னாபிரிக்காவில் போவர்கள் பிரித்தானியர்கள் வசமிருந்த லேடிஸ்மித் பகுதியை 188 நாட்கள் பிடித்து வைத்திருந்தனர்.
- 1914 - ரஷ்யா ஓட்டோமான் பேரரசு மீது போரை அறிவித்தது.
- 1917 - பிரித்தானியாவின் வெளிநாட்டு விவகாரங்களுக்குப் பொறுப்பான செயலாளராக இருந்த ஆதர் பெல்ஃபர் வெளியிட்ட பிரகடனத்தில் யூதர்களுக்கு பாலஸ்தீனத்தில் ஒரு தேசியத் தாயகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை இங்கிலாந்து அரசு ஆதரிக்கிறது எனக் கூறப்பட்டது.
- 1930 - ஹைலி செலாசி எதியோப்பியாவின் பேரரசன் ஆனான்.
- 1936 - இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினி ரோம்-பேர்லின் அச்சு என்ற அச்சு அணியை அறிவித்தான்.
- 1936 - பி.பி.சி நிறுவனம் தொலைக்காட்சி சேவையை ஆரம்பித்தது.
- 1936 - கனேடிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டது.
- 1953 - பாகிஸ்தான், பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 2000 - பன்னாட்டு விண்வெளி நிலையத்துக்கு முதன் முதலாக விண்வெளி வீரர்கள் சென்றடைந்தனர்.

### பிறப்புகள்

- 1795 - ஜேம்ஸ் போக், ஐக்கிய அமெரிக்காவின் 11 ஆவது அரசுத் தலைவர் (இ. 1849)
- 1815 - ஜார்ஜ் பூல், ஆங்கிலேயக் கணிதவியலாளர் (இ. 1864).

### இறப்புகள்

- 1903 - பரிதிமாற் கலைஞர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகள், தமிழறிஞர் (பி. 1870).
- 1950 - ஜோர்ஜ் பேர்னாட் ஷா, ஐரிஷ் எழுத்தாளரும் நோபல் பரிசு பெற்றவரும் (பி. 1856).
- 1966 - பீட்டர் டெபாய், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1884)
- 1978 - ஏ. பெரியதம்பிப்பிள்ளை, மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழறிஞர் (பி. 1899)
- 2007 - சு. ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் (பி. 1967)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்

112

..சம்பளத்தில் 75% அபராதம் மற்றும் ஒரு போட்டியில் இருந்து விலகல் ஆகிய வைதான் தண்டனை. குறிப்பாக அதிக அளவு அப்பீல் கேட்டதாலும் அம்பயர் முடிபுகளை எதிர்த்து முகம் சுளித்ததாலுமே இந்த தண்டனைகள் என்று டென்னிஸ் விளக்கம் கூறியிருந்தார். சச்சின் மீதான குற்றச்சாட்டு விசித்திரமானது. அவர் தனது விரல் நகத்தால் பந்தின் தையல்களைப் பிரித்து அதைச் சேதப்படுத்துகிறார் என்பதுதான் அந்தக் குற்றச்சாட்டு. ஆனால், சச்சின் அப்படிச் செய்யக்கூடியவர் இல்லை என்பது அனைவருக்கும் தெரிந்ததே. இதுகுறித்து நாம் ஏற்கனவே விரிவாக அலசியிருந்தது நினைவிருக்கலாம். எனவே, கிரிக்கெட் வாரியத் தலைவர் ஜக்மோகன் டால்மியா உடனடியாக டென்னிஸ் மீது கண்டன அறிக்கை விடுத்தார். இந்தியாவில் இருந்து இந்த அளவிற்கு கண்டனம் வரும் என்று எவருமே எதிர்பார்க்கவில்லை. சச்சின் கிரிக்கெட் மீது எந்த அளவு மரியாதை வைத்திருந்தாரோ அதைவிட அதிகமாக இந்த நாடு அவர்மீது அளவு கடந்த மரியாதை வைத்திருக்கிறது என்பதற்கு இந்தியா முழுவதிலும் இருந்து பறந்த கண்டனக் குரல்களே சாட்சி.

> சச்சின் கடவுள் தயவுசெய்து அவருடன் என்னை ஒப்பிடாதீர்கள் நான் அவருடைய பக்தன். நான் கிரிக்கெட் விளையாடக் கற்றுக் கொண்டதே அவரைப் பார்த்துத்தான்.

இனவெறி காரணமாகத்தான் தென் ஆப்பிரிக்கா ஒதுக்கி வைக்கப்பட்டு இருந்தது. வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறிய கதையாக மீண்டும் தென் ஆப்பிரிக்கா தனது புத்தியைக் காட்டத் துவங்கியது. மெக்ராத், போலாக், டொனால்ட், ஆண்ட்ரூ, பாண்டிங் ஆகியோர் தவறு இழைத்தபோது அவர்களுக்கு எந்த தண்டனையும் வழங்கவில்லை. ஆனால், சச்சின் உள்ளிட்ட ஆறு ஆட்டக்காரர்களுக்குத் தவறே செய்யாத நிலையிலும் தண்டனை. மேலும் கிரிக்கெட் விளையாடும் போது ஏதேனும் தவறு இருந்தால் அதைக் கண்டு பிடித்து கூறவேண்டியவர்கள் அம்பயர்கள்தான். ஆனால், வெள்ளைக்கார ஆட்டக்காரர்கள் என்றால் தனி மரியாதை. மற்றவர்கள் என்றால் ஏளனம் என்ற கொள்கையை தென் ஆப்பிரிக்கா மாற்றிக் கொள்ளவில்லை என்பது புலனாகியது. சச்சின் உள்ளிட்ட ஆறு இந்தியர்களுக்கு ஏற்பட்ட தனிப்பட்ட அவமானம் இல்லை இது. இந்திய நாட்டிற்கே ஏற்பட்ட அவமானமாகவே இதைக் கருத வேண்டும் என்று கிரிக்கெட் வாரிய தலைவர் டால்மியா நினைத்தார். எனவே, தவறான தீர்ப்பு அளித்த டென்னிஸை உடனடியாக மாற்ற வேண்டும். இல்லை

## சச்சின் கடவுள்- நான் பக்தன்!



சச்சின் விடயத்தில் ஆட்டத்தை வீடியோவில் பதிவு செய்து கொண்டிருந்த ஒரு டி.வி. நிகழ்ச்சித் தயாரிப்பாளர் சச்சின் பந்தை தேய்க்கிறார் என்று அரையும் குறையுமாக ஏதோ புகார் கொடுக்க அதை அப்படியே டென்னிஸ் ஏற்றுக் கொண்டு தண்டனை வழங்கியிருக்கிறார். இந்த ஒரு தலைப்பட்ச முடிபு எடுத்ததன் மூலம் என்றால் எங்கள் இந்திய அணியைத் திரும்ப அழைத்துக்கொள்வோம் என்று தென் ஆப்பிரிக்கா கிரிக்கெட் வாரியத்துடன் பகிரங்கமாகவே டால்மியா மோதினார். டென்னிஸ் மாற்றப்பட்டார். ஆனாலும், தென் ஆப்பிரிக்காவின் வெற்றியை மாற்ற முடியவில்லை. தொடரை தென் ஆப்பிரிக்கா வென்றது.

இந்தியா திரும்பிய சச்சினுக்கு அந்த ஆண்டிற்கான காஸ்ட்ரோல் இந்திய கிரிக்கெட் வீரர் விருது வழங்கப்பட்டது. அப்போது ஏற்புரையில் சச்சின் பேசியதாவது, நான் பந்தைச் சேதப்படுத்தவே இல்லை. பந்தின் மீது இருந்த மண்ணையும் அழுக்கையும்தான் துடைத்துக்கொண்டிருந்தேன். புதிய கிரிக்கெட் விதிகளின்படி பந்தைத் துடைக்கும் முன்பு அம்பயர் அனுமதி பெற்று அவர் முன்னணியில்தான் துடைக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியாது என்று அப்பாவியாகக் கூறினார். இந்தப் பிரச்சினை ஓய்வதற்கு முன்பாகவே அடுத்த போட்டிகளுக்காக இங்கிலாந்து குழு இந்தியா வந்து இறங்கியது. சென்னையில் பிறந்த நசீர் ஹுசேன் தான் இங்கிலாந்தின் கேப்டனாக நியமிக்கப்பட்டிருந்தார்.

கே. ரமேஷ் (தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

...நீங்கள் உயிருள்ள பிணம்போல இருக்கிறீர்கள். நீங்கள் தெருக்களில் சண்டையிடத் தயாரானால், முழு உயிர்ப்புடனும் விழிப்புடனும் இருக்கிறீர்கள்.

மீண்டும் புரிந்துகொள்ளுங்கள், பிரபஞ்ச இருப்புத் தன்மையின் கருணைமிக்க பார்வையின் கீழ்தான் போரிடுகிறோம் என்பதைத் தெரிந்து

## கவனத்தேவையை விட்டுவிடுதல்

கொண்டு போரிட்டால் நீங்கள் திறந்த வெளியில் போரிடுவதற்காக அஞ்ச வேண்டியதில்லை; நீங்கள் பயப்பட வேண்டிய தேவையில்லை; ஏனெனில், நீங்கள் வீழ்ந்தாலும் அதன் மடியிலேதான் விழுவீர்கள்! ஆனால் உங்களுக்கு எழுந்துநின்று போரிடும் தைரியம் வேண்டும். அது உங்கள் தரப்பிலிருந்து நீங்கள் எடுத்து வைக்கும் அடி, மற்றதை பிரபஞ்ச இருப்புத் தன்மை பார்த்துக்கொள்ளும்.

உங்களுக்கு உண்மையை அறிந்து கொள்ள, ஆர்வத்தைவிட.... கொஞ்சம் அதிகமாக இருந்தால் இது நிகழும். வெறும் ஆர்வம் மட்டும் போதுமானதல்ல. உங்களுக்கு வெறும் ஆர்வம் மட்டுமே இருந்தால், நீங்கள் வருவீர்கள். நடிப்பீர்கள் சென்று விடுவீர்கள். உங்களுக்கு ஆர்வத்தை விடக் கொஞ்சம் அதிகமாக இருக்குமானால் உங்கள் கொழுந்துவிட்டு எரியும் ஆசை எப்பொழுதாவது ஒரு முறை மேலே வருமானால் நீங்கள் உண்மையைத் தெரிந்துகொள்ளவும் உணரவும் தொடங்கலாம். உங்களுக்கு வெறும் ஆர்வம் மட்டுமே இருந்தால், அங்கு பக்தியோ அர்ப்பணிப்போ



இருக்காது. அங்கே நெருப்பு இருந்தால் பக்தியும் அர்ப்பணிப்பும் இருக்கும். மீண்டும் மீண்டும் அர்ப்பணிப்பே உங்களை இங்கு கொண்டு வருகிறது.

என்னிடமிருந்து ஓடிவிட உங்க[illegible] எவ்வளவு முடியுமோ அவ்வளவு முயன்று பாருங்கள்; உங்களால் முடியாது! வேண்டுமானால் கொஞ்ச நாட்கள் விலகியிருக்கலாம்.

ஆனால் உங்களுக்குள் எரியும் ஆசையானது, மீண்டும் மீண்டும் உங்களை என்னிடம் இழுத்துக் கொண்டு வந்துவிடும்.

உண்மையைக் கண்டுபிடிக்க உங்களுக்குள் இந்த தீவிரத்தன்மை வேண்டும். பதிலுக்கு எதையும் கேட்காமல் உங்களால் எவ்வளவு

## ஆன்மீகம் 62


முடியுமோ அவ்வளவு அன்பாக இருங்கள். ஒரு காரணத்திற்காக அன்பு செலுத்துவது அன்பல்ல; அது ஒரு வெறும் வியாபாரம். ஒரு காரணமுமின்றி அன்பு செலுத்த முடியுமானால் உங்கள் வழியில் வரும் "எதையும் யாரையும் நேசிக்க முடியுமானால், நீங்கள் அற்புதமான உள் சக்தியையும் அழகையும் வெளியிடுவீர்கள். நீங்கள் உடல் அளவில் அழகாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், வெறுமனே அழகாகத் தோன்றுவீர்கள். இன்னொரு விடயம்; நிபந்தனையற்ற அன்பு உங்களுக்கும் எதையும் திரும்பத் தராது என்று நினைக்காதீர்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுத் திட்டம்-2015




....இச்செயற்பாடுகளில் பெரும் பாலானவை நடுத்தர காலத்தில் ஏற்றுமதிச் சந்தைகளுக்கு மாற்றக் கூடிய ஆற்றலினைக் கொண்டுள் ளன.

வெளிநாட்டு முதலீடானது ஏறக் குறைய 2 மில்லியன் ஐ.அ.டொல ராகக் காணப்படுகின்றது.

அமுலுக்கு வருகின்ற சுங்கத் தீர்வைகள் அத்தகைய பெறுமதி உருவாக்கம் இறக்குமதிக்கு போட்டி யான கைத்தொழில்களின் விரிவாக் கத்திற்கு வசதியளிக்கும்.

இறக்குமதிப் போட்டி கைத் தொழில்களினை ஊக்குவிப்பதற்கு இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதி கள் மீது தர நிர்ணயங்கள் அமுல் படுத்தப்படும்.

வெளிநாட்டு வர்த்தகத்தில் நியா யமான நடைமுறைகளை உறுதிப் படுத்தும் வகையில் தரம்குறைந்த பொருட்களுக்கெதிரான சட்டவாக்க மொன்று மிகவிரைவில் பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

ஏற்றுமதிக் கைத்தொழில்கள் 12 சதவீத வளர்ச்சியினை காட்டியது. ஆடைக் கைத்தொழில் 15 சதவீத வளர்ச்சியினைக் காட்டியதுடன் இவ்வருடத்தில் 5,000 மில்லியன ஐக்.அமெ.டொலர் ஏற்றுமதி சம்பாத் தியத்தினை பெற்றுக் கொள்ளும் எனவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை, இறப்பர் மற்றும் கறுவா உற்பத்திகள் ஏற்றுமதி வருமானத்தினை 3,000 மில்லியன் ஐக்.அமெ.டொலராக அதிகரிக்கச் செய்தன.

மென்பொருள், இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணம், கைத்தறிப் பொருட்கள் மற்றும் இனிப்புப் பண்ட கைத்தொழில்கள் அதிகரிப்பினை காட்டின.

ஏற்றுமதி சம்பாத்தியங்கள் இவ் வருடத்தில் 11,500 மில்லியன் ஐக்.அமெ.டொலர்களாக இருக்கு மென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

திறன் வகுதிகளைச் சேர்ந்தவர் களின் எண்ணிக்கை அதிகரிப்பு வெளிநாட்டு வேலைவாய்ப்பினை அதிகரித்ததுடன் வீட்டுப்பணிப் பெண களாக சென்றவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தது.

இவ்வருடத்தில் வெளிநாட்டு ஊழிய வருமானம் ஏறக்குறைய 7,000 மில்லியன் ஐக்.அமெ.டொலர் களாக காணப்படுமென எதிர்பார்க் கபபட்டுள்ளது.

அரசாங்கம் விலைகள் மற்றும் உணவு வழங்கலில் ஸ்திரத்தன் மையினை பேணியுள்ளது.

வருடாந்த சராசரி பணவீக்கம் 4.2 சதவீதமாகக் காணப்பட்ட துடன் வரட்சி காணப்பட்ட போதி லும் இவ்வருடத்தின் பணவீக்கத் தினை நடுத்தர ஒற்றை இலக்க பணவீக்கமாக பாதுகாப்பதற்கு எம்மால் முடியுமாக இருந்தது.

நாணயமாற்று விகிதம் ஒப்பீட்டு ரீதியில் வரலாற்றில் என்றுமில் லாதவாறு சராசரி 10 சதவீதமாகக் காணப்பட்டது.

அத்துடன் நாம் விவசாயிகளு க்கு உருளைக்கிழங்கு, வெங்கா யம், மிளகாய், பாசிப்பயறு, பசும்பால என்பவற்றிற்கான உத்தரவாத விலையினை அறிமுகப்படுத்தி னோம்.

இவை எமது விவசாயிகளின் புதிய வருமான மூலங்களாகக் காணப்பட்டதுடன் அவர்களை பன் முகப்படுத்தப்பட்ட பயிர்ச்செய்கையில் ஈடுபடச் செய்தது.

பொருளாதாரம் மற்றும் அரசிறை நடவடிக்கைகள் பற்றிய விபரங் களையும் தகவலையும் வழங்கு கின்ற இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சின் அறிக்கைகளை இங்கு நான் சமர் ப்பிக்கின்றேன்.

### 04. 2020 மற்றும் அதற்கடுத்த அபிவிருத்தி இலக்குகள்

கௌரவ சபாநாயகர் அவர்களே, 2005 இல் 80 சதவீதமாகக் காணப் பட்ட வேலைவாய்ப்பு மட்டம் 2014 இல் 95 சதவீதத்தினை அடைந் துள்ளதுடன் 2020 இல் எமது ஊழிய இலக்கானது ஊழியப்படையில் 97 சதவீதமாக காணப்படும் வகையில் நிலையானதாக இருக்கும்.

எமது நோக்கானது க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தரத தினை அடைந்த மாணவர்களை பட்டப்படிப்புகளுக்கான உயர் கல்வி யில் அல்லது எமது ஊழிய உபாயத் தில் குறிப்பீடு செய்யப்பட்ட இலக்காக காணப்படும் எமது ஊழியப் படை யின் அறிவு மற்றும் ஆற்றல்களை வாழ்க்கைத் தொழிற் கல்வியின்பால் ஈடுபடுத்துவதாகும்.

இளைஞர் வேலைவாய்ப்பினை 95 சதவீதமாக பேணுவது எமது ஊழிய உபாயத்தின் விசேட இலக் கொன்றாகும்.

முன் பள்ளிக்கூட சிறுவர் அபி விருத்தி, ஆரம்ப மற்றும் இரண் டாம் நிலைக்கல்வியில் 100 சதவீத பாடசாலை அனுமதி, 100 சதவீத எழுத்தறிவு மற்றும் 90 சதவீத கணனி அறிவு, ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞானத்தில் அறிவு அத் துடன் அடிப்படை தொழிற்பயிற்சி ஆற் றல்கள் மற்றும் விளையாட்டுத் துறையில் சிறுவர்களின் ஈடுபாடு என்பன எமது பொதுக் கல்விக்கான இலக்குகளாக இருக்கும். மனித வளங்கள் துறையில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் உயர்ந்த நிலை யினை நோக்கி செல்வதே 2020 இல கல்வியில் எமது முக்கிய இலக்கா கும்.

அபிவிருத்தியடைந்த நாடுகளின் சுகாதார தரத்திற்கு சமமான சுகா தார தரத்தினை விருத்தி செய்வதே சுகாதார துறையின் இலக்காகும்.

இந்த வகையில் எவ்வித தாய் சேய இறப்பும் இடம்பெறாத நாடொனறாக மாற்றுவதற்கு எமது சிறுவர்கள் மற்றும் தாய்மாரின் சுகாதார பரா மரிப்பினை அதிஉயர்ந்த மட்டத்தில் பேணும்வகையில்விருத்தி செய்வதும் எமது இலக்காகும்.

சிறுவர்களுக்கு மத்தியில் போஷா க்கு குறைபாட்டினை இல்லாதொழிப் பது உயர்ந்த முன்னுரிமை வழங்க வேண்டிய விடயமொன்றாகும்.

அதேபோன்று எமது மக்களை தொற்று மற்றும் தொற்றா நோய் களிலிருந்து பாதுகாப்பதற்கான முயற்சிகள் இரட்டிப்பாக்கப்படுவது டன் ஆயுட்கால எதிர்பார்க்கை 2020 அளவில் 80 வருடங்களைவிட கூடுதலாக அதிகரிப்பதாகும்.

2014 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்காக விஞ்ஞான அறிவினை ஊக்குவிப்ப தற்கு தேசிய விஞ்ஞான நிலைய மொன்றினை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் மற்றும் தனியார் துறை ஒத்துழைப்பானது உயர் தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி தயாரிப்புத் துறையில் நனோ தொழில் நுட்பத்தினை ஊக்குவிப்பதற்காக விஞ்ஞானப் பூங்கா ஒன்றினை உருவாக்குவதற்கு கடுமையாக உழைத்துள்ளது.

உயர் விஞ்ஞானத்தில் விசேட ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தியினை ஊக்குவிப்பதற்கு அணுசக்தி அதிகார சபையொன்று உருவாக்கப்படும்.

கணக்கீடு, வர்த்தகம், நிதி, சட்டம், மருத்துவம், தகவல் தொழில் நுட்பம், பொறியியல், கட்டடக் கலை போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள உயர்தொழில் புரிநர்கள் பலர் நியாய மானளவு அதிகரித்துள்ளனர்.

2020 இல் பல்கலைக்கழக அனுமதியினை 100,000 ஆக அதிகரிப்பதும் எமது பல்கலைக் கழகங்களை ஆசியாவில் 30 இற்குள இடம்பெறச் செய்வதும் எமது இலக் காகும்.

விசேட வைத்தியசாலைகளில் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி செயற் பாடுகளுக்கு வசதியளிப்பதுடன் மருந்துப் பொருட்கள் ஒழுங்குவிதி யினை உருவாக்குவதற்குமான தேசிய மருந்துக் கொள்கை உரு வாக்கப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்திக்கு சமாந்தர மாக மருத்துவ பட்டப்பின் படிப்பு பாடப் பரப்பினை விரிவாக்குவதற் கும் மருத்துவத்துறையில் பட்டப் பின் படிப்புகளுக்கான அனுமதியினை இரட்டிப்பாக்குவதற்கும் நாம் முன் மொழிந்துள்ளோம்.

மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகமானது பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சி மற்றும் உயர் கற்கை களுக்காக அருகாமையிலுள்ள போதனா வைத்தியசாலைகளுடன் இணைக்கப்படுவதுடன் எமது சமூ கம் எதிர்நோக்குகின்ற சமகால நோய்களான சிறுநீரக நோய், போஷா க்கு குறைபாடு என்பவற்றிற்கு சிகி ச்சை அளிக்கக் கூடிய மருத்துவ விசேட நிபுணர்களை அதிகரிக்கும் வகையில் அடுத்து 3 வருடங்களுக் குள் சகல வசதிகளையும் கொண்ட நிறுவனமாக மாற்றப்படும்.

ஏறக்குறைய ஒரு பில்லியன் ஐக்.அமெ.டொலர்களை வெளிநாட்டு வருமானமாக சம்பாதிக்குமெனவும் ஏறக்குறைய 100,000 வேலை வாய்ப்பினை உருவாக்குமெனவும் எதிர்பார்க்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பத் துறை 2020 இல் இலங்கையினை உலகில் தகவல் தொழில்நுட்ப துறைக்கு பெயர் போன இடங்களில் ஒன்றாக மாற்றுவதுடன் இளைஞர்களுக்கு பிரதான வேலை வாய்ப்பினை பெற்றுக் கொடுக்கும் துறையாகவும் 5 பில்லியன் ஐக்.அமெ. டொலராக வெளிநாட்டு வருமானத் தினை அதிகரிப்பதும் எமது இலக் காகும்.

ஹம்பாந்தோட்டையிலுள்ள தகவல் தொழில்நுட்ப வலையமானது சர்வ தேச தகவல் தொழில்நுட்ப சேவை யினை வழங்குவதன் மூலம் இலங கையினை தென்னாசியாவில் வளர் ந்து வரும் தகவல் தொழில்நுட்ப மையமாக கருதுமளவிற்கு மாற்றப் படும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, பொருளாதார வளர்ச்சியானது சாதா ரண மற்றும் குறைந்தளவு பொரு ளாதார நன்மையடையுனர்களின தும் வாழ்க்கைத் தரத்தினையும் வருமானத்தினையும் மேம்படுத் தாத வரை அப்பொருளாதார வளர் ச்சியில் எவ்வித அர்த்தமும் இல்லை என்பதனை இப்பாராளுமன்றத்தி லும் ஏனைய சர்வதேச மாநாடு களிலும் நான் குறிப்பிட்டுள்ளேன்.

எனவே, குறை வருமானம்பெறும மக்களின் வருமானம் மற்றும் வாழ் வாதார வாய்ப்புக்களினை அதிகரிப்பது எமது இலக்காகும்.

அவர்களது வருமானத்தினை உயர்த்துவது மாத்திரம் எமது நோக்க மல்ல. ஆனால், சூழல் தொடர்பான சவால்கள், தொற்றாத நோய்கள், அங்கவீனம் போன்ற அவர்களது பாதிப்புக்களையும் இல்லாதொழிப்ப துடன் தரமான குடிநீரினைப் பெற் றுக் கொள்ளல், மரியாதையான வீடு மற்றும் துப்பரவேற்பாடு, பாடசாலை மற்றும் வைத்தியசாலை வசதி களை இலகுவாக அடைந்து கொள் ளல் போன்றவற்றினை முன்னே ற்றுவதுமாகும்.

2020 இல் நாம் எமது ஏற்றுமதி இலக்குகளை 20 பில்லியன் ஐக்.அமெ. டொலராக திட்டமிட்டுள்ளோம். உயர் பெறுமதி தேயிலை, ஆடை மற்றும் கைத்தறி உற்பத்திகள் மற்றும் இறப்பர் பொருட்கள் என்பவற்றின் ஏற்றுமதி சம்பாத்தியத்தினை 2020 இல் 15 பில்லியன் ஐக்.அமெ.டொல ராக அதிகரிப்பதும் எமது நோக்க மாகும்.

தேயிலை, ஆடை, கறுவா ஏற்று மதியில் இலங்கையினை உலகி லுள்ள உயர்தர பொருட்களை உற் பத்தி செய்யும் முதல் 10 நாடுகளில் ஒன்றாக 2020 இல் மாற்றுவதும் எமது நோக்கமாகும்.

இயற்கை இறப்பர், கறுவா மற்றும வாசனைத் திரவியங்களின் ஏற்று மதி உயர்தரம் கொண்டதாக பேணப படுவதுடன் அபிவிருத்தியில் எமது சுற்றாடல் மற்றும் உயிரியல் பல் வகைத்தன்மை அக்கறையினை ஊக்குவிபபதுமாகும்.

இலங்கை கறுவாவினை இட அமைவு அடையாளத்தினை அடிப படையாகக் கொண்ட குறிப்பீடு செய் யப்பட்ட உற்பத்தியொன்றாக பிரகட னப்படுத்துமாறு உலக வர்த்தக அமைப்பிடம் நாம் கோரிக்கை விடுத் துள்ளோம்.

எமது மக்களில் பெரும்பாலான வர்கள் சிறுபற்று நில உடமையா ளர்களாக காணப்படுகின்றனர் என்ற வகையில் பரந்த அடிப்படையிலான அபிவிருத்தியின் நன்மையினை அவர்கள் பெற முடியுமாகவுள்ளது.

பழங்கள், மரக்கறிகள், கீரை மற்றும் கோழி வளர்ப்பு என்பவற் றினை ஏற்றுமதிச் செயற்பாடுகளாக வும் எமது உற்பத்தியாளர்கள் சர்வ தேச தராதரங்களை ஈடுசெய்யக் கூடிய வகையில் இவ்வுற்பத்திகளை அபிவிருத்தி செய்யும் வகையிலும் ஊக்குவிப்பதும் எமது விருப்பமாகும.

அன்னாசி, மாங்காய், பப்பாசி, வாழைப்பழம், ட்ரகன் பழம் மற்றும ஸ்ரோபரி என்பவற்றின் ஏற்றுமதி 2020 இல் 500 மில்லியன் ஐக். அமெ.டொலர்களாக காணப்படு மென இலக்கிடப்பட்டுள்ளது.

இலங்கை கனிய மணல், கிற பைட், இல்மனைட் மற்றும் இரத் தினக்கல் போன்ற உயர் பெறுமதி யுடைய பொருட்களின் ஏற்றுமதியி லும் சிறந்து விளங்குகின்றது.

எனவே, இந்த பெறுமதியான இயற்கை வளங்கள் உள்நாட்டில் முழுமையான பெறுமதி சேர்ப் புடன் தயாரிப்பு கைத்தொழிலிலிரு ந்து சிறந்த ஏற்றுமதி வருமானத் தினை பாதுகாக்கும் வகையில் முழுமையான சுற்றாடல் விதிகளு க்கு உடன்பட்டு ஏற்றுமதி செய்யப் படுதல் வேண்டும்.

கப்பல் மற்றும் படகு கட்டுதல், இயந்திரங்கள் மற்றும் உபகர ணங்களில் ஏற்றுமதிச் செயலாற்று கையானது 2020 இல் 20 பில்லி யன் ஐக்.அமெ.டொலர்களைவிட அதிகமான ஏற்றுமதிகளை தயாரி த்த பெறுமதியினை அதிகரிக்கும் வகையில் உயர் பொறியியல் அந்த ஸ்துடைய கைத்தொழிலாக வளர வேண்டியுள்ளது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழுந்தோடொடிந்து போன....



மண்ணுக்குள் மூச்செறிந்து
மரணித்துப்போன– எம்
மலையகத்து
உறவுகளுக்காய்
மண்டியிட்டு
வேண்டுகின்றோம்
இறைவனிடம்

மண் சரிவொன்று
எம் இனத்தின் வாழ்
விடத்தையல்ல
வாழ்வையே மூடிவிட்டதென
செய்தி வந்த போது
சாய்ந்து விட்டோம்

காய்ந்து விட்ட தொண்டை
நீருக்காய் ஏங்கியது போல்
மண்ணுக்குள் புதையுண்டு
மூச்செறிய நீர் பட்டபாட்டை
நினைக்கின்றோம்–எம்
மூச்சு வெடிக்கிறது

இரத்தம் உறிஞ்சும்
அட்டைகள் நடுவில்
கொழுந்து கிள்ளி
குடும்பம் காத்தீர்!
இலாபம் ஒட்டியிருந்த
அட்டைகளுக்குத்தான்

எனதருமை உறவுகளே!
நீர் தலைவன் என
நினைத்த எவரும்
கொழுந்து மலைதனில்
நித்தம் நித்தம்
செத்துப் பிழைக்கும்
உம் நிலையை யார்க்கும்
இயம்பவும் இல்லை
அதை அவர்
விரும்பவும் இல்லை

நாம் தொப்புள் கொடி
உறவுகள்!
முள்ளிவாய்க்காலில்
எம் இனம்
கொத்துக் குண்டில்
புதையுண்ட போது
அவர் மருந்தேனும்
வருந்தவில்லை

அவர் அதிகார வர்க்கத்தின்
அட்டையில் ஒட்டியபடி
விருந்துண்டனர்
வெற்றிக்காய்...

மண் சரிவில் எம்மினம்
மடிந்து போனதறிந்து
இடிந்து போனது எம்மனம்
இனி விடிந்து விடும் மேகம்
மடிந்த எம் இனம்
எழுந்து வந்திடுமா?

மாவை–நா.கஜேந்திரன்


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அரசியல், சினிமா
பொழுதுபோக்கு கேள்விகளை
சுருக்கமாக பெயர், முகவரி
குறிப்பிட்டு அனுப்பி
வையுங்கள்.




வியாசர் பதில்கள்
இல. 3, 2 ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

குறுந்தகவல் (SMS)
021 567 1532

Email
vijasarpathil@gmail.com



## கத்தி படம் வெற்றியா, தோல்வியா? படம் எப்படி?

Hi வியாசரே!

✉ த.மோகனரூபன், சுழிபுரம்

கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார் எனக்கூறுபவர்களுக்கு கடவுள் கையை பிடித்து வைத்திருக்கிறாரா என்று தெரியுமோ? கையை பிடித்தால்தானே விடுவதற்கு.

✎ தலைக்கு மேல் பெரிய கல்லைத் தூக்கி வைத்துக் கொண்டு கல்லில் இருந்து கையைவிட்டுப்பாரும் அப்போது புரியும். " தன் தலையில் தானே மண் ணள்ளிப் போடுவது" என்றால் என்னவென்று.

Hi வியா !

✉ வே.வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி

கண்ணீருக்கும் தண்ணீருக்கும் உள்ள ஒற்றுமை யாது?

✎ இரண்டும் பெண்ணில் இருந்துதான் உருவாகிறது. (நீங்கள் யோசிப்பது புரிகிறது பூமியை தாயென்று தானே கூறுகிறோம் அதுதான்)

அன்பின் வியாசரே!

✉ ந.மரியநாயகம், கொழும்புத்துறை

✎ இப்போதுள்ள ஆசிரியர்களுக்கும் மாணவர் களுக்கும் உள்ள ஒற்றுமை என்ன? வேற்றுமை என்ன?

நின்றவர் இருக்கிறார். இருந்தவர் நிற்கிறார் அவ்வளவுதான்.




Hai வியாசர்!

✉ பிரியா, கிளிநொச்சி

காதலித்து விட்டு காணாமல் போகும் ஆண்களைப் பற்றி?

✎ எரிகின்ற வீட்டில் பிடுங்கியது மிச்சம் என நினைத்த வர்கள் போலும்.

Hai சேர்!

✉ அச்சுதன், யாழ்ப்பாணம், சது , வவுனியா

கத்தி படம் வெற்றியா, தோல்வியா? படம் எப்படி?

✎ சமீபத்தில் வெளிவந்த விஜயின் படங்களில் நல்ல செய்தியைக் கூறியிருக்கின்ற அருமையான கதைக்களம் அமைந்திருக்கின்ற படம். மூன்றாம் உலகப்போர் நீருக்காக வெடிக்கும் என்பதை நாசூக்காக தெளிவுபடுத்தியிருக்கிறார் இயக்குநர். சபாஷ்...

## நடைபெறவுள்ள தேர்தலில் ஐ.தே.க. வெல்வதற்கு சாத்தியம் உண்டா?

Hi வியா அங்கிள்!

✉ யசித்தன், புத்தூர்

நடைபெறவுள்ள தேர்தலில் ஐ.தே.க. வெல்வ தற்கு சாத்தியம் உண்டா?

✎ மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கினால் அதுவே ஐ.தே.க.வின் தேல்விக்கு காரணமாகிவிடும்.

அன்பின் தோழா

✉ கௌரீசன், அல்வாய்

உங்க காதலிகிட்ட எப்ப காதல சொல்லப் போறீங்க?

✎ நானும் சொல்லலாம் என்று முயற்சிக்கிறேன். அவள் வெளியே வரும் போது பொல்லுடன்தான் வெளியே வருகின்றாள். என்ன செய்ய (எனக்கு 80; அவளுக்கு 75)

Hai வியாசர்!

✉ B.மதன், அல்வாய்

கவிதையை பொய் என்றும் அந்தக் கவிதை அப்பிடி இந்தக் கவிதை இப்பிடி என்று சொல்பவர்கள் பற்றி?

✎ குரைக்கிற நாய்கள் கடிக்காது.

Hi வியா

✉ கமரூன், கொடிகாமம்

2015 பட்ஜெட் என்ன சொல்றது?

✎ தேர்தல் ஒன்று வரப்போகிறது என்றுதான்

# ஏ-9 வீதியில் மரங்கள் இருந்த இடங்களில் ராணுவ முகாமும் அந்நியர்களுமேயுள்ளனர்

## வடக்கு மாகாண முதலமைச்சர் சுட்டிக்காட்டு

**ஏ-9 வீதியில் மரங்கள் இருந்த இடங்களில் இராணு வக் கடைகளும் இராணுவ முகாம்களும் அத்துடன் அவர்கள் கொண்டு வந்து குடியேற்றிய அந்நியர் களும் குடியிருக்கின்றார்கள். குடிமக்கள் செலவில் குளிர் காய்கின்றார்கள் என வடக்கு மாகாண முதல மைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

வடமாகாண விசய கமநல சேவை கள், கால்நடை, அபிவிருத்தி, நீர்ப்பாச னம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் மர நடுகை மாத அங்குரார்ப்பண நிகழ்ச்சி ஊர்கா வற்றுறை, நாரந் தனை, கணேச வித்தியாலயத்தில்நேற்று முற்பகல் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று முக்கியமான ஒருகைங் கரியத்தினுள் உள் நுழைகின் றோம். மழைகாலம் வந்துள்ள தால் எமக்குமிகஅத்தியாவசிமாக வேண்டியதான மரங்களை நட முயற்சிகள் மேற்கொண்டுள் ளோம். கடந்த சிலவருடங்களாக எமது மழை வீழ்ச்சியில் பின்னடைவைச் சந்தித்துவந்துள்ளோம். அதற் கானமுக்கியகாரணம் எம்மால் தறித்து, வெட்டி அப்புறப்படுத்தப்பட்ட பல நீண்ட காலமரங்களே. முன் னெல்லாம் ஏ-9 வீதியால் நாங்கள் வரும் போது அடர்ந்தகாடுகள் தெரு வின் இரு பக்கமும் இருப்பதைக் காணலாம்: வானளாவும் மரங்க ளைக் கண்டு எம் மனங்கள் குதூ கலிப்பன. இப்பொழுதோ நிலைமை மாறிவிட்டது. மரங்கள் பலதறித்து வெட்டிஎடுத்துப் போயாகிவிட்டது. போரின் உக்கிரம் சில இடங்களில் மரங்களைப் பொசுக்கிப் பட்டமரங் களாக்கிவிட்டன. ஏ-9 வீதியில் மரங்கள் இருந்த இடங்களில் இராணுவக் கடைகளும் இரா ணுவ முகாம்களும் அத்துடன் அவர்கள் கொண்டு வந்து குடியேற் றிய அந்நியர்களும் குடியிருக்கின் றார்கள். குடிமக்கள் செலவில் குளிர் காய்கின்றார்கள் அவர்கள்.

எனவேநாம் எமது வன மரங் களின் செறிவை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. அழிக்கப்பட்ட மரங்களுக்கு ஈடாகப் புதிய மரங் களை வளர்க்க நாம் கடமைப்பட் டுள்ளோம். அரசாங்கம் இம்மாதம் 15 ஆம் திகதியை தேசிய மரம் நாட்டு நாளாகப் பிரகடனப் படுத் தியுள்ளது. நாமோ இந்தமாதம் முழுவதையுமே மரம் நடுகை மாதமாக அறிமுகப்படுத்தியுள்ளோம்.

எம் வரலாற்றில் இம்மாதத்திற் குரிய பக்குவத்தைமரம் நாட்டிப் பறைசா ற்றுகின்றோம். பன்னிரு கரனின் பதம் பார்த்துப் பணிகின்றோம். மறை நதமனிதர்கள் போலாம் மறுத்தொ துக்க ப்பட்ட மரங்களும். மறுபடியும் மரங் கள் யாவும் மிகுந்திருக்க மரநடுகை யில் மதர்த்துநிற்கின்றோம்.

நாங்கள் மரம் நாட்டுகையில் சில பல விடயங்களைமனதில் கொள்ள வேண்டும். எப்பேர்ப் பட்டமரம் ஒருகுறிப்பிட்ட நிலத்திற் குஞ் சூழலுக்கும் பொருத்தமாகும், எம் மரத்தைவளர்ப்பதால் அங்கு வாழ் மக்களுக்குஅதுமிக அதிக நன்மைபய க்கும், பழவகைமரங் களா, நிழல் தருமரங்களா அல்லது விறகுக்கு உதவுந் தருக்களா உசித மானது என்பதை முதலில் தீர்மா னிக்க வேண்டும். பின்னர் நாட்டி யமரத்தைப் பராமரிப்பது எப்படி, யார் நீரூற்றுவது, நாடிச் செல்லும் மாட் டுக் கூட்டங்களிடம் இருந்து அதனைப் பாதுகாப்பது எப்படி, அம்மரத்தின் விபரங்கள் விபரப் பட்டியலில் விபரிக்கப் பட்டுள்ளதா போன்றவிடயங்களைஆ ராய்ந்து பார்த்து முறையான தீர்மானத்தை நாங்கள் எடுக்கவேண்டும்.

மேலும் சூழல் மாசுபட்டுப் போவ தைத் தடுக்கவும் மரங்கள் வேண் டியுள்ளன. அதுமட்டுமல்ல. எமது கோளின் மிகமுக்கிய வளமான வனமர இருக்கைகள் உலகின் சுமார் 2 சதவிகித நிலத்தை மட் டுமே மூடி நிற்கின்றன. இவ்வுலகில் காணப்படும் ஜீவன்களில் பாதிக்கு மேற்பட்டவை இவ்விடங்களையே தமது வாழ்விடங்களாக வைத்துள் ளன. ஆகவே எம்மைச் சுற்றியுள்ள தாவரங்களாவன பறவைகள், மிருகங்கள் மற்றும் ஜந்துக்கள் பலவற்றிற்கு வாழ்விடங்களாக அமைவதை நாம் மறத்தல் ஆகாது. மனிதன் மரந்தறித்து, நிலத்தில் மண் நிரப்பி, மாடமாளிகைகள் அமைப்பதால் அவன் சுயநலத்து டன் வாழலாம். ஆனால் சுற்றுச் சூழலுக்குஅவன்பகைவன் ஆகின் றான்என்பதை நாம்மறத்தல்ஆகாது. இதனால் தான் பலர் பல்விதபாரிய தொழில் அகங்களைத் தோற்று விக்க எம்மைநாடிவந்திருந்தாலும் நாம் மிகக் கவனமாக அவதான மாக அவற்றின் சுற்றுச் சூழல் பாதிப்பைப் பற்றிக் கவனித்துப் பார்த்தேஉள்வரஉதவுகின்றோம். பாரியதொழில் அகங்கள் பலருக்கு வாழ்வாதாரங்களை வழங்குவன என்பதுஉண்மைதான். ஆனால் குறுகியகாலநலன்களையே குறியா க வைத்து வருங்காலச் சந்ததியி னரை நாம் வருத்தத்தில் ஆழ்த்தி விடக் கூடாது. ஏற்கனவே எமது நிலங்கள், சுற்றுச் சூழல், நிலத்தடி நீர் ஆகியவை மாசடைந்துள்ளன. உதாரணத்திற்கு மின்சாரம் வேண் டுமென்றதால் பாரிய எண்ணெய் தேக்கக் கிடங்குகளைச் சுன்னா கத்தில் வடிவமைத்ததால் இன்று எண்ணெயானது நிலத்தினுள் கசிந்து சென்றுசுன்னாகத்தில் மட்டு மல்ல மல்லாகத்திற்கு அப்பாலும் நிலத்தடிநீரைமாசுபடுத்தியுள்ளது.

எனவே மரநடுகைஎன்பது வெறும் மரங்களைநாட்டும் ஒருகாரியம் மட்டுமல்ல. மனிதர்களை வாழ வைக்கும் ஒருபுனித கைங்கரி யம். வருங் காலத்தைவள முள்ள தாக அமைக்கஎடுக்கப்படும் வலுவான ஒருநடவடிக்கை. வரும் சமுதாயம் சுயநலமின்றிசுற்றுச் சூழலைச் சுத்தப்படுத்திசுகமான வாழ்வை சுற்றத்தார்க்குஅமைத்துக் கொடுக்க வழிவகுக்கும் ஒருஉத்தமப் பணி. சுயநலம் மறந்து பொதுநலம் மலர நாம் மேற்கொள்ளும் சுரணை யானகைங்கரியம் இது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## வலம்புரி

எம்மவரை நிதர்சனமாய்
பிரதிபலிக்கும் தளவாடியாய்
களங்களில் நடப்பவற்றை
கருத்தினில் சேர்க்கும்
கதிரவன்தான் எம் வலம்புரி
தர்மத்தின் வாழ்வு தன்னைச்
சூதுகவ்வும் மறுபடியும்
தர்மமே வெல்லும் என்பதை
நிலை நிறுத்த அன்று கிருஷ்ணன்
கையில் எடுத்த சங்கை இன்று
கையில் பேனாவால் நிறுவுகிறது
எம் வலம்புரி
நாளொரு செய்தி சொல்லும்
நம்மவரை விளிக்கச் செய்யும்
பொழுதொரு வண்ணமுமாய்
வீரமூட்டும் பொங்குதமிழ்
தாளே எம் வலம்புரி
நித்தமும் எம் கையினில் தவள
வித்தகமாய் தன்னையும் காத்து
உத்தமமாய் நடுநிலை தவறாத
நாளிதழாய் புத்தியும் புகட்டி
புதுவழிகாட்டி புரட்சிகள் செய்யும்
புதுமை நாயகன் எம் வலம்புரி
அரசியல் முதல் அராஜகம் வரை
அம்பலத்திற்கு இழுத்து வந்து
சொல்லாலே அடி கொடுக்கும்
அரியாசனம் கொண்ட
அற்புதத்தான்தான்
எம் வலம்புரி

**அ.நளினாசினி**
**சுண்டுக்குளி ம.க.**

## உண்மை காதலின் அர்த்தம்

நான் துவண்டு விழும் போதெல்லாம்
நம்பிக்கை வார்த்தை தந்து
துளிர்விடச் செய்தாய்
தோல்வி கண்டு அழுவதற்கு
மடிதந்தாய் மறுகணமே
மழையளவு நம்பிக்கை துளி தந்தாய்
வெற்றிவாகை சூடிவந்த போது
வீராங்கனையாய் திலகமிட்டாய்
வேகம் கொண்டு எழுந்த போது
அமைதியை நினைக்க வைத்தாய்
மனிதனாய் நான் வாழ- காதலியே
காதல் எனும் விழி தந்து
உலகப் புள்ளியதில்
என்னை இணைய வைத்தாய்

**த.தனுஷனன்**
**கண்ணகி நகர்**



## உத்தமபுத்திரன்

பத்து மாதம் எனைச் சுமந்து-தான்
பட்ட பாட்டை உடன் மறந்து
பசி துறந்து தாலாட்டுப்பாடி
பண்புடனே பாலூமூட்டினாள்
நான் படிக்க நாளும் விரும்பி
மனதினிலே ஆசை அரும்பி
என்னை வளர்த்த அன்னை மனதில்
ஆண்டவன் வாழும் நந்தவனமே
கஷ்டமென்று வந்தபோது
கைகொடுக்கும் அன்னை உள்ளம்
உண்மைவழி எனை வளர்த்த
உத்தமியே எந்தன் தாயே
பிரிவின் வலி நான் உணர்ந்து
கல்விப் பாதையில் நான் நடந்தேன்
விடுமுறையில் மட்டும் அம்மா வீடு வந்து
உன்முகம் பாப்பேன்
உன் இலட்சியத்தை நிறைவேற்ற
உருகுகின்றேன் உள்ளத்திலே
உலகமெலாம் உன் பெயர் சொல்ல அம்மா
உயர்ந்திடுவேன் உத்தமனாய்

**எம்.ரி.தனுஷனன்**
**மகாதேவா ஆச்சிரமம்**

## இமயம் தொட...

எப்போது சுயநலம்
உன் பேனா முனையில்
குடிகொள்கிறதோ- அப்போதே
உன் அழிவை நீயே தேடுகிறாய்
என்றே பொருள் படும்
உன் எழுத்தால்
ஏழை வாழ்வை உயர்த்து
உன் வங்கிக் கணக்கை
உயர்த்தாதே!
சிந்தி... செயற்படு...

மாவை. நா.கஜேந்திரன்

## விடியல்

கரு நிறத்தாள் எடுத்து
இடையிடையே சிமிட்டும்
கணவரைந்து- நடுவே அவள்
அழகு முகம் வரைந்தேன்
அந்நொடி ஐயோ!- கொடிய
தீப்பிழம்பு பட்டு கருகித் துகளானது
அள்ளி விதைத்த
நட்சத்திரம் கொண்டு
அழகு மிளிர்ந்த இரவு வானம்
காலையில் கருகி சாம்பலானதும்
சூரியன் தீப்பிழம்பு பட்டுத்தானா...?

**பா.கௌரீசன்**
**அல்வாய்**



# மௌனத்தின் தேடல்– 227

## தெய்வம் யார்?

கண் கண்ட தெய்வம்
கண்முன்னே கலங்கி நிற்க
பூச்சூடி அலங்கரித்து
பூஜைக்கு கோயிலுக்கு
புறப்படும் பெண்ணே!
பெற்றவரே முதல் தெய்வம்
புரியாதா உன் சிந்தைக்கு?

*வன்னியூர் சோபா*
*விசுவமடு*

## எப்போது உணர்வாய்?

பெற்றவ ரானதாலுனைப்
பிறறென் றெண்ணாது
முத்தென முதுகிலேற்றியணைத்தவர்
சேயினரால் வெறுக்கப்பட்ட
சோதனையில்...
பூச்சூடிப் பட்டாடையணிந்து
பக்தியெனப் பாசாங்கு செய்பவளே!
பேரன்பிலாப் பிள்ளையென ஊராருனை
பேசுவதுணர்வதெப்போது?

*வீ.வினிஸ்*
*பண்டத்தரிப்பு*

## இரத்தல்

இரத்தலும் இரங்கலும்
இப்புவியில் புதிதல்ல
இல்லாமையும் இயலாமையும்
காரணமுமல்ல
கருமமாற்றி பொருளீட்ட
எத்தனை மார்க்கமிருந்தாலும்
ஏய்த்தலும் ஏமாற்றுதலும்
எம்மவர்களின் கலையாகுதே
ஏமாளிகளாக நாமிருக்கும் வரையா?

*அராலியூர்*
*சோ.சிவகுமாரன்*

## பசி தீராதோ!

தலையில் மலர் சூடி
கையில் பழம் ஏந்தி
உள்ளே இறைவனைக்
காணச் செல்கிறாய்
ஒருவாய் அமுதிற்காய்
உன்னையே தெய்வமாக்க
வெளியில் காத்து நிற்போரை காணாது

*தமிழ்த்தோழி*
*இரா.ஜெயறூ*

## பசுமை நினைவினிலே

அழகென்னும் பருவத்திலே
ஆயிரம் ஆசைகள்
அலைமோதும் வேளையிலே
முதுமையென்ன
முதுநரையென்ன
பசுமை கொள்ளும்
நினைவினிலே
முதியோரை
பரவசமூட்டுகிறது
தமிழ்ப்பண்பாடு

*எஸ்.ஆர்.ராம்கி*
*கிளிநொச்சி*

## கேள்விக்குறி???

பெத்த பிள்ளைகளால்
ஒதுக்கப்பட்ட நான்
தெருவிலே நாயாய்
தவித்திருக்க
பெண்ணே நீ..
என்னை நோக்கி வர
காரணம் தெரியாத என்
கண்களில் உன் உருவம்
கேள்விக்குறியாய்...???

*த.மோகனரூபன்*
*யா/ விக்டோறியா [illegible]*

## உண்மை சுடும்

நின்று கதைப்பதற்கும்
சிறிதுமில்லை நேரம்
என்று சொல்லி ஓடும்
இன்றைய இயந்திர வாழ்வில்
அதிகம் யோசிக்கின்றவர்கள்
வயோதியராய்த்தானிருக்கும்
பிறந்தவர் யாவரும் இறப்பதுவுமுண்மை
அதுவரை இரக்கத்தோடு இருப்போமென்று
அன்னை தெரேசா கூறியதை
உன்னிப்பாயுணர்ந்தால்
வயோதிபம் என்றென்றும்
தயவோடு கவனிக்கப்பட்டு
வரலாறு படைக்கும்

*க.நாகராசா*
*நுணாவில்*

## புதுமைப்பெண்ணே

சுவாசிக்கின்ற காற்றுப்போல
எல்லா உயிர்கட்கும்
யாசிக்கின்ற ஏழைக்கும்
யோசிக்காமல் கருணை காட்டு
ஆனால் நீ நேசிப்பவர்களின்
உண்மை புரியாமல்
விசுவாசித்து
அபயகரம் காட்டினால்
நட்பாலும் காதலாலும
தூசிக்கப்பட்டு விடுவாய்
என்பதை மறந்து விடாதே

*க.அபர்ணா*
*வட்டுக்கோட்டை*

## அழியாத காதல்

காதல் கொண்டேன் ஆதலினால்
கருத்து தடுமாறியதால்
மோதல் வந்து சேர்ந்திடவே
மோடாகிய தன்மையாகினேன்
இத்தனை காலம் பொறுத்திருந்தும்
இனி என் வாழ்வு கேள்வியோ?
என்றிருந்தேன்
காதல் தினத்தில் மீண்டும் நீ
கிடைத்ததும் நன்றன்றோ
இளமையில் முதுமை வந்தாலும் இனி
முன்னின்று வழி காட்டிட
நானிருக்கின்றேன் வா வாழ்வோம்


*பொ.புனிதன், வரியப்புலம்*

## கேள்விக்குறி

மண்பட்ட பாதமெல்லாம் வழிமீது வாடிக்கிடந்து
நீ கண்ட காதலைக் கரம்பிடித்தாய்
அக்கணவாளன் பணம் கேட்டு விளையாட
என் மகளின் வாழ்வு

*தாவடி, நி.கவிஅழகன்*

# மௌனத்தின் தேடல் –228



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 05.11.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூஜை – சினிமா விமர்சனம்




ஸ்கார்ப்பியோ துரத்தல், அரிவாள் சீவல், வில்லன் விரட்டல், முஷ்டி முறுக்கல் என அதே "ஹரிபரி ஹரி' திரைக்கதையோடு ஒரு சினிமா. இந்த முறை அரிவாள் தூக்கியிருப்பது: விஷால், ஸ்பாட்: கோவை, பெயர்: "பூஜை'... அவ்வளவே வித்தியாசம்! கோயில் அறங்காவலர் போர்வையில் கூலிப் படையை வைத்து கொலைத் தொழில் செய்யும் முகேஷ் திவாரி, 'யதார்த்தமாக' விஷாலுடன் மோத, அது பெரும் பகையாக மூள... பிறகு என்ன, அடிதடி சரவெடிதான்! 'சிங்கம்' துப்பாக்கி, 'வேல்' குடும்ப சென்டிமென்ட், "தாமிரபரணி' அரிவாள் என பழைய மசாலாவில் கூகுள் மேப், யூடியூப் அப்லோடு, பீகாரி வில்லன், கூலிப் படை ஸ்கெட்ச் என சமீப டிரெண்டு சேர்த்திருக்கிறார் இயக்குநர் ஹரி. கடமுட் வென சுழலும் கமரா, கணக்கிட முடியாத ஷாட்கள், செவுள் கிழிக்கும் சவடால் வசனங்கள்...

என படம் முழுக்க "பிளட் பிரஷர்' எகிறவைக்கிறார்கள். "என்ன இவ்ளோ நேரமா பனை மரம் ஒண்ணும் சாயலையே?' என நினைக்கும்போது, சரியாக ஒரு கார் பறந்து வந்து ஒரு பனையை முறிக்கிறது!

விஷால் படத்தில் நடித்திருக்கிறார் என்பதைவிட, "அடித்திருக்கிறார்". நெகுநெகு உயரத்துடன் ஓங்கி உயர்ந்த முஷ்டியால் வில்லன்களை அடிக்கும்போது, நிஜமாகவே பொறி பறக்கிறது. ஆனால், படம் முழுக்க பொறி மட்டுமே பறந்து கொண்டிருக்கிறது. ஹரி படத்தின் நாயகி "மாடர்ன் மகாலட்சுமி'தானே. இதில் ஸ்ருதி அப்படி வருகிறார். டூயட்களில் மட்டும் அள்ளு கிளப்புகிறார்! சூரி, பாண்டி, இமான் கூட்டணி ஆரம்பத்தில செம கடி. போதையில் சலம்பி அடி வாங்கி, பிறகு எதுவுமே நடக்காதது போல, "அப்புறம் பங்காளி... நல்லா இருக்கியா? உடம்பைப் பார்த்துக்கோ' என சூரி உதார் விடுவது... கெத்து! சத்யராஜ், ராதிகா, ஜெயப்பிரகாஷ், கௌசல்யா, அபிநயா என பல பலே நடிகர்கள். ஆனால், படத்தின் "பில்லர்'களாக இல்லாமல், "ஸ்பேஸ் ஃபில்லர்'களாக வந்துபோகிறார்கள்.

மூன்று அடுக்கு கூலிப் படை அசைன்மென்ட், விஷால் வில்லனை வெளுக்கும் வீடியோவை இணையத்தில் பார்த்து பாட்னாவில் இருந்து கிளம்பிவரும் இளைஞன்... என சில இடங்களில் மட்டுமே விறுவிறு ட்விஸ்ட். ஏனைய சமயங்களில் திகீர், பகீர், படீரெனத் தீப்பிடித்தபடியே கிடக்கிறது திரைக்கதை. அதிலும், "நல்ல குடும்பத்துல பிறந்த நீயே இப்படி இருக்குறேன்னா.. என் தாத்தன் ஒரு மொள்ளைமாரி, என் அப்பன் ஒரு முடிச்சவிக்கி. அப்ப நான் எப்படி இருப்பேன்?' என வில்லன் அடிக்கும் பன்ச... அடிச்சுக்கவே முடியாது. அடிச்சுக்கவே முடியாது! ஒளிப்பதிவு, பாடல்கள், எடிட்டிங் என எல்லாமே "டூ மினிட்ஸ் ஃபாஸ்ட் ஃபுட்' போல பரபரக்கின்றன.


படம் எக்ஸ்பிரஸ் வேகத்தில் பயணிக்க வேண்டியதுதான். ஆனால் அதற்காக அவசர அவசரமாக காமெடி பண்ணி சிரித்து... காதலித்து... வில்லன் கும்பலை அடித்து... மாறி மாறி சவால் விட்டு...

ஏம்ப்பா.. ஏன் நீங்க இப்படியே பண்ணிட்டு இருக்கீங்க?!

# தல 55 இன் தலைப்பு ரெடி...

கௌதம் மேனன் இயக்கத்தில் அஜித் குமார், அனுஷ்கா, த்ரிஷா மற்றும் பலர் நடித்து வரும் திரைப்படத்தின் டைட்டில் என்னை அறிந்தால் என்பது 30ஆம் திகதி 12 மணி ஆனதும் அறிவிக்கப்பட்டது. இத்திரைப்படத்தின் தலைப்பு அறிவிக்கப்பட்ட சில நிமிடங்களிலேயே டிவிட்டரில் என்னை அறிந்தால் தலைப்பு டிரெண்டிங்கில் வந்து விட்டது.

அடுத்த அரை மணி நேரத்திற்குள்ளாகவே இந்திய அளவிலும், பின்னர் உலக அளவிலும் என்னை அறிந்தால் திரைப்படப் பெயரை அஜித் ரசிகர்களும் சினிமா ரசிகர்களும் கமெண்ட்டுகளை அள்ளி வழங்கி விவாதிக்க ஆரம்பித்து விட்டனர். திரைப்படங்களின் விளம்பர யுக்தியில் சமீப காலமாக சமூக வலைத்தளங்கள் பெரும் பங்கு வகித்து வருகின்றன. அதில் படத்தின் தலைப்பையே இந்த அளவிற்கு பேச வைத்திருப்பது இதுவே முதல் முறை.



காம்னா ஜெத்மலானி


## வலைபாயுதே



தலை தீபாவளி வித் டிடி



'ருத்ரம்மா தேவி' சூட்டிங் முடிஞ்சிருச்சு !



பீ கேர்ஃபுல் என்னைச் சொன்னேன்...

## கத்தி இந்தி ரீமேக்கில் எந்த நடிகர் நடிக்கலாம்

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய், சமந்தா, நீல் நிதின் முகேஷ் நடித்து வெளியான படம் 'கத்தி'. தீபாவளி சிறப்பாக வெளியான 'கத்தி' வசூலில் சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது. இப்படத்தின் கரக்டர் குறித்தும் , படம் குறித்தும் நீல் நிதின் முகேஷ் பதிலளித்துள்ளார்.

அப்போது 'கத்தி' கதை இந்தியில் ரீமேக் செய்யப்பட்டால் அதில் நடிக்க சல்மான்கான் அல்லது அமீர்கான் பொருத்தமாக இருப்பார்கள்.


மாஸ் ஹீரோ என்றால் இவர்கள் இருவரும் சரியான தேர்வு. சமந்தா ரோலில் தீபிகா படுகோனை நடிக்க வைக்கலாம் என கூறியுள்ளார் நீல் நிதின் முகேஷ். ஆனால், வில்லன் நான் தான். நானே இந்தியிலும் வில்லனாக நடிக்க ஆர்வமாக உள்ளேன் என கூறியுள்ளார் நீல் நிதின் முகேஷ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படேல் இல்லையெனில் காந்தி முழுமை பெற்றிருக்க மாட்டார்

## மோடியின் சர்ச்சைக்குரிய பேச்சு

(சென்னை)



சுவாமி விவேகானந்தர் இல்லாமல் ராமகிருஷ்ண பரமஹம்சர் பூர்த்தி அடையாதவர் போல் தெரிந்திருப்பார், அதே போல்தான் சர்தார் படேல் இல்லையேல் மகாத்மா காந்தியும் பூர்த்தி அடையாதவர் போல் தெரிந்திருப்பார் என பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றியுள்ளார்.

சர்தார் படேலின் 139ஆவது பிறந்த தினமான நேற்று முன்தினம் டில்லி ராஜபாத்தில் தேச ஒற்றுமை ஓட்டத்தை கொடியசைத்துத் தொடங்கி வைத்த பிரதமர் நரேந்திர மோடி இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த தேச ஒற்றுமை நிகழ்ச்சியில் வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ், வெங்கையா நாயுடு ஆகிய மத்திய அமைச்சர்களும், கிரிக்கெட் வீரர் கவுதம் கம்பீர் மற்றும் குத்துச் சண்டை வீரர் சுஷில் குமார் உள்ளிட்ட விளையாட்டு வீரர்களும் பங்கேற்றனர். வழக்கம் போல் பள்ளிக் குழந்தைகள் விழாவை அலங்கரித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி உரையாற்றும் போது, தாய் நாட்டிற்கு சேவை புரிவது என்ற ...ணமே சர்தார் படேலின் வாழ்க்கை. உண்மையில் நவீன இந்தியாவை உருவாக்கியவரே சர்தார் படேல தான்.

படேலின் வாழ்க்கைப் பயணம், தாய்நாட்டிற்கான அர்ப்பணிப்பு மற்றும் ஆழமான தைரியம் ஆகியவற்றால் ஆனது. வரலாற்றை மறக்கும் நாடு வரலாற்றை உருவாக்கி முன்னேற்றம் காண முடியாது. எனவே வேட்கை நிரம்பிய இந்த நாட்டில், கனவுகளை சுமந்து கொண்டிருக்கும் இளைய சமுதாயம் கொண்ட இந்த நாட்டில், வரலாற்றின் ஆளுமைகளை நாம் மறக்கலாகாது. வரலாற்றையும், பாரம்பரிய பெருமைகளையும் நமது கருத்தியல்களுக்கேற்ப பிரித்தல் கூடாது" என்றார்.

இந்திரா காந்தியின் நினைவாக, "நாட்டின் சக குடிமகன்கள் மற்றும் பெண்களுடன் இந்திரா காந்தியின் இன்றைய 'புண்ணிய திதி'யில் நினைவுகூர்கிறேன்" என்றார்.

அதன் பிறகு இந்திரா காந்தி படுகொலைக்கு பிறகு நடந்த சீக்கியர்களுக்கு எதிராக வெடித்த வன்முறைகள் பற்றி சூசகமாக அவர் தெரிவிக்கையில், "சர்தார் படேல் எந்த தேசியத் தலைவரின் பிறந்த தினத்தில், 30 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவின் ஒருமைப் பாட்டை குலைக்கும் சம்பவம் நிகழ்ந்தது துரதிர்ஷ்டவசமானது.

அந்த நாளில், நம் மக்கள் கொல்லப்பட்டனர். அது, ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவர்கள் இருதயத்தில் ஏற்படுத்திய காயம் மட்டுமல்ல, நாட்டின் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பெருமை மிக்க பாரம்பரியம் மற்றும் பண்பாட்டின் மீது குத்தப்பட்ட வாள்" என்றார். சர்தார் படேல் பிறந்த தினமான ஒக்டோபர் 31ஆம் திகதி இனிமேல் தேசிய ஒருமைப்பாடு தினம்' என்று அனுசரிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மலேசிய ஏர்லைன்ஸ் அரசுக்கு எதிராக மாணவர்கள் இருவர் வழக்குத்தாக்கல்

மாயமான மலேசிய விமானம் 370இல் பயணித்த தன் தந்தை தொடர்பாக எந்தவிதத் தகவலும் தெரிவிக்கவில்லை என்பதால், மலேசியாவைச் சேர்ந்த இரு சிறார்கள், மலேசிய ஏர்லைன்ஸ் மற்றும் அரசுக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளனர்.

இந்த விமானம் மாயமாகி 8 மாதங்கள் ஆகின்றன. அதன் பிறகு, இந்த விமானத்தில் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டவர்களின் உறவினர் ஒருவர் முதல் முறையாக இவ்வாறு வழக்கு தொடர்ந்துள்ளார். ஜீ கின்சன் (வயது 13), ஜே கின்லாண்ட்(வயது 11) இருவரும் நாட்டின் விமானப் போக்குவரத்துத் துறையின் மெத்தனம் மற்றும் அக்கறையின்மை குறித்து தங்கள் மனுவில் குறிப்பிட்டு வழக்கு தொடர்ந்துள்ளனர். கடந்த மார்ச் 8ஆம் திகதி கோலாலம்பூர் முதல் பீஜிங் வரை சென்று கொண்டிருந்த விமானம் குறித்து குறிப்பிட்ட அந்த நேரத்துக்குள் தொடர்பு கொணடு காப்பாற்ற வழியிருந்தும் கோட்டை விட்டதாக மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

8 மாதங்கள் பொறுத்துவிட்டோம். நிபுணர்கள் பலரிடம் பேசிய பிறகு, வழக்கு போட முகாந்திரம் இருப்பதை உணர்ந்து கொண்டோம். இவ்வளவு தொழில் நுட்பம் வளர்ந்துள்ள இந்தக் காலத்தில், ஒரு பெரிய விமானம் மறைந்து போவதென்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல... என்று குறிப்பிட்டுள்ள அந்த சிறுவர்கள், தங்கள் மன உளைச்சலுக்கும், ஆதரவின்மைக்கும், தங்கள் தந்தை ஜீ ஜிங் ஹாங் இல்லாமல் தாங்கள் வலியுடன் வாழ்ந்து வரும் நிலைக்குமாகக் கூறி, தங்கள் தந்தை பார்த்து வந்த இணைய தொழில் மூலம் மாதந்தோறும் கிடைத்த 17 ஆயிரம் ரிங்கிட் வருமானம் போனதாகவும் கூறி இந்த வழக்கை அவர்கள் தொடர்ந்துள்ளனர்.

இந்த விமானத்தில் பயணம் செய்தவர்களில் 3இல் 2 பங்குக்கும் அதிகமானோர் சீனர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இந்திரா காந்தியின் நினைவுதினத்தில் பங்கேற்காதது மோடியின் குறுகிய மனப்பான்மையை காட்டுகின்றது

## காங். கடும் தாக்கு

சீக்கிய பாதுகாவலர்களால் 31-10-1984 அன்று சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் 30ஆவது நினைவு நாள் நேற்று முன்தினம் நாடு முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் இந்திரா காந்தியின் நினைவு தினத்தன்று பிரதமர், மத்திய அமைச்சர்கள் ஆகியோர் புதுடில்லியில் உள்ள இந்திரா சமாதிக்கு சென்று அஞ்சலி செலுத்துவது வழக்கம். மாநில அரசுகளின் சார்பில் கொடுஞ்செயல் ஒழிப்பு உறுதி மொழியும் எடுத்துக் கொள்ளப்படும்.

ஆனால், இந்த ஆண்டு இந்திரா நினைவு நாளை மத்திய அரசு புறக்கணித்தது. இந்திரா நினைவு நாளையொட்டி டில்லியில் உள்ள அவரது சமாதியில் அரசு பதவியில் உள்ள ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, துணை ஜனாதிபதி அமித் அன்சாரி ஆகிய இருவர் மட்டும் அஞ்சலி செலுத்தினார்கள். பிரதமர் மோடியோ, மத்திய அமைச்சர்களோ இந்திரா சமாதிக்கு சென்று அஞ்சலி செலுத்தவில்லை.

மோடியின் இந்த போக்குக்கு காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த பாராளுமன்ற மேல்சபை காங்கிரஸ் துணைத்தலைவர் ஆனந்த் சர்மா, 'இந்தச் செயல் நாட்டுக்காக தங்களது உயிரை தியாகம் செய்தவர்களுக்கு இழைக்கப்படும் அவமரியாதையாகும். குறிப்பாக, இந்த நாட்டின் ஒற்றுமைக்காக உயிரை தந்த இந்திராகாந்தியை அவமதிப்பது என்பது சின்னப் புத்தித்தனமானது.

இத்தகைய செயலின் மூலம் மோடிக்கும், பா.ஜ.க.வுக்கும் எத்தகைய எண்ணம் உள்ளது என்பதை தெரிந்து கொள்ள முடியும்' என்று கூறினார். (இ-5)

# தொடர் குண்டு வெடிப்பு

## 15 பேர் பலி

ஈராக் தலைநகர் பக்தாத்துக்கு அருகிலுள்ள சந்தைப் பகுதிகளில் நேற்று முன்தினம் நிகழ்த்தப்பட்ட தொடர் குண்டு வெடிப்புகளில் 15 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

புறநகர்ப் பகுதியான சுவெபில் உள்ள ஆட்டுச் சந்தையில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 5 பேர் உயிரிழந்தனர்.

பக்தாத்தின் மற்றோர் புறநகர்ப் பகுதியான ராதவ்நியாவின் கடை வீதியில் நிகழ்த்தப்பட்ட குண்டு வெடிப்பில் இருவரும், அந்த நகருக்கு அருகிலுள்ள மதாயினில் நிகழ்த்தப்பட்ட குண்டு வெடிப்பில் 4 பேரும் உயிரிழந்தனர்.

பக்தாத்துக்கு 20 கி.மீ. தொலைவிலுள்ள யூசிஃபியா நகரில் நிகழ்த்தப்பட்ட குண்டு வெடிப்பில் 4 பேர் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதல்களில் 33 பேர் காயமடைந்தனர்.

**பீஜி நகரில் இராணுவம் முனனேற்றம்:** ஈராக்கின் எண்ணெய் வளம் நிறைந்த, சன்னி பிரிவினர் அதிகம் வசிக்கும் பீஜி நகரின் முக்கிய பகுதிகளை இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) அமைப்பிடமிருந்து இராணுவம் மீட்டதற்குப் பதிலடியாக இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஈராக்கில் மூன்றிலொரு பகுதியைக் கைப்பற்றியுள்ள ஐ.எஸ். பயங்கரவாதிகளிடமிருந்து, ஷியா தன்னார்வப் படையினரின் உதவியுடன் பீஜி நகரின் முக்கிய பகுதிகளை கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு இராணுவம் கைப்பற்றியது.

கடந்த ஜூன் மாதமே பீஜி நகரம் ஐ.எஸ்ஸிடம் வீழ்ந்தாலும், அந்த நகரின் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை பயங்கரவாதிகள் நெருங்கவிடாமல் இராணுவம் தடுத்து வந்தது.

அந்த நகரம் அமைந்துள்ள சலாதீன் மாகாண மக்கள் தொடர்பு அதிகாரி கூறுகையில், பீஜியின் மாநகர முதல்வர் அலுவலகத்தையும், பொலிஸ் நிலையத்தையும் ஈராக் ராணுவம் மீட்டுள்ளது.

எனினும், நகரின் பிறபகுதிகளில் தொடர்ந்து சண்டை நடைபெற்று வருகிறது என்றார்.

பக்தாத்துக்கு 250 கி.மீ. தொலைவில் இந்த பீஜி நகரம் அமைந்துள்ளது. (இ-5)

# பேருந்து விபத்தில் 10 பேர் பலியாகினர் 30 பேர் படுகாயம்

நேபாளத்தின் மத்திய பகுதியில் இரண்டு பயணிகள் பேருந்துகள் ஒன்றுக்கொன்று நேருக்கு நேர் மோதியதில் ஒரு ரஷ்ய பெண் உட்பட 10 பேர் பலியாகினர். மேலும், 30 பேர் படுகாயம் அடைந்தனர்.

நேபாளத்தின் தலைநகர் காத்மணடில் இருந்து 120 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மாக்வான்பூர் மாவட்டத்தின் பாசாமதி பகுதியில் தேசிய நெடுஞ்சாலையில் இந்த விபத்து நேற்றுக்காலை நடைபெற்றது. இதில் 10 பேர் பலியாகினர் மேலும் 30 பேர் காயம் அடைந்தனர். காயம அடைநதவர்களில் 12 பேர் அருகில் உள்ள பரத்பூர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக அங்குள்ள இணையத்தள செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விபத்தில், தரியா மோஜ்க்வா என்ற ரஷ்ய நாட்டை சேர்ந்த பெண்ணும் உயிரிழந்தார் என்று தெரிவித்தனர். மேலும், பேருந்துகளில் ஒன்றின் ஓட்டுநர் அதிவேகத்தில் பேருந்தை செலுத்தி வந்ததுதான் விபத்துக்கு காரணம் என்று முதல்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (இ-5)

# தண்டவாளத்தினை சேதப்படுத்திய 2ஆயிரம் மீனவர்கள் மீது வழக்கு

கடந்த 2011ஆம் ஆண்டு மீன் பிடிக்க சென்ற 5 மீனவர்களை இலங்கை கடற்படை சிறைபிடித்ததோடு அவர்கள் போதைப்பொருள் கடத்தியதாக வழக்குப் பதிவு செய்தது. இந்த வழக்கில் கொழும்பு நீதிமன்றம் 5 மீனவர்களுக்கு தூக்குத் தண்டனை விதித்தது.

இதனால் அதிர்ச்சி அடைந்த இராமேஸ்வரம், தங்கச்சிமடம் பகுதியை சேர்ந்த மீனவர்கள் வீதி மறியலில் ஈடுபட்டனர். அப்போது நடந்த வன்முறையில் அரசு பேருந்து ஒன்று எரிக்கப்பட்டது. மேலும் தங்கச்சிமடத்தில் 300 மீற்றர் தொலைவுக்கு புகையிரத தண்டவாளங்கள் கடுமையாக சேதப்படுத்தப்பட்டன. தண்டவாளங்கள் பெயர்ந்தும், ஸ்லீப்பர் கான்கிரீட் ஆகியவை உடைக்கப்பட்டதால் இராமேஸ்வரத்துக்கு புகையிரத போக்குவரத்து அடியோடு நிறுத்தப்பட்டது.

இதையடுத்து விரைந்து செயற்பட்ட ரயில்வே அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் போர்க்கால அடிப்படையில் தண்டவாளங்களை சரி செய்தனர். இதனால் நேற்று காலை 11 மணியளவில் மீண்டும் புகையிரத போக்குவரத்து தொடங்கியது.

18 மணி நேரத்துக்கு பின்னர் புகையிரத போக்குவரத்து தொடங்கியது. இதனால் புகையிரத் பயணிகள் கடும் சிரமத்திற்குள்ளாகினர். புகையிரத தண்டவாளங்கள் சேதப்படுத்தியது தொடர்பாக ரயில்வே மற்றும் மாவட்ட பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இது தொடர்பாக தங்கச்சிமடம் பகுதியை சேர்ந்த மீனவர்கள் உட்பட 2ஆயிரம் பேர் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. (இ-5)

# பில்கேட்ஸ் சொத்தை செலவிட 218 ஆண்டுகள் தேவைப்படும்

ஆக்ஸ்பாம் நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் மைக்ரோசொப்ட் நிறுவுநர் பில்கேட்ஸ் ஒரு நாளுக்கு ஒரு மில்லியன் டொலர்கள் செலவு செய்தால் அவரது மொத்த சொத்து மதிப்பை தீர்க்க 218 ஆண்டுகள் ஆகும் என தெரிய வந்துள்ளது.

இதேபோல் உலக செல்வந்தர்களுள் ஒருவரான கார்லோஸ் ஸ்லிம், ஒரு நாளுக்கு ஒரு மில்லியன் டொலர் என்ற கணக்கில் செலவிட்டால் அவரது சொத்து மதிப்பை 220 ஆண்டுகளில் செலவிடமுடியும். வாரென் பப்பெட் இதே முறையில் 169 ஆண்டுகளில் அவரது செல்வத்தை செலவிட முடியும்.

ஆக்ஸ்பாம் நிறுவனம் நடத்திய இந்த ஆய்வில், பொருளாதார மந்தநிலையின் போது உலக பில்லியனர்களின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு 794 ஆக இருந்த உலக பில்லியனர்களின் எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டு ஆயிரத்து 645 ஆக மாறியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

உலக செல்வந்தர்களாக திகழும் பில்கேட்ஸ், வாரென் பப்பெட் ஆகியோர் சமூக நல மற்றும் அறப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

பில்கேட்ஸ் நடத்தி வரும் பில் மற்றும் மெலிண்டா அறக் கட்டளைக்கு 2014 ஆம் ஆண்டில் மட்டும் வாரென் பப்பெட் 3 பில்லியன் டொலர்களை நன் கொடையாக வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் விடுதலைக்கு நடவடிக்கை எடுங்கள்

## மதுரை ஆதீனம் கோரிக்கை


தூக்குத்தண்டனை விதிக்கப் பெற்ற 5 மீனவர்களை விடுதலை செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மதுரை ஆதீனம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

தமிழக மீனவர்களுக்கும், இலங்கை கடற்படையினருக்கும் பல்லாண்டு காலமாகவே பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு நிரந்தர தீர்வு காண வேண்டும் என நாம் பல்லாண்டு காலமாக சொல்லி வருகின்றோம். மக்கள் முதல்வர் அம்மாவும் வலியுறுத்தி வருகிறார்.

ஏனைய நாடுகளில் போதைப்பொருள் கடத்தியதாக பலருக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பெற்றுள்ளது என காரணம் சொல்ல வேண்டாம். ஏனைய நாடுகளில் பிரச்சினை வேறு, இலங்கைக்கும், இந்தியாவுக்கும் உள்ள தொடர்புகள் வேறு. எனவே மத்திய அரசு தலையிட்டு தூக்குத்தண்டனையை இரத்து செய்து, தமிழக மீனவர்களை விடு தலை செய்திட வேண்டும். அதற்கான முழு ஏற்பாடுகளையும் உடனே செய்ய முன்வர வேண்டும் என மத்திய அரசை கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு மதுரை ஆதீனம் தெரிவித்துள்ளார். (இ-5)

## அந்தியேட்டி அழைப்பு

பிறப்பு 19 06 1936



இறப்பு 04 10 2014

**அமரர் திரு. சுப்பிரமணியம் சந்திரசேகரம்**

(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)

04.10.2014 சனிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதி நிகழ்வில் கலந்து, ஆறுதல் கூறி உறுதுணை புரிந்த உறவினர்-நண்பர்களுக்கும் துண்டுப்பிரசுரம் வெளியிட்டு அஞ்சலி செலுத்தியோர், தொலைபேசியூடாக அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றிகள்! அத்துடன் அனைவரையும் 03.11.2014 திங்கட்கிழமை காலை 7 மணிக்கு கல்லூரி வீதி, தாமரைக்குளத்தடி அந்தியேட்டி மடத்தில் நடைபெறும் கிரியைகளிலும், தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

'உடையார் வாசா'
ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

(சி-8938)

ச.இராஜேஸ்வரி (மனைவி),
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## விசேட சலுகை

வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி எமது வாடிக்கையாளர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 வரை மாபெரும் விசேட விலைக் கழிவுடன் தங்களது விளம்பரங்களை எமது பத்திரிகையில் பிரசுரிக்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.

**முழுப்பக்கம், அரைப்பக்கங்களிற்கு மாத்திரமே இவ் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.**

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு:- 021 2217 603
021 5671 532
Valampuriijaffna@gmail.com



# LED

Buy same item 10pcs Get 10% Discount

6 Months Warranty

SPECIAL PRICE FOR WHOLESALE BUYERS

Rs120/=

LED Display Board - 6"x 36"
Rs.8250/=





SLIM Panel Light
3w Rs.390/= | 6w Rs.690/=
12w Rs.990/= 18w Rs.1250/=



PLASTIC LED BULB
3W Rs.120/= | 5W Rs.210/=
7W Rs.260/= | 9W Rs.360/=
12W Rs.420/= | 15W Rs.550/=
18W Rs.750/=



LED Fexible Strip
Light 5metre
Rs.1550/=





LED Rotating Bulb
Rs.290/=



LED Aluminum Bulb
3W Rs.230/=
5W Rs.330/=
7W Rs.430/=
9W Rs.630/=



Surface Mounted LED Panel light
3W Rs.690/= | 6W Rs.890/=
12W Rs.1390/= | 18W Rs.1590/=



TV STAND
Rs.7500/=



Size 14-32
Rs.650/=
Please Call
Office Time
Mon-Sat
9:00AM - 6:00PM

SMART ELECTRONICS (PVT) LTD.
No 65/1, 1st Cross Street, Colombo 11.
Tel : 0112470400 Hotline : 0727949246
www.smartelectronics.lk

Jaffna - 0212223857, 0727949242
Kotahena - 0112396100


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மனச்சாட்சியை ஏமாற்றாமல் வாழ்பவனே உண்மையான வீரன். அவனது வெற்றி உறுதியானது. ஜேம்ஸ் கிளார்க்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பொலிஸாரிலும் தமிழ் - சிங்களம் என்ற பாகுபாடு இருக்க முடியுமா?

இந்த நாட்டில் பேரினவாதம் இத்துணை தூரம் தலைவிரித்தாடுவதற்கு மூல காரணம் படைத்தரப்பினர் பேரினவாத சிந்தனையுடன் செயற்படுவதாகும்.

நாங்கள் படையினர்; எங்களின் கடமை பொதுமக்களைப் பாதுகாப்பது என்று நினைத்தால் இனவாதம் என்ற நோய் என்றோ நின்று போயிருக்கும்.

ஆனால் பொலிஸார் மற்றும் படைத்தரப்பினர் எப்போதும் – எந்தக்காலத்திலும் தமிழர்கள் – சிங்களவர்கள் என்று பாகுபடுத்திப்பார்த்தனர். ஒரு சிலர் விதிவிலக்காக இருந்தாலும் படைத்தரப்பில் இருக்கக் கூடிய பெரும்பாலானவர்கள் இனவாத போக்குடனேயே செயற்படுகின்றனர்.

இரண்டு தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் ஓட்டுமடம் பகுதியில் ஒரு விபத்துச் சம்பவம் இடம்பெற்றது. விபத்தில் ஒருவர் உயிரிழந்து போக, சம்பவ இடத்தில் பெரும் களேபரம்.

களேபரத்தைக் கட்டுப்படுத்துவது பொலிஸாரின் கடமை என்பது மறுப்பதற்கில்லை. அதற்காக வீதியில் போய்வருவோர் மீதெல்லாம் பொலிஸாரும் இராணுவத்தினரும் தாக்குதல் நடத்துவதென்பது எந்த வகையில் நியாயமாகும்?

அதிலும் சம்பவம் நடந்த இடத்தில் செய்தி சேகரிப்பதற்காகச் சென்ற செய்தியாளரைப் பொலிஸார் தாக்குவதென்பது திட்டமிட்ட செயலாக மட்டுமே இருக்க முடியும். தான் ஒரு ஊடகவியலாளர் என்று தெரியப்படுத்திய பின்னரும் தாக்குதல் நடத்தப்படுகிறதெனில் படைத்தரப்பினரிடம் இருக்கக்கூடிய காழ்ப்புணர்வு இன்னமும் குறைந்தபாடில்லை என்பது நிரூபணமாகிறது.

தமிழர்கள் என்றால் அவர்களை எப்படியும் தாக்கலாம் என்ற நினைப்போடு படையினர் தொடர்ந்தும் செயற்படுகின்றனர் என்பதற்கு ஓட்டுமடத்தில் நடந்த சம்பவம் நல்ல எடுத்துக்காட்டு.

இதற்கெல்லாம் காரணம் பொதுமக்கள் – தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தும் படையினர் மீது உரிய நடவடிக்கைகளை உயரதிகாரிகள் எடுக்காமை என்பது நிறுதிட்டமான உண்மை.

பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துகின்ற பொலிஸார் மற்றும் படைத்தரப்பினரிடம் விளக்கம் விசாரணைகள் நடத்தப்படுமாயின் அதன்பொருட்டேனும் இவர்கள் தங்களை கட்டுப்படுத்திக்கொள்வர்.

ஆனால் தமிழர்கலைளத் தாக்குவதே பதவி உயர்வுக்கான சான்றிதழ் என்ற எழுதாத யாப்பு படைத் தரப்பில் இருக்கும் போது, எப்படியும் நடந்து கொள்ளலாம் என்ற அங்கீகாரம் படையினருக்கு கிடைக்கிறது.

வட பகுதியில் அடிக்கடி நடந்து வரும் விபத்துச் சம்பவங்களைத் தடுப்பதற்கு பொலிஸார் எடுத்த நடவடிக்கைகள் என்ன என்பது இதுவரை தெரியாமல் உள்ளது. வட பகுதியில் ஒவ்வொரு நாளும் விபத்தும் உயிரிழப்பும் நடக்கும் போது விபத்துச் சம்பவங்களைச் சாட்டாக வைத்து பொதுமக்களைத் தாக்கும் பொலிஸ் – இராணுவம் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இது தவிர ஒரு சில தமிழ்ப் பொலிஸார் பேரினவாதத்தின் கால் கழுவுவதுதான் வேதனையிலும் வேதனை. ஓட்டுமடத்தில் நடந்த விபத்துச் சம்பவத்தில் பொதுமக்களைக் கண்டபாட்டில் கெட்டவார்த்தைகளால் தூற்றியவர் சில வருடங்களுக்கு முன்னர் பொலிஸ் சேவையில் இணைந்து கொண்ட ஒரு தமிழர் என்பதை இந்த இடத்தில் சுட்டிக் காட்டுவது மிகவும் அவசியமானது.

எத்தனையோ தமிழ் இளைஞர்கள் மண் மீட்புக்காகப் போராடி தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த இந்த மண்ணில் இந்தப் பிரகிருதி இவ்விதம் நடந்து கொண்ட முறைமையை நினைக்கும் போது நம் இனமே நமக்கு கேடு என்று எண்ணத் தோன்றும்.

எதுவாயினும் பொலிஸார், படையினர் என்போர் தங்கள் கடமைகளை இன, மத, மொழி வேறுபாடின்றி செய்ய வேண்டும். இது மிகவும் முக்கியமானது.

## நிலச்சரிவு ஆபத்து தொடர்பில் தமக்கு அறிவிக்கப்படவில்லை

### பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் தெரிவிப்பு

(கொழும்பு)

கொஸ்லந்தை மீரியபெத்த தோட்ட பிரதேசத்தில் நிலச்சரிவு அபாயம் இருப்பதாக அந்த பிரதேசத்திற்கு பொறுப்பான தோட்ட நிறுவனத்திற்கு உரிய முறையில் அறிவிக்கப்படவில்லை என இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் தலைவர் ரொஷான் ராஜதுரை தெரிவித்துள்ளார்.

இப்படியான ஆபத்தான இடங்களில் இருக்கும் மக்களுக்கு மாற்று காணிகளை வழங்க பெருந்தோட்ட நிறுவனங்கள் எப்போதும் தயாராக உள்ளன.

சம்பந்தப்பட்ட தோட்ட நிர்வாகத்திற்கு ஆபத்து குறித்து முன்கூட்டியே அறிவித்ததாக கூறுகின்றனர். ஆனால் அவ்வாறு தெரியப்படுத்தப்படவீல்லை.

உரிய முறையில் மண்சரிவு ஆபத்து இருக்கின்றது என்று தெரியப்படுத்தியிருந்தால், நாங்கள் மாற்று காணிகளை அந்த மக்களுக்கு வழங்கியிருப்போம். ஏற்கெனவே அப்படி வழங்கியும் இருக்கின்றோம்.

இது சம்பந்தமான பொறுப்புகளை அரசாங்கத்தின் தலைமையில் மேற்கொள்ள வேண்டும். வீடுகளை நிர்மாணித்து கொடுக்க அரசாங்கமும் ஏனைய நிறுவனங்களும் எமக்கு உதவ வேண்டும்.

தனியார் மயப்படுத்தலுடன் வீடுகள் தொடர்பான பொறுப்பு அரசாங்கத்தினுடையது. அது குறித்து ஆராய்ந்து பார்க்கும் பொறுப்பு எமக்கு உள்ளது. எனினும் எங்களால் மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்து கொடுக்கும் இயலுமை இல்லை எனவும் ரொஷான் ராஜதுரை தெரிவித்தார். (இ-5)

## மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்படுவர்

### அமைச்சர் அமரவீர திட்டவட்டம்

ஆபத்தான இடங்களில் தங்கியிருக்கும் மக்கள் பலவந்தமாகவேனும் வெளியேற்றப்படுவர் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கி வரும் பிரதேசங்களில் வாழ்ந்து வரும் மக்கள் பலவந்தமாக அகற்றப்படுவர். அவ்வாறு அகற்றப்படுவோர் மாற்றுக் காணிகளில் குடியேற்றப்படுவர்.

ஆபத்தான பிரதேசங்களில் வாழ்ந்து வரும் மக்கள் பற்றிய தகவல்களை வழங்குமாறு தேசிய கட்டட நிர்மாண ஆய்வு நிறுவனத்திற்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாட்களுக்குள் இந்த விபரங்கள் கோரப்பட்டுள்ளது.

மிக ஆபத்தான, ஆபத்தான மற்றும் குறைந்தளவு ஆபத்தான பிரதேசங்கள் என மூன்று வலயங்களாக பிரிக்கப்படவுள்ளன.


இந்தப் பணிகள் சுலபமானதல்ல எனினும், மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக் கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (இ-5)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

"நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்."

*–வாரன் பஃவெற் (அமெரிக்க தொழிலதிபர்)*

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



### சொல்லு சிவமே

கொல்லாமை பெரிதென்று சொல்லு சிவமே
கூசாமல் எவர்முன்னுஞ் செல்லு சிவமே
நல்லோர் நடுவிருக்கச் சொல்லு சிவமே
நாமே யனைத்துமென்று சொல்லு சிவமே
உல்லாசமாயெங்குஞ் செல்லு சிவமே
உண்மைமுழுதுமென்று சொல்லு சிவமே
கல்லார்க்குங் கதியென்று சொல்லு சிவமே
கட்டிம னத்தையாளச் சொல்லு சிவமே.

## "இறந்த பின்னும் வாழும் வழிகளை உருவாக்குவோம்!"

கத்தோலிக்கத் திருச்சபை ஒவ்வொரு வருடமும் வரும் இன்றைய நாளை இறந்தோரை நினைவுகூரும்படி சகல ஆத்துமாக்கள் திருநாள் தினமாக பிரகடனப்படுத்தி (கார்த்திகை 2) நினைவு கூருகிறது. இன்று உத்தரிக்கிற ஆத்துமாக்களை நன்றியோடு நினைக்கவும் அவர்களுக்காக செபதளங்களில் ஈடுபடவும் உத்தரிப்பு நிலையிலுள்ள ஆத்துமாக்கள் இறைவனின் கருணையைப் பெற்று முடிவில்லா வாழ்வை சுதந்தரித்துக் கொள்ளவும் வேண்டிநிற்கிறது.

பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே உள்ள வாழ்வை இறைவனின் கொடையாக கருதும் மனிதர் அவ்வாழ்வு பிறருக்கும் பயன் விளைவிக்க வேண்டுமென முயல்கின்றனர். இயற்கையில் மனிதப் பிறப்பு வாழ்வின் தொடக்கமாகவும் இறப்பு முடிவாகவும் இருக்கிறது.

### பரமபிதா காட்டிய பாதை

இரண்டுமே மனித வரலாற்றை உருவாக்குகின்றன. "பிறர்க்கென்று வாழா நாள் பிறவா நாளே" என்ற எண்ணமும் மனநிலையும் செயற்பாடுமே நம்மைப் புனிதர்களாக வாழச் செய்யும்.

மனித குலத்தை மீட்க, மானிட மகனாக இவ்வுலகில் வாழ்ந்த இயேசு, சிலுவையில் அறையுண்டு இறந்தார் பிறகு மூன்றாம் நாள் மகிமையுடன் உயிர்த்தெழுந்தார். இதன் மூலம், தான இறைமகன் என்பதை மனித சமுதாயத்துக்கு எடுத்துக்காட்டினார்.

இந்த மறையுண்மையே கத்தோலிக்க சமயத்தின் அடிப்படைத்தத்துவமாகும். இவ்வுலகை விட்டு மறைந்தாலும், மனிதர்கள் மறுவுலகில் நிலை பெற்று வாழ்வர் என்பதை உணர்த்தவே இயேசு கிறிஸ்து இறந்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.


இயேசு தாம் உயிரோடிருக்கும் போது செய்த மற்றுமொரு புதுமை நிகழ்ச்சியின் மூலம் இவ்வுண்மையைத் தெளிவாக விளக்குகிறார்: இயேசு அவரது நண்பரான இலாசர் இறந்த செய்தியைக் கேட்டு அவனது சகோதரிகளான மார்த்தா, மரியா ஆகியோருக்கு ஆறுதல் கூறுவதற்காக பெத்தானியா என்னும் ஊருக்குச் சென்றார். அவரைக் கண்டதும் மார்த்தா அழுது கொண்டே, ஆண்டவரே நீர் இங்கேயிருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்கமாட்டானே என்று உருகினாள்.

இயேசு அவளிடம், "உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்வோர் இறப்பினும் வாழ்வர்.... என்றுமே சாகமாட்டார்" என்று கூறினார். பின்பு கல்லறைக்குச் சென்ற அவர் இறந்த லாசரின் கட்டுக்களை அவிழ்க்கச் சொல்லியபின் அவனை உயிரோடு எழுப்பினார்.

இந்த விசுவாசக் கொள்கையின் காரணமாகவே கத்தோலிக்கர்கள் இறந்தோரைப் புதைக்கும் கல்லறைகளைத் புனிதமாக கருதிவருகின்றனர்.

ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 2ஆம் திகதியை இறந்தோரை நினைவு கூரும் முகமாக தங்கள் உற்றார், உறவினர், நண்பர்களின் கல்லறைகளை நன்கு கழுவி சுத்தம் செய்வதுடன் மெழுகுவர்த்தி ஏற்றி மன்றாடவும் செய்கின்றனர். இறைவனின் அருகில் வாழும் பேறுபெற்ற இந்த ஆன்மாக்களிடம் நாம் வேண்டினால், நினைத்த காரியங்கள் நிறைவேறும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே இவ்வாறு செய்கின்றனர்.

மனிதர்களுடைய வாழ்நாள் குறுகியது. பயனற்றது.



நிழலைப் போல் மறைவது. எனவே உற்றார் வீதியில் அழுது புலம்ப நீ முடிவற்ற ஓய்வுக்குச் செல்லும் முன்னர், உன்னைப் படைத்தவனை உள்ளத்தில் நினைத்து உன்னை தயார் செய்து கொள் என்கிறது பைபிள்.

இறந்த பின்னும் இறைவன் நிழலில் வாழ விரும்புவோர் செய்ய வேண்டியது பற்றி வள்ளுவர் கூறுவதுபோல்: "நாச் செற்று விக்குள் மேல் வாராமுன் நல்வினை மேற்சென்று செய்யப்படும்" அதாவது நாவடைத்து விக்கல் வரும் இறுதி நேரம் வருமுன் அறத்தை விரைந்து செய்ய வேண்டும். வற்றாமல் அன்பு செலுத்துவதிலே, வரம்பின்றிக் கொடுப்பதிலே, வருந்துவோர்க்கு உதவுவதிலே வாழ்நாளைச் செலவிட வேண்டும்.

தன்னலமின்றி பிறருடன் கூடி உழைக்க வேண்டும். துன்பம் பிறர்க்கு என்றால், அது நம் தோளில் நின்று கனக்க வேண்டும்.

மிகச் சிறியோராகிய என் சகோதரர், சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்று இயேசு கூறுவதை வாழ்க்கையில் கடைப்பிடித்தால், இறப்பினும் வாழும் பேறு பெற்றவர் ஆவோம் என்பதில் ஐயமில்லை.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியா -இலங்கை ஒரு நாள் போட்டி

## இன்று ஆரம்பம்





மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணி சமீபத்தில் இந்தியப் பயணத்தை பாதியில் இரத்து செய்து விட்டு நாடு திரும்பியது. இதைத் தொடர்ந்து இலங்கை அணிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அந்த அணி இந்தியாவுடன் 5 ஒருநாள் போட்டியில் விளையாடுவதற்காக இந்தியா வந்துள்ளது.

இந்தியா- இலங்கை அணிகள் மோதும் முதல் ஒருநாள் போட்டி ஒரிசா மாநிலம் கட்டாக்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவு ள்ளது.

இந்திய அணியின் கப்டன் டோனிக்கு முதல் 3 போட்டிக்கு ஓய்வு கொடுக கப்பட்டுள்ளது. இத னால் விராட் கோலி கப்டனாக நியமிக் கப்பட்டுள் ளார்.

சமீபத்தில் மேற்கிந்திய தீவுக்கு எதிராக சிறப்பாக விளையாடியதால் இந்திய அணி வெற்றியுடன் கணக்கை தொடங்குமா? என்று எதிர் பார்க்கப்படுகிறது. மேலும் இலங்கை அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத தில் இந்திய ஏ வெற்றி பெற்று இருந்ததால் நம்பிக் கையுடன் இருக்கிறது.

விராட்கோலி ரஹானே, ரெய் னா, அம்பதி ராயுடு, ஷிகார் தவான், ஜடேஜா ஆகியோர் பட்டிங்கிலும் உமேஷ் யாதவ், அஸ்வின், அமித் மிஸ்ரா ஆகியோர் பந்து வீச்சிலும் பலம் சேர்ப்பார்கள்.

காயமடைந்த விக்கெட் கீப்பர் விர்த்திமான் சகா உடல் தகுதி பெற்றுள்ளார். இதனால் இன்றைய போட்டியில் அவர் ஆடுவார்.

இந்திய அணிக்கு எல்லா வகையிலும் இலங்கை சவாலாக விளங்கும் .ஏனென்றால் ஜெயவர்த்தன, சங்கக்கார, கப்டன் மத்யூஸ், டில் சான் , திசர பெரேரா போன்ற சிறந்த வீரர்கள் அந்த அணியில் உள் ளனர்.

பகல் இரவாக நடைபெறும் இந்த ஆட்டம் பிற்பகல் 1.30 மணிக்கு தொடங்குகிறது. பனிப்பொழிவால் 5 ஆட்டங்களுமே ஒரு மணி நேர தத்துக்கு முன்னதாக தொட ங்குகிறது.


இந்திய அணி வீரர்கள் வருமாறு, இந்தியா: (கப்டன்) விராட்கோலி ரஹானே, ரெய்னா, அம்பதி ராயுடு, ஷிகார் தவான், ஜடேஜா உமேஷ் யாதவ், அஸ்வின், அமித் மிஸ்ரா விர்த்தி மான்சகா இஷாந்த் சர்மா, குல்கர்னி, முரளி விஜய் , அஸ்கர் பட்டேல் வருண் ஆரோன்.

இலங்கை: ஜெயவர்த்தன, சங்கக்கார, (கப்டன்) மத்யூஸ், டில் சான் , திசர பெரேரா, உபுல் தரங்க ,சதுரங்க டி சில்வா, நிரோசன், லகிருகாம்கே, குலசேகர , ரந்தீவ் குசல்பெரேரா, ஆசான் பிரிய ரஞ்சன, தமிகா பிரசாத், பிரசன்னா.



அமரர் சியானி ஞாபகார்த்தமாக அவரது தந்தையான வலிகாமம் வலய முன்னாள் உடற்கல்விப் பணிப்பாளர் கே.நடராஜா அவர்களால் தேசிய மட்டத்திற்கு முன்னேறியுள்ள யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலய 17 வயது உதைபந்தாட்ட அணிக்கு சீருடை வழங்கி கௌரவிக்கப்பட்டிருப்பதனை படத்தில் காணலாம். (க-78)

# ஏ.டி.பி. உலக டெனிஸ் ஆன்டி முர்ரே தகுதி



பாரிஸ் மாஸ்டர்ஸ் சர்வதேச டெனிஸ் போட்டி பிரான்சில் நடந்து வருகிறது. இதில் நடந்த ஒற்றையர் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் 4ஆம் நிலை வீரர் சுவிட்சர் லாந்தின் வாவ்ரிங்கா, 18ஆம் நிலை வீரர் தென் ஆபிரிக்காவின் கெவின் ஆண்டர்சனுடன் மோதினார். 2 மணி 50 நிமிடங்கள் நீடித்த திரிலிங்கான இந்த மோதலில் அவுஸ்திரேலிய ஓபன் சம்பியனான வாவ்ரிங்கா 7-6 (2). 5-7, 6-7 (3) என்ற செட கணக்கில் .ஆண்டர்சனிடம் அதிர்ச்சிகரமாக தோல்வியை தழுவினார்.

மற்றொரு ஆட்டத்தில் இங்கிலாந்தின் முன்னணி வீரர் ஆன்டி முர்ரே 6-3, 6-3 என்ற நேர் செட்டில் கிரிகோர் டிமிட்ரோவை (பல்கேரியா) வீழ்த்தி கால் இறுதிக்குள் நுழைந்தார். இந்த வெற்றியின் மூலம் அவர் லண்டனில் நடைபெறும் டொப்-8 வீரர்கள் மட்டுமே கலந்து கொள்ளும் ஏ.டி.பி. உலக டூர் இறுதி சுற்றுக்கு போட்டிக்கும் தகுதி பெற்றார். ஜோகோவிச், ரோஜர் பெடரர், வாவ்ரிங்கா, மிலோஸ் ராவ்னிக் ஆகியோர் ஏற்கனவே இந்த போட்டிக்கு தகுதி பெற்றிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# முரளிக்கிண்ண கிரிக்கெட் போட்டி முடிவுகள்

இலங்கையிலுள்ள கிராமப் புறங்களில் விசேடமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள துடுப்பாட்ட வீரர்களின் திறனை ஊக்குவிக்கும் வகையில் நடத்தப்படும் முரளி ஒற்றுமை கிண்ண இருபதுக்கு 20 துடுப்பாட்ட போட்டிகள், வட மாகாணத்திலுள்ள மைதானங்களில் கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

அதனடிப்படையில், கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள் வருமாறு,

### ஆனந்தா கல்லூரி அணி வெற்றி

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் ஆனந்தா கல்லூரி அணியினை எதிர்த்து பிறின்ஸ் ஒவ் வேர்ள்ஸ் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆனந்தா கல்லூரி 20 பந்து பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 147 ஓட்டங்களை பெற்றது. எஸ். அஸான் 71 ஓட்டங்களை பெற்றார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பிறின்ஸ் ஒவ் வேர்ள்ஸ் கல்லூரி அணி 17.4 பந்து பரிமாற்றங்களில் 114 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

### மேரிஷ் ஸ்டெல்லா அணி வெற்றி

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற போட்டியில் மேரிஷ்ஸ்ரெல்லா கல்லூரி அணியை எதிர்த்து தேவபத்திராஜ கல்லூரி அணி மோதியது.



மழை பெய்த காரணத்தால் 5 பந்து பரிமாற்றங்கள் கொண்ட போட்டியாக இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேரிஷ் ஸ்ரெல்லா கல்லூரி அணி 5 பந்து பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 40 ஓட்டங்களை பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தேவபத்திராஜ கல்லூரி அணி 5 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 33 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

### சீனிகம சென்.பீற்றர்ஸ் ஆட்டம் சமநிலை

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் சீனிகம இணைந்த பாடசாலைகள் அணியை எதிர்த்து சென். பீற்றர்ஸ் கல்லூரி அணி மோதியது. இந்த போட்டியும் மழை காரணமாக 8 பந்து பரிமாற்றங்கள் இடம் பெற்றன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சீனிகம அணி 8 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 67 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.பீற்றர்ஸ் அணி 8 பந்து பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 67 ஓட்டங்களையே பெற்றது.

இருந்தும், மேலதிக ஒரு பந்து பரிமாற்றம் கொடுக்கப்பட்டு அதில் சென்.பீற்றர்ஸ் அணி வெற்றி பெற்றது.

### றிச்மண்ட் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் காலி றிச்மண்ட் கல்லூரி அணியை எதிர்த்து கரந்தெனிய மத்திய கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கரந்தெனிய மத்திய கல்லூரி அணி 20 பந்து பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 120 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றிச்மண்ட் கல்லூரி அணி 13.5 பந்து பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் கே.ஐ. சி.அஷலங்க 63 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தனர்.

### யாழ்ப்பாண இணைந்த அணிகள் வெற்றி

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் யாழ்ப்பாண பாடசாலைகள் இணைந்த அணியுடன் சர்வதேச பாடசாலைகள் இணைந்த அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சர்வதேச பாடசாலைகள் இணைந்த அணி 19.2 பந்து பரிமாற்றங்களில் 72 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண பாடசாலைகள் இணைந்த அணி 18 பந்து பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

### பதுளை-மொனராகலை இணைந்த பாடசாலைகள் வெற்றி

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெற்ற போட்டியில் பதுளை - மொனராகலை இணைந்த பாடசாலைகள் அணியை எதிர்த்து கிளிநொச்சி ,முல்லைத்தீவு இணைந்த பாடசாலைகள் அணி மோதியது.

முதலில்துடுப்பெடுத்தாடிய பதுளை- மொனராகலை இணைந்த பாடசாலைகள் அணி 19 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 112 ஓட்டங்களை பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி ,முல்லைத்தீவு இணைந்த பாடசாலைகள் அணி 19 பந்து பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 99 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது.

### மொனராகலை இணைந்த அணிகள் வெற்றி

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் மொனராகலை இணைந்த பாடசாலைகள் அணியை எதிர்த்து மன்னார், வவுனியா இணைந்த பாடசாலைகள் அணி மோதியது. மழை காரணமாக 5 பந்து பரிமாற்றங்கள் கொண்ட போட்டியாக இந்த போட்டி இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார், வவுனியா இணைந்த பாடசாலைகள் அணி 5 பந்து பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 37 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய மொனராகலை இணைந்த பாடசாலைகள் அணி 3.5 பந்து பரிமாற்றங்களில் 4 இலக் குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

### திருகோணமலை மட்டக்களப்பு இணைந்த அணி வெற்றி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் திருகோணமலை - மட்டக்களப்பு இணைந்த அணியை எதிர்த்து பண்டாரவளை சென்.தோமஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருகோணமலை - மட்டக்களப்பு இணைந்த அணி19.4 பந்து பரிமாற்றங்களில் 121 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் பி.டனிக் 55 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.தோமஸ் அணி 15.1 பந்து பரிமாற்றங்களில் 66 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

தெரிவுப்போட்டிகள் நடைபெற்று தொடர்ந்து இறுதிப்போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7 மாவட்ட...

இரத்தினபுரி, கேகாலை,மாத்தளை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மக்கள் கூடிய அவதானத்துடன் செயற்படுமாறு அந்த நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை கொத்மலை, டன்சினன் தொழிற்சாலைக்கு உட்பட்ட பகுதியில் மண்சரிவு அபாயம் ஏற்படுவதை தொடர்ந்து 92 குடும்பத்தினர் இடம்பெயர்ந்து தேயிலை தோட்ட தொழிற்சாலைக்கு அருகில் உள்ள மண்டபத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். 92 குடும்பங்களை சேர்ந்த 400 பேர் இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளனர்.

குறித்த தோட்டத்தில் உள்ள லயன் குடியிருப்புகள், தனிவீடுகள், புதிதாக அமைக்கப்பட்ட மாடிவீடுகள் போன்ற வீட்டின் நிலம் தாழ்ந்து காணப்பட்டு சுவர்களிலும் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ள இடத்திற்கு விஜயம் செய்த கட்டிட ஆய்வு பிரிவினர், பரிசோதனைகள் செய்த பின் மேற்படி இடம் மண்சரிவு ஏற்பட வாய்ப்பு இருப்பதாக தெரிவித்துள்ளனர். (செ-11)

## தேர்தல் ஒது...

பட்ஜெட் தொகையாக 360 கோடியே 10 இலட்சம் ரூபாயை ஒதுக்கியுள்ளது.

இதில் தேர்தல் திணைக்களத்துக்கான தொகையாக 3 கோடி 60 இலட்சம் ரூபாயாகும். மேலும் தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு ஊதியமாக 126 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் திணைக்களம் கடந்த 2013 ஆம ஆண்டில் 135 கோடி ரூபாயும் 2014 இல் 208 கோடி ரூபாயும் ஒதுக்கியது. வரும் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடத்தத் திட்டமிட்டிருப்பதால் தேர்தல் திணைக்களத்தின் செலவு அதிகரிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## பாப்பரசர்...

இது தொடர்பில் கத்தோலிக்க சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஏற்கெனவே பாப்பரசரின் விஜயத்தின் போது தேர்தல்கள் இடம்பெறுமானால் அது அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு விடக்கூடும் என்ற கோரிக்கை அரசாங்கத்திடம் விடுக்கப்பட்டுள்ளது.

பாப்பரசரின் விஜயத்துக்கு முன்னால் தேர்தல் நடக்குமானால் அது அவரின் விஜயத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தாது. எனவே பாப்பரசரின் விஜயத்துக்கும் தேர்தலுக்கும் இடையிலான கால இடைவெளியை அதிகரிக்குமாறு தாம் கோரியிருப்பதாக கத்தோலிக்க சபை குறிப்பிட்டுள்ளது.

எனினும் இதற்கான தீர்மானத்தை அரசாங்கமும் தேர்தல்கள் ஆணையாளருமே மேற்கொள்ள முடியும்.

எனவே இந்த விடயத்தில் கத்தோலிக்க திருச்சபை எவ்வித அழுத்தங்களையும் கொடுக்கவில்லை என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம் அரசாங்கத்தரப்பில் இருந்தோ ஜனாதிபதியோ அல்லது வேறு எவருமோ பாப்பரசரின் விஜயத்தை பிற்போடுமாறு தமக்கு அழுத்தம் தரவில்லை என்று கத்தோலிக்க திருச்சபை குறிப்பிட்டுள்ளது. (செ-11)

## தேர்தலில் மகி...

னத்தை எதிர்த்து வாக்களித்த லங்கா சமசமாஜக் கட்சியின் 13 உறுப்பினர்கள் கடந்த 29 ஆம் திகதி ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியதுடன் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மாதுளுவாவே சோபித தேரரை ஆதரிக்க போவதாக அறிவித்துள்ளனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து ஜனாதிபதித் தேர்தலை நடத்தாது பொதுத் தேர்தலை நடத்தினால் மகிந்தவுக்கு ஆதரவு வழங்கப்படும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

அதேவேளை மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவதா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்காக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி எதிர்வரும் 9 ஆம் திகதி கூடி ஆராயவுள்ளது.

இந்த கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் மகிந்தவுக்கு ஆதரவு வழங்குவதை எதிர்ப்பதாகவும் தெரியவந்துள்ளது. (செ-11)

# ஆஸிக்கு எதிரான டெஸ்ட் பாகிஸ்தான் சிறப்பாட்டம்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில், 370 ஓட்டங்கள் முன்னிலையில் பாகிஸ்தான் அணி வலுவான நிலையில் உள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (யு.ஏ.இ.,) சென்றுள்ள பாகிஸ்தான், அவுஸ்திரேலியா அணிகள் அங்கு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. டுபாயில் நடந்த முதல் டெஸ்டில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கும் நிலையில், இரண்டாவது டெஸ்ட் அபுதாபியில் நடக்கிறது. முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட் இழப்புக்கு 570 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. நேற்று முன்தினம் இரண்டாம் நாள் முடிவில் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் ஒரு விக்கெட்டுக்கு 22 ஓட்டங்கள் எடுத்திருந்தது. டேவிட் வோர்னர் (16), நேதன் லியோன் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் நடந்தது. முதல் இன்னிங்சை தொடர்ந்த அவுஸ்திரேலிய அணி 261 ஓட்டங்களுக்கு சுருண்டது. துடுப்பாட்டத்தில் மார்ஷ் 87, கிளார்க் 47 ஓட்டங்களை எடுத்தனர்.

பாகிஸ்தான் சார்பில் இம்ரான் கான் 3 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

பின், 309 ஓட்டங்கள் முன்னிலையுடன் தமது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய பாகிஸ்தான் அணி மூன்றாம் நாள் முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 61 ஓட்டங்கள் எடுத்து, 370 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது. அசார் அலி (21), யூனிஸ் கான் (16) ஆட்டமிழக்காமல் இருந்தனர். போட்டியின் 4 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)


★★★ HOTEL LUX ETOILES

Lux Pizza, Francisco Varano Group

**LUXHOT & COOL BAR**

Special rate reduction offers to celebrate our 03rd Year anniversary

Only one hotel & its branches preparing dishes after the orderplaced. Since the beginning we always prepare pre orders only. Do not hurry to taste delicious food. "Wait a bit & Enjoy a lot"

| | |
|---|---|
| # Fried Rice (chicken, beef, mixed, sea food (one portion per one person) | Rs.280.00 |
| # Fried Noodles ( chicken, beef,mixed,sea food (One portion per one person) | Rs.280.00 |
| # Sri Lankan omelet | Rs.140.00 |
| # Chicken Omelet | Rs.200.00 |
| # French fries with ketchup | Rs.250.00 |
| # Chicken Devilled | Rs.320.00 |
| # Beef Devilled | Rs.320.00 |
| # Sausage Devilled | Rs.320.00 |
| # Prawns Devilled | Rs.320.00 |
| # Fish Devilled | Rs.320.00 |
| # Cuttle Fish Devilled | Rs.320.00 |
| # Hot Butter Cuttle Fish | Rs.320.00 |
| # Mushroom Devilled | Rs.180.00 |
| # Honey Mushroom | Rs.180.00 |
| # Chicken Fry | Rs.320.00 |
| # Fish Fry | Rs.320.00 |
| # Prawns Fry | Rs.320.00 |
| # Beef Fry | Rs.320.00 |
| # Sausage Fry | Rs.320.00 |
| # Fish Fingers | Rs.180.00 |
| # Chicken Drumstick | Rs.180.00 |
| # Chicken Chinese Roll | Rs.180.00 |
| # Fish Chinese Roll | Rs.180.00 |
| # Vegetable Chines Roll | Rs.180.00 |
| # Chicken Nuggets | Rs.180.00 |
| # Sea Food Soup | Rs.250.00 |
| # Chicken Soup | Rs.250.00 |
| # Mixed Vegetable Soup | Rs.250.00 |
| # Green Chilly, Onion, Capsicum Pakoda | Rs.180.00 |
| # Mixed Vegetable Pakoda | Rs.200.00 |

(The above rates are subject to 10% of service charge)

Note:for the guest who will be enjoying our dishes, outside beverages acceptable without any corkage chargers except soft drinks.

## மீண்டும் ஓர் நற்செய்தி

நமது விடுதியிலோ அதன் கிளைகளிலோ ஆரம்ப காலத்தில் இருந்து அன்றும் இன்றும் என்றும் எவ்வித உணவும் முன்கூட்டியே தயார் செய்து பரிமாறியதும் இல்லை. பரிமாறப் போவதும் இல்லை. உங்கள் தேவைக்கேற்றபடி வேண்டுகோளுக்கிணங்க இறைச்சி வகைகளோ, கடலுணவோ, காய்கறியோ வாடிக்கையாளரின் கோரிக்கையின் கீழ் உங்களைக் காக்க வைத்தோ இல்லை. உங்கள் முன்னிலையிலே சுத்தமாகவும் சுவையாகவும் சேவை புரியும் ஒரே ஒரு விடுதி Hotel Lux Etoiles உம் அதன் கிளைகளும் மட்டுமே என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இத்துடன் வெளியில் இருந்து கொண்டுவரும் நீங்கள் விரும்பிய உள்நாட்டு வெளிநாட்டுப் பானங்களை எங்கள் உணவுடனும் குளிர் பானங்களுடனும் கலந்து அனுபவிக்கும் போது அதற்கேற்ப கட்டணமும் பரிமாறல் கட்டணமும் மட்டுமே அறவிடப்படும். வேறு எக்கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

# this special offer valid up to 31st December 2014 only
# 15% discounts will be offered to the LUX a' la carte menu

01. Hotel Lux Etoiles
No.34 Chetty Street Lane,
Nallur, Jaffna.
Tel : 021 222 3966, 072 222 3966
Fax : 021 222 0606
Email : luxetoiles@yahoo.com
www.luxetoiles.com

**கிளைகள்**

02. Cargills food City
2ம் மாடி, யாழ்ப்பாணம்.
03. சுன்னாகம் Cargills முன்பாக
K.K.S Road.
04. நல்லூர் கோவில் முன்பாக
(Pure Veg.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொஸ்லந்தை...

இதேவேளை, கொஸ்லந்தை மீரியபெத்த வில் ஏற்பட்ட மண்சரிவு தொடர்பான விசா ரணை அறிக்கையை ஒரு வாரத்திற்குள் ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கின்றது.

குறித்த மண்சரிவு தொடர்பில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமை யில் பொலிஸ் குழுவொன்று விசாரணை களை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்து ள்ளார். (செ-11)

# ஐரோப்பிய...

வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் பீரிஸ் மேலும் கூறியவை வருமாறு,

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்ற வழக்கில் இலங்கை பிரதிவாதியல்ல. ஏனைய 28 நாடுகள்தான் பிரதிவாதிகளாக உள்ளன. விடுதலைப் புலிகள் தான் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

எனவே, இந்த வழக்கில் இலங்கையும் ஒரு பிரதிவாதியாக இணைய வேண்டி வரும். அதற்காக நாம் ஒரு கோரிக்கையை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்துக்கு முன்வைக்க வேண்டும். அதன்பின்பே எமது வாதங்கள், ஆதாரங்களை முன்வைக்கலாம்.

ஆனால், வெளிநாட்டு நீதிமன்றம் ஒன்றின் முன்பாக எமது நாட்டை அடிபணிய வைக்க நாம் தயாரில்லை. எமது நாட்டின் இறைமை, சுயவிருப்பம், கௌரவத்தை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தின் முன்பாக அடிபணிய வைக்கமாட்டோம். அவ்வாறு நாம் செய்வோமாக இருந்தால் அது எமது நாட்டுக்குப் பெரும் பாதகமாக அமைந்துவிடும்.

இந்த வழக்கில் நாம் ஒரு தரப்பாக இல்லா விட்டாலும் இதில் பிரதிவாதிகளாக குறிக்கப்பட்டுள்ள 28 நாடுகளின் தூதுவர்களையும் இலங்கையில் சந்தித்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம் என தனதுரையில் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# பதுளை...

அவர் குறிப்பிட்டார்.

நிலச்சரிவுக்கு பின்னர் இதுவரை மொத்தத்தில் ஆறு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சகதியையும், இடிபாடுகளையும் அகற்றி மோப்ப நாய்களின் உதவியுடன் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் மீட்புப் பணிகள் கடுமையான மழை, மோசமான காலநிலை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பலர் தமது குடும்பங்களை மொத்தமாக இழந்திருக்கிறார்கள்.

பல குழந்தைகள் அநாதைகளாகியிருக்கும் நிலையில், அவர்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. (செ-11)

# 100 வாக்கு...

ஹட்டன் பகுதியில் உள்ள மக்கள் பட்டாசு வெடித்து தங்களது சந்தோஷங்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில் ஆளுங்கட்சி நூறு வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

இது தொடர்பான வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றபோது ஆளுங்கட்சிக்கு ஆதரவாக 157 வாக்குகள் கிடைத்துள்ளன. எதிராக 57 வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளன.

வரவு-செலவுத்திட்ட வாசிப்பின் மீதான இரண்டாம் கட்ட வாக்கெடுப்பில் ஜாதிக ஹெல உறுமய கட்சி பங்கேற்கவில்லை. அக்கட்சி வாக்கெடுப்பைப் புறக்கணித்திருந்தது. (செ-11)


Hey Kids! It's time for Visalam Cup Competitions!
Come on! Take part and prove your talents!
You could walk away with Cups, Certificates, Courses upto 100% off & CASH prizes of 1st - Rs. 4000/=, 2nd - Rs. 2500/=, 3rd Rs.1500/=

Competitions

ART
Theme: Care for our world
Drawings should be on an A4 size paper using your own materials

QUIZ
Math, Science, English, Tamil, History, Geography, ICT, Current affairs- Sri Lanka & World

English
Written : Vocabulary, Grammar, Essay, & Comprehension
Spoken : Poem, Vocabulary, Commands Sentence Making & Conversation

ICT
Paint, Typing, MS Office & MCQs

CHESS

Here's how to enter:
Minimum age to enter is 5 years; can enter any No.of competitions
Competitions will be in 3 levels - Under 7, Under 11 & Under 13
All entries must be submitted on an A4 paper with the following details on or before 30th November 2014:
Name, Age, Date of Birth, Address, Contact Number, Parent's Name
Entry Fee : Rs. 500/= (for each competition)
(C-8936)

Visalam
Locally, widening to beyond
127/1 Temple Road, Jaffna, Srilanka
Phone : 021 221 9695 Mobile : 075 979 9695
Email : admin@visalamholdings.com
web : www.visalamholdings.com


காணி விற்பனைக்கு
பலாலி வீதி உரும்பிராயில் 9.6 பரப்பு காணி விற்பனைக்குண்டு. பகுதியாகவும் பிரித்தும் விற்கப்படும்.
தொடர்புகட்கு:-0789138984

காட்டுக்கல் விற்பனைக்கு
யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் காட்டுக்கல் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-0766242695
(8214)

பதவிக்கான தேடல்
சர்வதேச ரீதியில் 30 வருட காலமாக இயங்கிவரும் Canadien நிறுவனத்தின் புதிய கிளைகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஆரம்பமாக இருப்பதால் 6 வகையான பதவி வெற்றிடங்கள் உள்ளன.
★அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன
★O/L, A/L படித்தவர்கள் உடனே அழையுங்கள்
0771908997, 0771882507
(C-8945)

அமெரிக்க அதிஸ்ட விசா
நாளையுடன் (03-11-2014) பதிவுகள் நிறைவடைகின்றன
இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
இந்த வருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு
இறுதி நாள் - உடனே விரையுங்கள்
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்
அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு பதிவுகள் இடம்பெறும்
கிளிநொச்சி - A9 வீதி - பழைய ஆஸ்பத்திரி முன்னால் 0771516537
யாழ்ப்பாணம் - 49A சப்பல் லேன் - பொது நூலகம் முன்னால் 0773867257
நெல்லியடி - மூடக்காட்டுச்சந்தி 0776699892
வல்வெட்டித்துறை - யாழ்வீதி - வல்வெட்டி 0776697960
(சி-8942)
குறைந்த கட்டணத்தில் V2 Travels and Tours (Pvt) Ltd
● அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள் ● உள்நாட்டு, வெளிநாட்டு தூதுபொதிகள் சேவை

LATVIA நாட்டிற்கான வீசா
சட்டஆலோசனையில் 100% வீசா வெற்றி


08.09.2014 மற்றும் 22.10.2014 அன்று எமது நிறுவனத்தின் விசா சட்டஆலோசனை மூலம் LATVIA நாட்டிற்கு விசாவை பெற்ற மாணவர்கள்
(C-8935)
குறிப்பு: மேற்படி LATVIA நாடானது செங்கன் நாடுகளில் ஒன்றாகும் என்பதுடன் கல்லூரி விடுமுறைக்காலங்களில் GERMAN, SWISS, FRANCE, ITALY, HOLAND, SPAIN, NORWAY ....etc ஆகியநாடுகளிற்கு சென்றுவரமுடியும்.
* UK நாட்டிற்கான VISA reject ஆன மாணவர்களும் LATVIA விண்ணப்பிக்க முடியும்
FEB INTAKE ற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
WORLD EDUCATION CONSULTANCY (WEC)
வீசா ஆலோசனை மையம் City&Guilds approved centre-UK
0779265447, 0217200989 web : www.wecgroups.com
please call 9am to 5pm Gov.reg.no: TN/DS/UC/0324
No - 377, sangathanai. (சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகே)

நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
மூன்று மாதமான தடுப்பூசி போடப்பட்ட சிற் சுஜி (SITZ SUI) இன நாய்க்குட்டிகள் (DULUX பெயின்ற் விளம்பரத்தில் வரும்) விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு:-
0772703383, 0774199903
(8217)

வேலைவாய்ப்பு
சிங்கப்பூர், மலேசியா, மொரிஷியஸ் நாடுகளில் படிப்புடன் கூடிய வேலை வாய்ப்பு
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
0767561346
(8181)

Dutch, Deutsch, French





தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்ப
★ French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
★ வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
★ Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
★ Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.
(C-8941)
Vivekananda Academy
அனைத்து புதிய வகுப்புகளும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)
Tel: 0213216928, 0774842464, 0212220393

STUDY MEDICINE IN RUSSIA
KRUSK STATE MEDICAL UNIVERSITY
➢ SLMC, WHO, UNESCO, AMC, US MEDICAL COUNCIL ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட முதற்தர பல்கலைக்கழகங்கள்
➢ இலங்கையிலிருந்து 700 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.
➢ ஆங்கில மொழிமூல கற்கைநெறிக்கான தங்கப்பதக்கம் வென்ற முதற்தர பல்கலைக்கழகம்
➢ மிகக்குறைந்த ஆரம்பக்கட்டணம்
➢ விண்ணப்பித்து இரண்டு மாதங்களில் ரஷ்யா செல்லலாம்
➢ VISA 100% உத்தரவாதம்
➢ விடுமுறை காலங்களில் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று வரக் கூடிய வாய்ப்பு
COSS Jaffna (pvt) Ltd, 381b, Stanley Road, Jaffna.
தொடர்புகளுக்கு:
Tel:-0212217552
0115644440 Fax:0212217553
Mob:0767561346
Email:Cossjaffna@gmail.com
(8180)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

Jet D Express
Courier Service






| | | |
|---|---|---|
| Sweeden | Over 5 Kg 1000/- | |
| Canada | Over 5 Kg 1100/- | |
| Norway | Over 5 Kg 1000/- | |
| Italy | Over 5 Kg 1000/- | |
| France | Over 5 Kg 1000/- | Over 11 Kg 750/- |
| Germany | Over 5 Kg 900/- | Over 11 Kg 700/- |
| London | Over 5 Kg 800/- | Over 11 Kg 600/- |
| Australia | Over 5 Kg 900/- | Over 11 Kg 750/- |
| Netharland | Over 5 Kg 1000/- | Over 11 Kg 800/- |
| Swiss | Over 5 Kg 1000/- | Over 11 Kg 850/- |
| Denmark | Over 5 Kg 1000/- | Over 11 Kg 800/- |

Note : 25Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட கட்டண சலுகை உண்டு.
உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடையும்..
*Note : கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும். வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
உலகின் முன்னணி சேவையின் ஊடாக உங்கள் உறவுகளுக்கு பொருட்களை அனுப்பிக்கொள்ளலாம்
(சி-8939)
குறிப்பு : கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் வீடுகளில் வந்து பெற்றுக் கொள்ளப்படும்.
இல. 27, முதலாம் மாடி, நவீன சந்தை (டைம்ரெக்ஸ் மேல்) யாழ்ப்பாணம். 021 221 9150, 0772187 301
No. 77E, Manning Place, Wellawatta, Colombo - 06. T.P : 0112363873, 0776067599


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.